179

வசந்தம்

விய, தை
ஜனவரி, 1947

JL
N47.5-10

எல்லா விதமான இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களுக்கும்!

ஆயுள், நெருப்பு, கப்பல், விபத்து

மோட்டார்கார் பிறர் மீது ஏறி விபத்தேற்பட்டாலும், மோட்டார்களுக்கு ஏற்படும் சகல விபத்துக்களுக்கும், நம்பிக்கைக்கு உத்திரவாதம், தொழிலாளர் நலன்களைப் பாதுகாப்பதும், ரெயில், தபால், விமானம் முதலிய சகலவிதமான இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களும் அடங்கியுள்ள,

நியூ இந்தியா

அஷ்யூரன்ஸ் கம்பனி லிமிடெட்டில்

இன்ஷ்யூர் செய்யுங்கள்.

இந்தியாவிலேயே, சகலவிதமான இன்ஷ்யூரன்ஸ்களும் செய்யும் பெரிய கம்பனி. டாடா குடும்பத்தினரால் துவக்கப்பட்டது.

மொத்த ஆஸ்தி சுமார் 9 கோடி ரூபாய்.

சேர்மேன்: எ. டி. ஷராப் எஸ்குயர்.

வைஸ் சேர்மன்: ஜே. ஆர். டி. டாடா எஸ்குயர்.

தலைமை ஆபிஸ்:
மஹாத்மா காந்தி ரோடு,
கோட்டை-பம்பாய்.

மதராஸ் கிளை:
4-5 முதல் லைன் பீச்.



THE MAN
in
INDUSTRY

ட்ராப்ட்ஸ் மேன்

இவர், தொழிற்சாலையில் திட்டம் தயாரிப்பவருக்கும், தொழிலாளருக்கும் இடையே தொடர்பாயுள்ளவர்.

கலையும், தொழில் ஞானமும் ஒருங்கே அமையப்பெற்ற இவர், திட்டங்களை யெல்லாம் விளங்கும்படி விரிவாகச் சித்தரித்து, குண்டூசி முதல் கப்பல்வரை செய்வதற்கு, இன்ஜினியர்களுக்கு உதவுகிறார்.

தொழிற்சாலையில் தயாரான பொருளை நாடெங்கு விநியோகம் செய்வதற்கு நல்ல சாலைகள் தேவை. தற்பொழுது நம் நாட்டிலுள்ள ரோடுகள், சாமான்களை தேசம் முழுதும் விரைவில் சேர்க்க வசதியாய் அமைக்கப்படவில்லை. இந்தியக் கைத்தொழில் முன்னேற்றத்துக்கு, நன்கு அமைக்கப்பட்ட நல்ல ரோடுகள் தேவை.

இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு நல்ல ரோடுகள் தேவை எனனும் நம்பிக்கையுடன் பர்மாஷெல் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது.

BURMAH-SHELL OIL STORAGE AND DISTRIBUTING CO. OF INDIA LTD. (INCORPORATED IN ENGLAND) GA/BS/2

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மஸி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181 Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED.

SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25, சைனு பஜார் :: மதருஸ்

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஆம் கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

OFFICE OF THE REGISTRAR ... 23 APR ... MADRAS

பிரசினை: நான்கு தீக்குச்சிகளைக் கொண்டு, இரண்டு சதுரங்களை நான்கு சதுரங்களாக மாற்றவும்.

விடை:



அதிகப்படியான நான்கு தீக்குச்சிகளைப் படத்தில் காட்டியுள்ளபடி அமைக்கவும்.

ஷ நான்கு தீக்குச்சிகளை விவேகத்துடன் அமைப்பதனால், அவை எட்டுக் குச்சிகளின் வேலையைச் செய்யும்படிப் பண்ணலாம். அதுபோலவே, உம்மு

Vasantham,

டைய சேமிப்பைக் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்பதை அறிவதனால், நீர் உம்முடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தில் அதிகபட்ச பலனைப் பெறக்கூடும். நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை வாங்கவும்—இவை சிறு சேமிப்புக்காரர்கள் பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பதற்காக வென்றே ஏற்படுத்தப்பட்ட சாதனமாகும்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்.

இவை முக்கியமான அனுகூலங்களாகும்:—

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவரா யிருந்தாலுஞ்சரி மைனரா யிருந்தாலுஞ்சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்க முடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவீதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்ன்மென்ட் பத்திரத்தின் மேல் கிடைக்கக் கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம்டாக்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வரப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபிஸுகளிலாவது கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜென்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

உம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும்!

1947 வாழ்த்துக்கள்

"மனிதனில்ச் சிறந்ததெலாம் நீடூழி வாழ்க" வெனும் மங்கள ஆசிகளுடன் நாம் பழைய ஆண்டைச் செல்ல விடுத்து, புதியதை மகிழ்ச்சியுடன் வரவேற்போமாக!

சமாதானமும் செழிப்பும், சந்தோஷமும் 1947-க்கு நற்செய்தியாக விளங்குக!

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.

வசந்தம்

மலர் 5	விய ௵ தை ௴	இதழ் 10

பொருளடக்கம்

மலர் மணம்	...	...	... 1
பண்பாடு	...	"ரா. நா"	... 2
பூனையும் நாயும்	...	"முத்தண்ணு"	... 4
சகோதரிக்கு	...	ப. தனுஷ்கோடி	... 7
சிலப்பதிகாரம்	...	சர். ஆர். கே. சண்முகம் செட்டி	... 17
தேன் சிட்டு	...	பி. பி. எஸ்	... 24
சென்னையில் இரண்டு நாட்கள்	...	"கே. வி"	... 25
கவிஞா!	...	"விசாகன்"	... 27
நட்பும் காதலும்	...	"தென்றல்"	... 28
ஒரு இரவு	...	சா. பூரணையன்	... 34
ஆசி	...	கு. ப. சேது அம்மாள்	... 40
அன்னியன்	...	கே. ஸ்ரீனிவாசன் எம். எஸ். ஸி.	... 45
புத்தக ஆராய்ச்சி	...	...	... 50
வெள்ளியோடம்	...	டி. சி. ராமசாமி	... 52
புனர் ஜென்மம்	...	கே. வி. துரைசாமி ராஜா	... 57
குழந்தையும் பாட்டும்	...	"பெ. தூரன்"	... 66
மனமாற்றம்	...	கோமதி சுவாமி நாதன்	... 69
மல்லிகை மொக்கு	...	தா. நாகலிங்கம்	... 73
தமிழிசை நினைவுகள்	...	"அம்பலவாணன்"	... 80

'வசந்த'த்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.



தற்கால கட்டிட நிர்மாணம்

தொழிற்சாலைகள்.

தற்சமயம் இந்தியாவில் மிகுந்த தொழிலபிவிருத்தி ஏற்படப் போகிறது. அதற்கு சாசுவதமான, சிக்கனமான, நெருப்பினுல் பாதிக்கப்படாத தொழிற்சாலை கட்டிடங்கள் நாடெங்கும் அவசியம். ரியின்போர்ஸ்ட் கான்கிரீட்—பல விதத்திலும் உபயோகப்படக் கூடிய கட்டிடசாதனம்—மேற் கூறிய குணங்களெல்லாம் பொருந்தியிருப்பதால் விரைவில் திருப்திகரமாய் இந்தியாவை தொழிலபிவிருத்தியடையச் செய்ய உபயோகமாயிருக்கும்.

அது போலவே, தொழிலாளர்களுக்கு அவசியமான சௌகரியங்களுடன் கூடிய சுகாதாரமான விடுகள் அமைத்து அதன் மூலம் அவர்களுடைய ஆரோக்கியத்தையும் தொழில் திறமையையும் விருத்தி செய்வதில் ரியின்போர்ஸ்ட் கான்கிரீட் முக்ய சாதகமாயிருக்கும்.

கான்கிரீட்டை நன்கு பயன்படுத்திக் கோள்ள கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் (199, மவுன்ட்டு ரோடு, மதறுஸ்) உதவி எப்பொழுதும் கிடைக்கும்.

தி ஸிமென்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

CM, 106



நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

மலர் மணம்

ஆசிரியர்

'வசந்த'ச் சோலையிலே இளமான்கள் இன்பமாகத் துள்ளி விளையாடுகின்றன. மருண்டபார்வையுடைய மான்காட்சி இவ்விதழுக்கு வனப்பைத் தருகிறது.

"மதுரைக் காண்டம்" இந்த இதழிலிருந்து தொடங்குகிறது, ஒரு சிறப்பான அம்சம். சிலம்புச் செல்வர்களின் சிந்தைகுளிர சுவையோடு இசைத்திருக்கின்றார் சர். ஆர். கே. எஸ். அவர்கள்.

வழக்கம் போல் தமிழிசைத்திருவிழா இவ்வருஷம் வெகு விமரிசையாக நடந்தேறியது. உள்ளே விரிவான விமர்சனம் வெளிவருகிறது. எழுத்தாளர் மகாநாட்டு அற்புதங்களையும் இந்த இதழில் அனுபவிக்கலாம்.

192250

பண்பாடு

ரா. நா.

"மேல் நாட்டினர் 'கல்சர்' என்கிறார்களே, அதற்குச் சரியான தமிழ் என்ன? 'கல்சர்' நம்மிடமிருந்தாலல்லவோ அதற்குத் தமிழ் பதம் என்ன என்று கூற முடியும்" என்று மேநாட்டு நாகரிக மோகம் பிடித்த சிலர் கூறி வந்தார்கள். ஆனல் 'கல்சர்' என்பதுதான் நம் 'பண்பாடு' என்று தெளிவானவுடன் பழைய வீணர்கள் வம்பு பேசுவதை நிறுத்திக் கொண்டார்கள்.

ஆனல் இந்தப் பண்பாடு விஷயத்தில் மேல் நாட்டிற்கும் நமக்கும் நிரம்ப வித்தியாசமிருக்கிறது. "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்" என்றார் நம் மூதாதையர். "உள்ளே என்ன இருந்தாலும் பார்ப்பவர்கள் வித்தியாசமாக நினைத்துக் கொள்ளும்படி நடக்காதே" என்பதுதான் மேல் நாட்டு சித்தாந்தம். இதுதான் அவர்கள் 'கல்சரின்' அடிப்படை. இந்த மேல்ப் பூச்சு மரியாதை ஜாஸ்தியாகப் போனதனல்தான் எமரிஸன் எனும் மேனட்டு வேதாந்தி 'உண்மையாயிரு! அப்படியிருப்பதுபோல் நடிக்காதே!' என்று கூறினர் போலும்.

மேனட்டு 'கல்சர்' நம் நாட்டிலும் பரவி நம் பண்பாடு ஓரளவு மறைந்து வருகிறது. நாம் பார்க்க விரும்பாத ஒருவனை நாம் சந்தித்தால் "அடா டா வரணும், பார்த்து ஒரு யுகம் இருக்கும் போலிருக்கே. என்ன சார் இந்தப் பராமுகம்?" என்று கூறுகிறோம். நாம் சாப்பிடும் சமயத்தில் யாராவது வந்து விட்டால் "ஐயோ எழவே, இவன் எதுக்கு இப்போ வந்தான்" என்று தோன்றும். ஆனல் நாம் என்ன சொல்கிறோம்? "அடடா வாங்கோ! நீங்களாம் நம் வீட்டிலே சாப்பிடுவீர்களா? சாப்பிட்டு விட்டே வந்திருப்பீர்கள்" என்று சொல்லுகிறோம்.

மேல் நாட்டிலே எல்லாம் மேல் பூச்சு. யாராவது ஒருவரைப் பார்த்தால் கை குலுக்குவது, 'சௌக்கியந்தான' என்று கேட்பது, நிற்பது நடப்பது எல்லாவற்றிற்கும் 'வந்தனம்' 'வந்தனம்' என்று கூறுவது, எல்லாமே சம்பிரதாய விசேஷங்கள்.

இதைப் பின்பற்றி நாமும் நடந்து வந்தவுடன் 'சௌக்கியமா' என்று கேட்பதில் தவறு ஒன்றுமில்லை. 'இப்போ

தான் வராப்பலியோ' என்று கேட்பதில் அர்த்தமே யில்லே. ஆசாமி புதிதாக வந்ததும் தான் 'சௌக்கியமா' என்று கேட்டாகி விட்டதே. அப்புறம் 'இப்பதான் வராப்பலியோ' என்று கேட்பதின் அர்த்தமென்ன!

சமீபத்தில் ஒரு கதை படித்தேன். அதில் ரேஷன் காலத்தில் அதிதிகள் வந்து விட்டார்கள். வீட்டுக்கார அம்மாவுக்குச் சங்கடமா யிருக்கிறது. தன் சங்கடத்தை அண்டை வீட்டுக்கார அம்மாளிடம் சொல்லிக் கொள்கிருள். ஆனல் அதிதியை நேரில் பார்த்தவுடன் அவர்கள் 'இன்னும் சில நாட்கள் தங்க வேண்டியிருக்கிறது' என்று சொன்னவுடன், "அதற்கு என்ன நாலு நாட்களென்ன நாற்பது நாளானலும் நீங்க பாட்டுக்கு இருங்கோ" என்று சொல்லுகிருள். இது தவருன பண்பாடு நம்மை ஆட்கொண்டு விட்டதன் பலன். உண்மையைச் சொல்ல வேண்டுமானல் அந்த வீட்டுக்கார அம்மாள் மரியாதையாக "நீங்கள் இருப்பதைப் பற்றி ஆட்சேபனே இல்லே. தற்காலிக ரேஷனுக்கு ஏற்பாடு செய்யச் சொல்லுங்கள்" என்று பதில் கூறியிருக்க வேண்டும்.

கலியாண அழைப்பிதழில் "உங்கள் ரேஷனே உடன் கொண்டு வரவும்" என்றும், 'ஒரே நாள் கலியாணம்' என்றும், அழைப்பிதழுடன் 'விருந்து இரவு 8 மணிக்கு' என்று தனிச் சீட்டு வைத்து, மற்ற வேளேகளில் சாப்பாடு இல்லே என்பதைச் சொல்லாமல் சொல்லும் நிலேக்கு வந்த பிறகு அர்த்தமற்ற சம்பிரதாயங்களேயும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் பண்பாட்டையும் கட்டிக் கொண்டு அழவேண்டாம்.

மனதிலிருப்பது வெளி வர வேண்டுமென்ருல், பிறருக்கு மனவருத்தம் வரும்படி நடந்து கொள்ளலாமா என்று கேட்கலாம். அப்படி அவமரியாதையாய் நடந்து கொள்ள வேண்டியதில்லே. கண்டிப்பு, உறுதி இரண்டையும் மரியாதையாகத் தெரிவித்துக் கொள்ள நமது பாஷையில் நிரம்ப இடமிருக்கிறது. நம் குணத்திற் கேற்ற நண்பர்களிடம் அளவளாவலாம். பிடிக்காத மனிதர்களேப் பார்த்தால் "நமஸ்காரம்" என்று சொல்லி விட்டு மறு வார்த்தை பேசாமல் நகர்ந்து விட்டால் அவர்கள் தெரிந்து கொள்கிருர்கள் நமது மனப்பாங்கை. உயிர்களிடத்தில் அன்பு வேண்டும். உண்மையில் உறுதி வேண்டும்; உள்ளக் கிளர்ச்சி மரியாதையாக வெளிப்பட வேண்டும். இதுதான் நம் பண்பாடு.

★

பூனையும் நாயும்

'முத்தண்ணா'

ஒரே ஒரு கிராமத்தில் தோட்டம் ஒன்று இருந்தது. அந்தத் தோட்டத்தில் தோட்டக்காரன் ஒருவன் இருந்தான். அங்கிருந்த கிணற்றில் இருந்து தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவது தான் அவன் வேலை. கிணற்றில் ஒரு ராட்டினம் இருந்தது. ராட்டினத்திலிருந்த கயிற்றின் இரு நுனிகளில் தண்ணீர் இறைப்பதற்காக இரண்டு வாளிகள் கட்டப்பட்டிருந்தன. ஒருவாளி கிணற்றுக்குள் போய் தண்ணீர் மொள்ளும் போது மற்றொரு வாளி மேலே இருக்கும். கிணற்றுக்குள் போயிருக்கும் வாளியில் நீர் நிரம்பியதும் தோட்டக்காரன் அதை மேலே இழுப்பான். அப்பொழுது மேலே இருக்கும் வாளி கீழே கிணற்றுக்குள் போகும். தண்ணீருள்ள வாளி மேலே வரும். அதைத் தோட்டத்திற்குப் பாய்ச்சுவான் தோட்டக்காரன். இப்படியாக ஒரு வாளி தண்ணீருடன் மேலே வருவதும், மற்றொரு காலி வாளி கிணற்றுக்குள்ளே போவதுமாக இருக்கும் இப்படித்தான் தோட்டங்களில் தண்ணீர் இறைப்பது சில கிராமங்களில் வழக்கம்.

அது ஓர் ஊற்றுக் கிணறு. ஒரு நாள் கிணற்றில் ஊறிய நீரெல்லாம் இறைத்தாகி விட்டது. மறுபடியும் தண்ணீர் ஊற சில மணி நேரம் பிடிக்கும். ஆகவே தோட்டக்காரன் சிறிது நேரம் வெளியே போயிருந்தான். அந்த சமயத்தில் தற்செயலாக ஒரு பூனை அந்தப் பக்கம் வந்தது. அந்தப் பூனைக்கு மிகவும் தாகமாயிருந்தது. கிணற்றின் மேலே இருந்த வாளியில் கொஞ்சம் தண்ணீர் இருப்பதைப் பார்த்தது பூனை. முன் யோசனையற்ற அந்தப் பூனை வாளியிலுள்ள நீரைக் குடித்து தாகத்தைத் தணித்துக் கொள்ளும் எண்ணத்துடன் வாளியில் குதித்தது. அதன் பளுவினால் வாளி கிணற்றுக்குள் போயிற்று. வாளிக்குள் குதித்த பூனையும் கிணற்று நீர் மட்டத்திற்குப் போய்விட்டது. மற்றொரு வாளி

மேலே வந்து விட்டது. பாவம் பூனை மேலே ஏறிவர பலவிதத்தி லும் முயன்றது. முடியவில்லை. தன் குரல் கேட்டு யாராவது தன்னை வந்து காப்பாற்ற மாட் டார்களா? என்று வருத்தத் துடன் பூனை காத்துக் கத்திக் கொண்டிருந்தது.

பூனையின் குரலைக் கேட்டு அங்கே ஒரு நாய் வந்தது. நாய், கிணற்றுக்குள்ளிருந்த பூனையைப் பார்த்து "ஐயோ பாவம், நீ எப் படிக் கிணற்றுக்குள் போய் விழுந்தாய்? நீ எப்படித் தப்பிப் பிழைக்கப் போகிறுய்?" என்று உண்மையான அநுதாபத்துடன் கேட்டது. உடனே பூனை சாமர்த் தியமாக, "அண்ணு, என் தாகத் தைத் தணித்துக் கொள்ள நானே தான் கிணற்றுக்குள் இறங்கி னேன். ஆனல் அடடா இங்கே வந்த இடத்தில்தான் எனக்கு எப் படிப்பட்ட அதிருஷ்டம் தெரி யுமா? இங்கே பல்வித ருசியான தின்பண்டங்கள் இருக்கின்றன. என்னல் முடிந்தவரையில் தின் றேன். எனக்கு வேண்டிய மட் டும் இதோ என்னேடு இந்த வாளி யில் எடுத்துக் கொண்டிருக்கி றேன். அது போதும். இனி என் ஆயுள் பூராவும் எனக்கு வயிற்றுக் கவலை இல்லை" என்று கூறிற்று.

பூனையின் வார்த்தையை உண்மையென நம்பிய நாயும், "அடடா நீ தவறிப் போய் கிணற்றுக்குள் விழுந்து தவிப்ப தாக அல்லவா நான் தவருக எண்ணிவிட்டேன். அங்கே வித விதமான தின்பண்டங்கள் இருக் கின்றனவா?" என்று ஆவலாகக் கேட்டது.

"ஏராளமாக இருக்கிறது. இங்கிருப்பது அவ்வளவும் எனக்கு எதற்கு? நாம் இருவரும் வெகு நாளைய நண்பர்களில்லையா? உனக்கும் அதில் பங்கு தருகி றேன். அப்பொழுதுதான் என் மனம் சந்தோஷம் அடையும். நீ இங்கே வா. இருவரும் சேர்ந்து தின்போம்" என்று உண்மை போலக் கூறிற்று பூனை,

நாய், பூனையின் வார்த்தைகளை மெய்யென நம்பிவிட்டது "அது சரி, ஆனால் நான் அங்கே எப்படி

வருவது?" என்று கேட்டது. அதற்குப் பூனை, "அதோ மேலே இன்னொரு வாளி இருக்கிறதே அதில் குதித்து உட்கார். சுலபமாக இங்கே வந்து விடலாம்" என்று சொல்லிற்று. முன்யோசனை யில்லாத அந்த நாயும் பூனை கூறியபடி வாளியில் குதித்தது.

பூனையை விட நாய் அதிக கனமல்லவா? ஆகவே நாய் வாளிக்குள் குதித்ததும், அந்த வாளி விரைவாகக் கிணற்றுக்குள் இறங்கிற்று. பூனை ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கரையை அடைந்தது.

"அண்ணா உனக்கு மிகவும் வந்தனம். உன்னுடைய உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன். கிணற்றுக்குள் இருக்கும் தின் பண்டங்களை யெல்லாம் நீயே சாப்பிடு. இதோ தோட்டக்காரன் வந்துவிட்டான். நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு பூனை ஓடிவிட்டது.

அதற்கு முன்பெல்லாம் பூனையும் நாயும் நண்பர்களாக ஒற்றுமையாகத்தான் இருந்தன. ஆனால் நாயைப் பூனை இப்படி ஏமாற்றிய பிறகு பூனையிடம் நாய்க்கு விரோ



தம் ஏற்பட்டுவிட்டது. அதுதான் இன்றும் பூனைகளைக் கண்டால் நாய்கள் விடுவதில்லை.

★

சகோதரிக்கு

ப. தனுஷ்கோடி

குழந்தை பிறக்கப்போகிறது என்பது தெரிந்தவுடன் அது ஆணா — பெண்ணா என்று அறிய எல்லோர் மனமும் ஆவல் கொள்கிறது. ஆண்தான் என்பது தெரிந்தவுடன் ஆண்களின் உள்ளமெல்லாம் குதூகலமடைகிறது. அதேபோல் பெண் குழந்தை என்றவுடன் பெண்கள் கோஷ்டியில் மகிழ்ச்சி உருவடைகிறது. ஆனால் ஒன்று; ஆண் குழந்தை என்பது தெரிந்தவுடன் பெண்மையடையும் அளவு சந்தோஷம் கூட, பெண் குழந்தை என்பதையறிந்த ஆணுள்ளம் அடைவதில்லை. பிறக்கும் போதே ஒரு சாராரின் விருப்பத்தை இழந்து விட்ட பெண், வளர வளர தன் சுய திறமையினால் — வசீகர சக்தியினால் எல்லோரது மனதையும் ஆகர்ஷித்து விடுகிறாள். மூன்று மாதமே நிரம்பப் பெற்ற ஆண் சிசுவின் சிரிப்பைக்காட்டிலும் பெண் சிசுவிடம் மோஹனக் கவர்ச்சி தென்படுகிறது. ஐந்து வயதுக்குள் தன் விசேஷ தனித்தன்மையினால் வெறுக்கக் கூடியவர்களே இல்லாதபடி சுற்றுப்புறங்களைச் சிருஷ்டித்து விடுகிறது. பள்ளி வாழ்க்கைக்குப் பின் பருவம் அடையும் வரை எல்லோரிடமும் பகுத்தறிவுடன் பக்குவமாக நடந்து பரிபூரண அன்பிற்கும், நன்றிக்கும் பாத்திரமாகி விடுறது. பெண்ணை என்ன தான் அலட்சியப் படுத்துகிறவர்களாக இருப்பினும், களங்கமற்ற அன்பினால் கலவரப்பட்டே தீர வேண்டும். சூழ்நிலையின் காரணமாக பால்ய வயதில் அனேக கெட்ட குணங்கள் பற்றிக் கொள்வது உண்மை தான். ஆனாலும் அவை வெளியில் தெரியாத வண்ணம் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளவும் சிறுமி கற்றுக் கொண்டிருக்கிறாள். தாய் தந்தை, சகோதரன், சகோதரி, இன்னும் மற்ற ஒவ்வொருவரிடம் எப்படி எப்படி நடந்து நன்மதிப்பைப் பெறுவது என்பதை அறியாத பேதைகள் மிகச் சிலரே! தனித்தனியே தன் ஆந்திரீக உள்ளத்தை வித விதமாகத் திறந்து காட்டி தங்களை மாசற்ற நேசர்களாகச் செய்து கொள்வது கன்னிப் பெண்களின் இயல்பு. யாரிடம் எதை விரும்பிக் கேட்டாலும் இல்லை என்ற பதில் வராதபடி சரிபடுத்தி வைத்திருப்பதே கெட்டிக்காரப் பெண்ணின் வெற்றி!

நன்றாய் இருக்கட்டும்! ஆனால் இவ்வளவு நல்ல குணங்களையும் இயற்கையாக வளர்த்துக் கொள்ளும் சகோதரி தன் கல்யாணத்திற்குப் பின் புது அத்தியாயமே ஆரம்பித்து விடுகிறாள். எந்தக் கெட்ட குணங்கள் வெளியில் தெரியக் கூடாதென்று மறைத்து வைத்திருந்தாளோ, அவையெல்லாம் சர்வ சாதாரணமான சமயங்களில் கூட வெளிப்படுகின்றன. எந்த நன்மையை உத்தேசித்து மற்றவர்களின் நல்லெண்ணத்தைச் சேகரித்து வைத்திருந்தாளோ, அவை நம்பிக்கையற்று வீழ்ச்சியடைகின்றன.

காரணம் என்ன? சகோதரி, குமாரி, மாணவி, சிறுமி, கன்னி, யுவதி என்ற பெயர்களைச் சுமந்திருந்த சாதாரணப் பெண். இப்போது மனைவி, மாமி, நாத்தனார், ஓர்ப்படி, அத்தை, சக்களத்தி என்ற பட்டம் பதவியுள்ளவளாக மாறி விடுகிருள். அவற்றின் அதிகாரங்கள் அந்தந்த இடங்களில் விதம் விதமாக ஆட்சி செலுத்த முயல்கின்றன. பிறந்தகத்திற்கு வந்தால் புக்ககத்தின் பெருமையையும், வேட்டகம் சென்ருல், தாயகத்தின் சிறப்பையும் வர்ணித்து சுயநலப் பிரக்யாதி பெறுவதே சகோதரிகளின் லட்சணமாகி விடுகிறது. எதிலும் உண்மை பேசுவதென்பதையே மறந்து விடுகின்றனர். பட்டம் பதவிகள் நெருங்காமல் தடுத்து விட முடியாது என்பது உண்மை தான். ஆனுல் மனம் வைத்தால் அதன் மூலம் வரும் மமதையைத் தடுத்து விட முடியாது என்பது பொய்!

ஒரு குடும்பத்திலே பல சகோதரிகள் இருக்கலாம். ஒவ்வொருவர் கணவன்மார் வீடும் ஒவ்வொரு விதமாக இருக்கலாம். ஆனுல் அத்தனை பேரும் சேர்ந்து பிறந்த வீட்டாருக்குத் தொந்திரவு கொடுப்பதில் சளைப்பதில்லை. போராடிப் பெற்ற பொருட்களிலும் பங்கு போடுவதிலே போட்டா போட்டி. இத்தனை தன்னலம் பால்யத்தில் தீய விஷமாக பரிணமித்தது 'என்று கூறுவதற்கில்லை. சுயநலமிகள் என்ற சொற்ருெடரே பெண்களைக் குறிக்க வந்தது தானே என்று கூட சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

உயர்ந்த குடும்பத்தில் பிறந்து, நல்ல குணத்தில் வளர்ந்து, பிற்காலத்தில் தகுந்த இடத்தில் வாழ்க்கைப் படுகிருள். பெற்ருேரும் மற்றவர்களும் நல்லுபதேசம் செய்து அனுப்புகிருர்கள். எல்லாம் நாம் நடந்து கொள்ளும் ஒழுங்கு, நேர்மை, புத்திசாலித்தனம் ஆகியவற்றிற்குத் தக்கபடி பலன் கிடைக்கும். பெருந்தன்யாகப் பிறரிடம் பழகுதலும் கௌரவமாக மற்றவர் நினைக்க நடந்து கொள்ளுதலும் அவசியம். அற்ப பேச்சுகளும், பொருமை முதலிய கெட்ட குணங்களும் கொஞ்சம் கூட வரக்கூடாது. தடாலென்று யாரையும் கேவலமாகப் பேசி விடுவதும், மரியாதையின்றி வேருெருவரிடம் பேசுவதும் கெட்டிக் காரத்தனமல்ல. அதனுல் பிற்காலத்தில் தமக்கே கஷ்டம் தரும். என்றுமே இதை மறக்கக்கூடாது.

வாழ்க்கையில் பிரவேசித்ததுமே அறிவு, அநுபவம், அதிகாரம் வந்து விட்டதாக நினைத்து விடக்கூடாது. நூறு வயது என்ற மனித ஆயுளுடன் கவனிக்கும் போது, ஏறக்குறைய 15 ஆண்டுகள் கொண்ட நீ சிறு பெண்! உன்வயதுக்குள் எல்லாம் தெரிந்து எல்லோரையும் பேசி விடுவது ரொம்ப அதிகப் பிரசங்கித்தனம். அதனுல் யாருக்கும் உன் மேல் வெறுப்பு தோன்றும். அந்த அருவருப்பே உன் சிறிய தவறுகளையும், பெரிய குற்றச் சாட்டுகளைச் சுமத்தி விடும். இது யாருக்கும் சகஜம் தான். ஆனுல் சிறியவளாக இருக்கும் நீ, எப்படி — எந்த மாதிரி நடந்தால் பெரியவர்கள் மனம் சந்தோஷமடைகிறதோ, அப்படி நடக்கப் பழக வேண்டும். அது தான் உனக்கும் நல்லது; உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் நல்லது. அத்துடன் உன் கஷ்டங்கள் எதுவாக இருந்தாலும், கண்டவர்களிடம் சொல்லி மனதைத் தேற்றிக் கொள்ள முயல்வது

மாபெரும் தவறு. மற்றவர்களிடம் நீ நல்லவள் என்று பெயரெடுக்க இது சுலபமான வழியாகத் தோன்றலாம். ஆனால் பிறரைக் கெட்டவர்கள் — கொடுமைக்காரர்கள் என்று உன் வாயாலேயே விளம்பரம் பெற்றவர்கள், திரும்ப நல்ல குணமடைவார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது. மற்றவர்களேயும் நல்லவர் என்று போற்றுவதால், நீயும் நல்லவளாகிவிடலாம். மனக்கஷ்டமும் அதனுல் தான் குறையும்.

இதையெல்லாம் புருஷன் வீடு செல்லும் பெண் கவனிக்க வேண்டும் என்று விரிவாக "மணமகளுக்கு" என்ற கட்டுரையிலேயே தெரிவித்து இருக்கிறேன். இங்கு "சகோதரிக்கு" என்று கூற வருவது மணமான பின் பெண் பிறந்த வீட்டிலும், அங்குள்ளவர்களிடமும் நடந்து கொள்வதைப் பற்றித் தான். பெண்ணுக்கு மணமுடித்த சில நாளில் பெற்ரேருக்கு ஒரு வகையாகப் பொறுப்பும், தொடர்பும் நின்று விடுகிறது. கடைசி வரை ஒருவர் மற்றவரது சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொள்வது சகோதர பாசம் தான்! "அண்ணு!" என்றழைத்துக் கொண்டு உள்ளே பிரவேசிக்கும் தங்கையின் மகிழ்ச்சி பொருந்திய வதனமும், சகோதரியின் பெயரைக் கூவிக் கொண்டே மைத்துனர் வீட்டில் நுழையும் சகோதரனின் முகப் பொலிவும், பார்த்து ரஸிக்க வேண்டியவை. ஆனுல் இவ்வுயர்ந்த இன்பம் கணப் பொழுதில் தோன்றி மறையும் மின்னலுக்குச் சமானமாகி விடுகிறதே என்பதை நினைக்கும் போது தான், சகோதரியை அழைத்து காதோடு காதாய் சில வார்த்தைகளைக் கூற வேண்டும் எனத் தோன்றுகிறது.

எவ்வளவு தான் அன்பும், ஆதரவும் சௌகரியமும் மிகுந்திருந்தாலும் நீண்ட காலத்திற்கு ஒரே இடத்தில் இருப்பது யாருக்கும் சிரமமான காரியம். அதிலும் ஒரு இளம் பெண் சேர்ந்தாற் போல் புருஷன் வீட்டிலேயே தங்கியிருப்பதென்பது, சிறைவாச தண்டனை என்றே எண்ணுவர். ஆகவே, சகோதரியையும், சகோதரிக் குழந்தைகளையும் காண வேண்டும் என்ற ஆவலில் வரவழைத்து வீட்டிலே சில நாள் தங்க வைக்கிருர், சகோதரர். ஆனுல், உடலுக்கு ஓய்வும், உள்ளத்திற்கு உற்சாகமும் பெற வந்த உத்தம சகோதரி அதையும் தன் வீடாகப் பாவித்துக் கொண்டு ஒழுங்கு படுத்த முயற்சிக்கிருள். காலமெல்லாம் கூடி வாழ வேண்டிய புருஷன் — பெண் ஜாதிக்கில்லாத சிரத்தை, பத்து நாள் தங்கி விட்டுச் செல்ல வந்த சகோதரியிடம் வடிகிறது.

ஒன்றுமில்லாததற்கெல்லாம் மதனியைக் குறை கூறி தானே மேதாவியாகி விடுகிருள். வந்தது முதல் அவள் சீர்திருத்தம் செய்து, 'அவரைக்' காப்பாற்றுவதிலேயே முனைந்து விடுகிருள். நாத்தனாரைக் கண்டு நாட்டுப் பெண் நடுங்க வேண்டாமா? என்பது சகோதரிப் பித்து! வேண்டுமென்றே ஒவ்வொரு வேலையையும் எடுத்துத் தானே செய்து விட்டு, அலுத்துக் கொள்வதும் உண்டு. சகோதரன் மனைவியின் பால் பரிந்து பேசினுல், சகோதரியிடம் ஏளனம்; சகோதரியை ஆதரித்தால் மனைவியின் எக்காளம். ஆகமொத்தம் தர்ம சங்கடமான நிலையை சிருஷ்டித்து 'ஸ்ரீமதி கம்பீரம்' பெறுவதில் சகோதரிக்கு பெரிய அக்கரை. ஆனுல் அன்புடன் வந்து செல்ல வேண்

டியவள் அவன் மனதிற்குப் பிடிக்காத காரியங்களைப் பிடிவாதமாகச் செய்து பெரிய மனவருத்தத்தை ஏன் உண்டாக்க வேண்டும்? சகோதரியைப் பற்றித் தாழ்வாகப் பேசுபவர்களிடம் வாதாடி பெருமையை நிலை நாட்டுவதில் சகோதரனுக்கு இணை இருக்க முடியாது. உண்மையில் மனைவி மீது சுமத்தப்படும் அபாண்டங்களைக் கூட ஒரு கணவன் நம்பி விடுவான். ஆனால் சகோதரியைப் பற்றி அப்படி எண்ண இரத்த பாசம் சுலபத்தில் இடம் கொடுக்காது. அப்படிப் பட்டவனிடமா கசந்து கொள்வது? வெறுப்பைத் தேடிக் கொள்வது?

நம் வீடு என்று ஆடவன் ஒரு வீட்டைத் தான் நினைக்கிறான். பெண் அப்படிக் கருதுவதில்லை. சொந்த வீடாக இரண்டு வீட்டை ஒவ்வொரு சகோதரியும் கருதுகிறாள். உண்மையில் அப்படி இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. கல்யாணமான பிறகும் கூட பிறந்த வீட்டில் உரிமையும், அதிகாரமும் இருக்க வேண்டும் என்று சகோதரி பாத்யதை கொண்டாடினால், தான் புகுந்த வீட்டிலும் புருஷனின் சகோதரிக்கு அச் செல்வாக்கை நியாயமாக அளிக்கத்தான் வேண்டும். அப்படி எத்தனை பேர் இருக்கிறார்கள்? நாத்தனார் தன்னை அதிகாரம் செய்யக் கூடாது, கேள்வி கேட்கக் கூடாது என்பது நேர்மையானால், தன் நாத்தி பலரையும் பெயரளவுடன் நிறுத்திக் கொள்ளத் தான் வேண்டும். பெண் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் ஆகியவை சரியில்லாத படியால் தான் ஸ்திரீ இரண்டு வீடுகளையும் உரிமை கொண்டாட வேண்டியிருக்கிறது என்பது ஒரு கட்சி. உண்மை. ஆனால் அதைப் பெறுவதற்கு துவேசம் உதவி புரிந்து விடாது. சட்டப் பூர்வமான பாதுகாப்பு ஏற்படாத வரை பெண் தார்மீக பலத்தை செளஜன்யமாக விருத்தி செய்து கொள்வதுதான் முறை.

ஒரு நல்ல சகோதரன் எவ்வளவு நம்பிக்கையும், விஸ்வாசமும் வைத்திருந்தானோ, அவ்வளவையும் கொஞ்சம் கொஞ்சமாக விட்டு விடும்படிச் செய்வதுதான் சகோதரியின் சாகஸமாக இருந்து வருகிறது. இந்த சுபாவம் அவன் கல்யாணத்திலிருந்தே அவளைப் பற்றி விடுகிறது. "இனிமேல் என்னைக் கவனிப்பியா, அண்ணா!" என்ற ஏக்கம் தானாகவே காரணமின்றி சகோதரியின் உள்ளத்தில் மடிந்து விடுகிறது. சமுதாயத்தின் சம்பிரதாயப் போக்கு அப்படி. ஆனால் பொறுப்பும், கடமையும் உணர்ந்த நாகரீக காலத்தில் மனிதனை இப்படி மட்டமாக மதிப்பது அறிவீனம். தவிர, அத்தோல்வி மனப் பான்மையே மனதில் புண்ணை யுண்டாக்கி நடைமுறைக் காரியங்களில் தவறிழைத்து, உண்மையிலேயே அலட்சியப்படுத்தப்படும் நிலைக்கு கொண்டுவந்து விடுகிறது.

"பெண்களை நாடிச் செல்லாத ஆண்கள், அவர்களை நாடி வரும் பெண்களுக்கு அடிமையாக நேரிடலாம்" என்று ஆங்கில ஆசிரியர் ஒருவர் சொல்கிறார். பெண் மீது மோகம் கொண்டு வசியம் செய்ய விரும்பும் ஆண்களுக்குத்தான் இந்த வாக்கியம் பொருத்தமாக இருக்கலாம். பரிசுத்தமான நேசத்தை ஆண் பெண்ணிடம் நாடிச் சென்றால் அதற்கு தப்பர்த்தம்தான் பிரதிபலனாகக் கிடைக்கிறது. எப்போதாவது ஆணிடம் பெண் தானாக நெருங்கினால் அதில்

நிச்சயமாக நம்பிக்கை பிரதிபலிக்கிறது. ஆனல் இவ்வித சிக்கல் எதுவும் பெண் பெண்ணுடன் நெருங்குவதில் கிடையாது. அப்படியிருக்க சகோதரி எதற்காக ஒரு விரோதிகள் கோஷ்டியை சிருஷ்டித்துக்கொள்ள வேண்டும்? கொழுநன் மனைவி பங்கு போட வந்து விட்டாள் என்று ஏன் எரிந்து விழ வேண்டும்? சம்ஸார வாழ்க்கை, தனிக் குடித்தனம் என்று ஏற்பட்டு விட்டால், நெருங்கியவர்கள் யாவரும் பிரம்மச்சரிகளாகவே இருக்க வேண்டும் என்று எண்ணலமா? மனதார இப்படி எல்லாம் நினைக்கும் சகோதரி ஒருவரும் இருக்க மாட்டார்கள். அப்படியானல், தன் சுகத்தையும் பிறர் சுகத்தையும் முரண்பாடின்றி நடத்திச் செல்ல முடியாதா? சில உண்மைகளைக் கவனித்தால் இது புரியும்.

பெண் மீது பெண் அநுதாபம் கொள்வது சகஜம். பெண் மீது பெண் பொருமைப்படுவது, அதைவிட சகஜம். நாம் அருமையாக வைத்திருக்கும் ஒரு பொருளை நண்பர் யாராவது கேட்டால் கொடுக்க மறுக்கிறோம். ஆனல் அதே பொருளை ஒரு பெண் கேட்டால் மறுக்கத் துணிவு வருவதில்லை. பெண்ணுலகம் அப்படித்தான். மற்ருெரு பெண்ணுக்கு இல்லை என்று சொல்லும் பிரியமான வஸ்துவை, மற்ருெரு ஆடவன் விரும்பினல் தயக்கமின்றிக் கொடுத்து திருப்தி யடைகிருள். அதனல் அவளுக்கு நிஜமாகவே நஷ்ட மேற்பட்டால் கூட மனம் வருந்துவதில்லை. ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள தாதாம்மிய சிருஷ்டி இரகஸியமே இந்தக் கவர்ச்சிதான் என்று, ஆத்மீகவாதிகள் சொல்லக்கூடும். ஆனல் ஆணை ஆணே அலட்சியப் படுத்துவதும், பெண்ணைப் பெண்ணே விரும்பாமல் பொருமை எண்ணத்துக்கு இடம் கொடுப்பதும் இனத் துரோகமாகும். பற்றுள்ள வஸ்துவானலும் அதைக் கேட்பவர் ஆணா–பெண்ணா, யுவதியா–யுவனா, என்பதைக் கொண்டு முடிவு கட்டுவது தவருகும். இப்படிச் செய்வதிலே அன்பு இல்லை; உண்மையில் ஸ்திரத் தன்மை இராது. ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏதோவொரு ஆகர்ஷண சக்தி வேலை செய்கிறது என்பது உண்மையே. ஆனல் கடிதில் மறையும் அற்ப உணர்ச்சி வேகத்திற்கு யாரும் உட்பட்டு விடக் கூடாது. இதைக் கூர்ந்து கவனித்து அநுசரித்தால் ஒரு கண்ணடி டம்ளரை மதனி எடுத்துக்கொண்டாள் என்பதற்காகவும், ஒரு உடைசல் பாத்திரத்தை ஓர்படி எடுத்துக் கொண்டாள் என்பதற்காகவும் பிரமாதமான சண்டை புறப்படாது. தாராளமாக விட்டுக் கொடுக்கும் மனப் பான்மை ஒவ்வொரு சகோதரி [யிடத்திலும் வளர வேண்டும்.

"நாத்தனர்! நாத்தனர்!" என்று உச்சி மீது வைத்துக் கொண்டாட வேண்டுமென்று பல சகோதரிகள் எண்ணுகிருர்கள். இரண்டு மாதம், நான்கு மாதம் இருந்த பின்பும்கூட, "எங்கம்மாவாக இருந்தால் இத்தனை சீக்கிரம் என்னை அனுப்பப் பிரியமே இருக்காது" என்று அங்கலாய்த்துக் கொள்கிருள் சகோதரி. அவளை எவ்வளவு கவனிப்புடன் இதுவரை அன்புடன் நடத்தியிருந்தாலும் அவை யெல்லாம் மறந்துவிடுகின்றன. நன்றி, விசுவாசம் என்பதே சகோதரிகள் அறியமாட்டார்களா என்று கூட கேட்கத் தோன்றுகிறது. அரை குறையான உபசாரம்–உதவி பெற்றி

ருந்தாலும் கூட, போகும் போது, நாலு நல்ல வார்த்தையாக, "எவ்வளவோ உன்னல் எனக்கு நன்மை செய்தாய்; ஒரு நாளும் மறக்க மாட்டேன்" என்று வாயாரக் கூற முடியாதா? தன்னைப் போன்ற ஒரு பெண்ணை சிலாக்கிப்பதால் தன் மதிப்பு குறைந்து விடுமா? அந்த அன்பான இன் சொல்லிலே எத்தனை காலம் ஆசாபாசம் நீடிக்கும் தெரியுமா? அன்பே உலகம்; அன்பே வாழ்க்கை என்பது வெறும் வெட்டிப் பேச்சல்ல!

சகோதரிகள் பொதுவாக எல்லா இடங்களைப் பற்றியும் சில கருத்துக்களை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். சிலருடைய சுபாவம் நாம் அடிக்கடிச் செல்வதால் வெறுப்படைவதும் உண்டு. உயர்ந்த அன்பையும், உபசரிப்பையும், உண்மையான விஸ்வாஸத்தையும் அவர்களிடம் பெற்று வந்த நாம் கூட, அவர்களின் அலட்சியமான சிரத்தையற்ற நடிப்பைக் கண்டு ஆச்சரியப் படுவோம். இன்று ஒரு தவறும் செய்யாமல் நம்மை விரும்பாதவர்கள், அன்று எதற்காக அப்படி விழுந்து விழுந்து உபசரித்தார்கள் என்பது புரிய முடியாத புதிராகவே விளங்கும். ஆனல் அதற்காக அவர்கள் நம் மீது கொண்ட வாஞ்சை பொய்யானதென்று முடிவு கட்டி விடக் கூடாது. "எல்லாம் புதுசா பார்க்கும் போது அப்படித்தானிருப்பார்கள்; மனசிலே உள்ள சூது யாருக்குத் தெரியும்?" என்று சகோதரி சுலபமாகக் குத்திக் காட்டி, மனம் நொந்து கொள்வாள். இது பெண் மனத்தை பெண்ணே உணர முடியாத மூடத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆரம்பத்திலேயே இப்படி முனை பிசகி பிறரை எடை போடுவதனுல்தான் பற்பல இடையூறுகள் விளைகின்றன. எந்த அளவில் பிறர் விரும்புகிருர்களோ, அந்த எல்லைக்குள் நம் உரிமைகளை உபயோகிப்பதில்தான் சிறந்த சுகத்தைக் காண முடியும், என்பதை நாம் உணர வேண்டும்.

"உண்மையான அன்புடன் நம்மை வசியப்படுத்தி ஆட்டி வைக்கும் பெண்களிடம் எனக்கு பெரு மதிப்பு உண்டு. அது மனைவியாக இருக்கலாம்; அல்லது காதலியாக, சகோதரியாக, மதனியாக, மாமியாக, பிறர் மனைவியாக, மற்ற எவராகவும் இருக்கலாம். ஆனலும் அவள் சொற்படி நடப்பது தனி இன்பம். தூய்மையான அவ்வன்பின் வலிவைக் கண்டு, நமது சொந்தக் காரியங்களில் கூட, தவறிழைக்க அஞ்சுகிறது மனம்" என்று ஒரு நண்பர் எழுதுகிருர். சிவத்திடம் ஆங்காரம்தான் தென்படும். சக்தியிடம் அன்பு தவழும். பெண்ணின் இளகிய இதயம் கடூரமான மனிதனின் மனதைக் கூட நல்வழிப்படுத்தி விடுகிறது. ஆனல் மற்ருெரு ஸ்திரீயிடம் அவ்வுத்தமமான அன்பைப் பிரயோகிக்க முடியவில்லை; வெற்றி காண முடியவில்லை என்ருல் அது சகோதரிகளுக்கு மகா கேவலமல்லவா?

"எவ்வளவு பெரிய முட்டாளிடத்திலும், பைத்தியகாரனிடத்திலும், வம்பளந்தாலும் கூட, அந்தச் சம்பாஷணையிலிருந்து ஒன்றிரண்டு பொறுக்கான கருத்துக்களைக் கண்டு பிடித்து விடுவேன்" என்று யாரோ ஒரு பெரியவர் கூறினர். சகோதரிகள் தன்னைத் தவிர, மற்றவர்கள் எல்லோரையும் மகா பொல்லாதவர்களாக

எண்ணிக் கொள்கிறார்கள். தனக்குத் தெரிந்த எந்தப் பெண்ணும் தன்னைவிட புத்திசாலியாக இருக்க முடியாது என்பது ஸ்திரீ கர்வம். போகட்டும். மட்டமானவர்கள் கோஷ்டியிலிருந்தாவது புத்திசாலித்தனமான சுபாவங்களை கிரஹித்துக் கொள்ளலாகாதா? ஸ்திரீகளுக்கே பிரத்யேக உரிமையான வம்பளப்பு சபையிலிருந்து, நல்ல விஷயங்களைப் பொறுக்கியெடுக்க முடியாதா? அந்த சக்தியும், திறமையும் இல்லாவிட்டால், கெட்டிக்காரி என்று ஏன் ஜம்பமடித்துக் கொள்ள வேண்டும்?

அன்புள்ளவர்களிடத்தில் தான் அன்பாக நடந்து கொள்ள முடியும். எத்தனையோ அன்பானவர்கள் சகோதரிகள் அறியாமலேயே அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. எப்போதாவது அவர்கள் அன்பை நேரடியாக அறியும் போது, "அடடா! இவ்வளவு பிரியத்தையும், பற்றுதலையும் வைத்துக் கொண்டா நாம் நேசம் கொள்ளாமல் இருந்து விட்டோம்?" என்று ஆச்சரியமும், வருத்தமும் தோன்றுகிறது. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்றபடி, ஆங்காங்குள்ள உத்தம சகோதரிகளின் ஒழுக்கமான நடத்தையைக் கண்டு, தூர இருந்தே ரஸிப்பவர் பலர். நல்ல மனதுடையவர்களைக் கண்டு, மதிப்பும் மரியாதையும், வணக்கமும் வாழ்த்தும் மானசீகமாக அளிப்பவர் பலர். கற்பின் திறமையான நிர்வாகம் எந்தக் குலவதியினிடம் காணப்படுகிறதோ அவள் ஊர் புகழும் உன்னத நிலை யடைகிறாள். "நல்லாரைக் காண்பதுவும் நன்று; நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்று; அவரோடிணங்கி யிருப்பதுவும் நன்று!" என்ற சூத்திரப்படி, கலைமகளின் கடாக்ஷம் பெற்ற யுவதிகளின் அன்பு சுயநல மற்று எங்கும் வியாபித்திருக்க வேண்டும். கல்யாண காலங்களில், கோவில்களில், குளங்களில், சினிமா – டிராமாக்களில், பொதுவாக சந்தித்து இருக்கும் பலரிடையே, சுமுகமாக நடந்திருந்தால்தான் மற்றவரிடம் நல்லெண்ணத்தைப் பெற முடியும். கும்பலில் – கோஷ்டியில் ஒருவர்க்கொருவர் நேரடியாகப் பார்த்துப் பேசி பழகாமலிருப்பினும், என்றேனும் ஒரு நாள் நல்ல சேர்க்கைதானாகக் கூடிவிடுகிறது. ஊதாரித்தனமாக நடந்து கொண்ட சகோதரிகள் உடனே பிராபல்யம் பெற்றாலும் உயரிய பெயர் பெற முடியாது. ஆகவே அன்புள்ளவர்களைத் தேடி அலைந்து கொண்டிருப்பது வீண் வேலை. நல்ல அன்பாக இருந்தால் என்றாவது ஒரு நாள் தானாக வந்து சேரும் என்ற நம்பிக்கை வேண்டும். தாமதித்து நடை பெற்ற நேசமாக இருந்தாலும், அது அஸ்திவாரமுடன் கூடிய பலம் பெற்றதாக இருக்கும். சகோதரிகள் நம்மைச் சேர்ந்தவர்களைப் பற்றி இவ்விதம் உயர்ந்த நோக்கம் செலுத்துவார்களாக.

தன்னிடம் பேசுகிற மனிதரைத் தவிர்த்து, பிற ஆடவரின் குணாதிசயங்களைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதில் தனி மகிழ்ச்சி கொள்கிறாள் சகோதரி. கணவன், கொழுநன், மாமன், சகோதரன் யாராயிருப்பினும் பேசிக் கொண்டு நேரடியாக நிற்பவர் அவளுக்குப் பொருட்டல்ல. இதில் அர்த்தமே கிடையாது. அவசியமற்ற வர்ணனை அனர்த்தத்தில் முடிந்தாலும் முடியலாம். யாரைப் பற்றி, எதைப் பற்றிப் பேசுவதாயினும் காரணத்துடன்

பிரஸ்தாபிக்க சகோதரிகள் பழகிக் கொள்ள வேண்டும். தவிர இன்னொன்று. பதியாயிருப்பினும், உடன் பிறந்தவனுயிருப்பினும், மற்ற எவராயிருப்பினும், தமது அங்க அவயவங்கள் மீது சிரத்தையற்றவர்கள் போல் பேச்சில் லயித்து விடக் கூடாது. சரீர கோரங்களைக் காட்டி மயக்கி ஒருவரின் உண்மையான அன்பை— ஆதரவைப் பெற்றுவிட முடியாது. சுவாரஸ்யமான சம்பாஷணையில் மற்றவைகளைப் பற்றி மறந்து போய் விடுகிறது என்று பெண் சொன்னுல் அது மகா அபத்தம். ஆனல் பெண்ணுக்கு பிறரை வசியம் செய்யும் நோக்கம் இல்லை என்பதை நான் மறுக்கவில்லை. ஆயினும் பெண்மையற்ற இப்போக்கினல் பிறர் தவருன வழியில் பிரவேசிக்கக் கூடும். பிறர் உத்தமராக இருந்தால் அசூயைப் பட்டு ஒதுங்கிப் போய் விடுவார். ஆக, எப்படியிருப்பினும் நஷ்டம் முறையற்று நடந்து கொண்ட பெண்ணுக்குத் தான்.

சகோதரிகள் வார்த்தையாடுவதிலே நிதானமும், பய பக்தியும், பெருந் தன்மையும் இருக்க வேண்டும். சகோதரர் களாகவும், சகோதரிகளாகவும் எல்லாரையும் பாவிக்க வேண்டும் என்ற பிரசாரம் இன்னும் பிரசார அளவிலேயே இருக்கிறது. மனோபாவத்தை மாற்றக் காணேம்! 'தம்பி! தம்பி!' என்றும், 'அக்கா! அக்கா!' என்றும், ஒழுக்கத்திற்கு வேலி அமைத்து பழகி வந்தவர்களே, ஏதோ ஒருநாள் நிலைதவறி விடுகின்றனர். அன்பு முற்றினல் காதலாகப் பரிணமிக்கும் என்பது மெய்த்து விட்டது என்று கூறலாம். ஆனல் அன்பு வளர்ந்த விதம், சகோதர பாவத்தில் என் பதை மறந்தும், மறுக்க முடியாது.

பார்க்கப் போனல், ஆண் பெண்ணை ஆணுகவும், பெண் ஆணைப் பெண்ணுகவும் கருதி நேசம் பாராட்டிப் பழகினல் தவறுதல் ஏற்படக் காரணமே இல்லை. இப் புதுமுறை விசித்திரமாகத் தோன்றலாம். மனதார பெண்ணை ஆண் போலவும், ஆணைப் பெண் போலவும் பாவிக்க முடியுமா? என ஐய முறலாம். ஆம்; கஷ்டம் தான். ஆனல் முதன் முதலில் பழகும் போதே தன் இனத்தவராக மாற்றி நினைத்துக் கொள்ள முயற்சிப்பது சிரமமல்ல ஒவ்வொருவரும் இப்படி நினைக்க வேண்டும். அதுவும் முக்கியமாக சகோதரிகள் எண்ணவேண்டும். யுவன் தன் நண்பர்களைப் பெண்பாலாகக் கருதி 'வாடி!, போடி!' என்றழைத்துக் கொள்வதும்; யுவதி தன் தோழிகளை ஆண்பாலாகக் கருதி 'என்னப்பா,! சரிதாம்பா!' என்றழைத்துக் கொள்வதும் சர்வ சாதாரண வழக்கமாக இருந்துவரும் தமிழ் நாட்டில், நான் சொல்லும் முறை கஷ்டமானதல்ல. மேலும் மேற் சொன்ன பழக்கம் பெரும் தீமையை விளைவிக்கிறது என்று, பற்பல நாட்டு குழந்தை வளர்ப்பு ஆசிரியர்களும் ஆணித்தரமாகக் கூறுகின்றனர். ஆயினும் குழந்தை முதற்கொண்டே பால் முறையைக் கைவிடும் பழக்கம் மறைந்தபாடில்லை. மக்கள் மனேபாவம் இதைக் கையாள்வது கடினமில்லை என்று கருதினல், தன்னுடன் பழகும் மற்றவரைத் தன் இனமாக்கிக் கொள்வதும் தவறில்லை. அதனல் மோசமான காம விகார எண்ணங்கள் சிருஷ்டியாக இடமில்லாமல் நசித்துவிடும். பச்சையாக வார்த்தைகள் மூலம் ஆணி

டம் 'வாம்மா, போம்மா' என்று உச்சரிக்க முடியாவிடினும், மனதளவிலாவது எண்ணிக் கொண்டு நடந்தால் சகோதரிகளை தீய கருத்துக்கள் அணுகாமல் தடுக்கலாம்.

மது இல்லாத மலரினங்கள் மணம் பெற்று இருப்பதில்லை. அதைப் போல் தான் காராம் பசுவினிடம் கனமான எருமைப் பாலை எதிர்பார்க்க முடியாது. அன்பு, அடக்கம், பதவிசு என்பது பெண்மைக்குரிய லக்ஷணங்கள். அதைத் துறந்துவிட்டு பெண் பெண்ணாக வாழ முடியாது; பெண்ணுக்குரிய அந்தஸ்தை அடைய முடியாது. தனக்கே எல்லாம் தெரியும் என்ற சிறுமைப் பித்து கொண்டு, யாராயிருந்தாலும் கர்வத்துடன் நடந்து கொள்ளும் சகோதரி மீது எவருக்கும் நம்பிக்கை பிறக்காது; அநுதாபம் தோன்றாது. அனாதரவான அவல நிலையையே அவள் அடைய நேரிடும், நல்ல அறிவுடையவளாக இருப்பின் எக்காலமும் வீழ்ச்சி யடைய் முடியாது. சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பதைப் போல்!

அன்பு குளிர்ந்த நீர் போன்றது; அகம்பாவம் கொடிய வெப்பம் போன்றது. வாழ்க்கை என்ற வரியில் அன்பு நீர் வற்றி, சூரிய உஷ்ணமும் தாக்க ஆரம்பித்து விட்டால், பிரிக்கமுடியாத களிமண் பூமிகூட ஆயிரம் வெடிப்புகளாகப் பிளவு பட்டு விடும். பெண் சுதந்திரம் என்பது கணவன் கருத்துக்கு எதிர்மறையில் செல்வது தான் என்பது அனேக சகோதரிகளின் நினைப்பு. "அவருக்கு இவர்களைப் பிடிக்காது; எனக்கு எல்லாரும் தான் வேண்டும்" என்று சகோதரி கூறினால், அது விரிந்த மனோபாவமல்ல. அவருக்கே இஷ்டமில்லாத நியாயமாகத் தோன்றாத காரியத்தை சுயமரியாதையின் பேரால் பழி சுமத்தி அவள் ஏன் செய்ய வேண்டும்? குடும்பத்தின் நலன்களில் யார்யாருடைய ஒத்துழைப்புகள் அவசியம் என்பதை புருஷரால் நிர்ணயம் செய்ய முடியாதா? அப்படியே அவர் போக்கு பாதை தவறானதாக இருந்தால், அதைச் செப்பனிட அவர் மூலமே முயல வேண்டுமே யல்லாது, தனக்கென்று தனி வழி கடைபிடிப்பது தவறு. இந்தமுறை இறுதியில் அவள் யாரோ? நான் யாரோ? என்ற தீர்ப்பில் தான் தாம்பத்தியலட்சியமாகப் போய் விடும். இது சகோதரியின் மடத்தனத்தால் வரும் விளைவு அல்லவா? பதியின் நோக்கத்தை அநுசரிக்காமல், எதிர்வாதம் செய்வதும், தன் பிடிவாதத்திற்கு அவரை பலவந்தமாக இணங்க வைப்பதும், சரியான - பாராட்டக்கூடிய குணங்களல்ல இதில் இன்னும் விசித்திரம் என்னவென்றால், பெண் தன் வாயால், யார்யாரை கெட்டவர்கள் என்று தூற்றினளோ, அவர்களிடமே மறுபடி ஓடி நல்லபெயர் வாங்க நினைப்பதுதான்! "அன்று என்னமோ அப்படிப் பேசி விட்டார்கள். எப்போதும் அப்படி இருப்பார்களா?" என்பது இளகிய மனதிற்கு அத்தாட்சியாம்!

"நல்ல பெண்டாட்டியாக வாய்த்து விட்டாள். இல்லாவிட்டால் அவனின் அசட்டுத் தனத்தில் அந்தக் குடும்பம் எப்போதே ஓட்டாண்டியாகி இருக்கும்!" என்று எத்தனையோ பேர் கூறுகிறார்களே அதற்கென்ன சொல்ல முடியும் என்று சகோதரி உரிமைக்குப் பரிந்து பேசுபவர்கள் கேட்கக் கூடும். வாஸ்தவம். பால்க்காரி, தயிர்க்காரி,

கணக்கு முதல், வியாபார வரவு செலவு, உறவினர், நல்லது – கெட்டது வரை, ஆதிக்கம் செலுத்தும் குடும்பத்தலைவிகள் தமிழ்நாட்டில் அதுவும் கிராமங்களில் ஏராளமாக இருக்கின்றனர். மனைவியை அறியாமல் ஒருசிறு துரும்பை அசைக்கவும் சத்தியற்ற புருஷர்களும் புருஷர்களாக வாழ்ந்துதான் மடிகிறார்கள். ஆனால் அவையாவும் கீழ்த்தரமான குடும்பங்கள்! உயர் குலத்திற்கும் அவர்களுக்கும் ஸ்நானப் பிராப்தி கூட இல்லை. மட்டமான வாழ்க்கையைக் கடைபிடிக்கும் அவர்களால் ஒருவருக்கும் ஒரு பயனும் இல்லை. எங்கேயோ குயில் முட்டையிட்டது; எந்தக்காகமோ குஞ்சு பொரித்தது அதுவும் எந்த யிடத்திற்கோ பறந்து போய் விட்டது என்ற கதை தான். மனுஷனை அடிமைப் படுத்தி கூண்டில் அடைப்பது மனுஷியின் வெற்றியல்ல! கண்ணியமல்ல; முன்னேற்றமல்ல. காட்டு மிராண்டிகளாகப் பிறந்து வளர்ந்து, மடியும் எண்ணம் கொண்டவர்களைத்தவிர, போலி ஸ்திரீ திறமைக்கு போற்றுதல் கூறார். அதை எப்படி நாம் வரவேற்க முடியும்?

சகோதரிக்கு இதை எல்லாம் எதற்காக ஞாபகப் படுத்துகிறேன் என்றால், பதிக்கும், சதிக்கும் உள்ள குண வேறுபாடுகளின் காரணமாக, சகோதர உரிமைகளும், நன்மைகளும் பாதிக்கப் படக்கூடும் என்பதால் தான். மைத்துனனைக் கவனிக்காமல் பராமுகமாக இருந்தால், "உனக்கு நான்தான் வேண்டுமா அண்ணா? அவர் எனக்கு வேண்டியவராயிற்றே!" என்று கோபம் கொள்கிறாள்: மைத்துனரும், மைத்துனரும் நெருங்கி உறவாடினால், "உனக்கு என்னைவிட புது உறவு பெரிதாய்ப் போய்விட்டதா? நானில்லாவிட்டால் அவர் உனக்கு எப்படிக் கிடைத்திருப்பார்?" என்று அங்கலாய்க்கிறாள். இரண்டும் தவறான மனோபாவம். சகோதரனை வசியம் செய்து புருஷர் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டார். அதனால் ஏமாந்த சோணகிரியான சகோதரன் கையாலாகாத்தனமாக அவர் சொல்லுப்படி நம்புகிறார். நமது குறையை கவனிப்பவர் யார்? என்றெல்லாம் சகோதரியின் குமுறல் பலக்கிறது. சுத்த அறியாமை, அழுமூஞ்சித் தனம் இது! மற்றொரு மனிதனை ஏமாற்றும் திறமை யுள்ளவருக்கு மனைவியை ஏமாற்ற முடியாமல் போய்விடுமா? அவள் மற்ற நாலுபேரிடம் 'கோள்' சொல்லுவதற்கு விட்டு வைப்பாரா அவர்? உண்மை அர்த்தம் என்னவென்றால் அவரின் வார்த்தைகளிலே, சகோதரன் காட்டும் பக்தி, சிரத்தை சகோதரி வைப்பதில்லை. அதனால் அவர் அவளிடம் கூறும் ஒவ்வொரு வார்த்தையும், நம்புவதுமில்லை. நம்பிக்கையில்லாத ஒற்றுமை நீடிக்கும் என்று சொல்ல முடியாது. கணவன் மனைவி என்ற கட்டாய பாத்யதை குறுக்கிடினும், சந்தோஷம் நிலவாது. எப்படியாவது ஒவ்வொருவரிடமும் நல்ல பெயர் வாங்கவேண்டும் அதற்கு எதை, எவ்வளவு தியாகம் செய்வதாயினும் தயங்குவதில்லை! என்று கங்கணம் கட்டிக் கொண்டு எங்கும்பழக வேண்டும். எவர் மனதும் அசூயை கொள்ள இடமின்றி, களங்கமற்ற பால்ய உள்ளத்துடன் நடந்து கொள்ளட்டும். சகோதரியின் புகழ் திசை எட்டும் பரவாமலா போய் விடும்?

★

சிலப்பதிகாரம்

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.

மதுரைக் காண்டம்

காடுகாண் காதை

கௌந்தியடிகள், கோவலன், கண்ணகி மூவரும் சோலையை அடைதல்

(1—14)

கௌந்தியடிகள், கோவலன் கண்ணகியுடன் உறையூருக்கு வந்ததும் அங்குள்ள அருகன் கோவிலுக்கு மூவரும் சென்றனர். அந்தக் கோயிலில் அருகன் அருளால், மாலை மாலையாகப் பூக்கும் ஓர் அசோக மரம் உண்டு. அம்மரத்தின் கொழுமையான நிழலில், முக்குடைக் கீழ் ஆதியும் அந்தமுமில்லாத அருகக் கடவுள் செங்கதிர்ச் சூரியனின் ஒளி போன்ற பிரகாசத்துடன் வீற்றிருக்கிறார். மூவரும் அருகனைத் தொழுதனர். அதன் பின் அக்கோயிலிலுள்ள சமண முனிவரை வணங்கினர். திருவரங்கத்தின் சோலையில் சாரணர் தனக்குச் சொன்ன சிறந்த உபதேச மொழிகளைக் கௌந்தியடிகள் முனிவர்களுக்கு எடுத்துச் சொன்னார். வெகு தூரம் வழி நடந்த சலிப்பினால், உடனே புறப்பட மனமில்லாதவராய், அன்றிரவு அம்முனிவர்களுடைய இல்லத்திலேயே மூவரும் தங்கினர். அதிகாலையில் அவ்விடமிருந்து கிளம்பி, தெற்கே நோக்கிப் பிரயாணம் செய்து, நீர் வளப்பம் நிறைந்த வயல்களும் பொய்கையும் விளங்கும் ஓர் இளமரச் சோலையில் புகுந்தனர்.

திங்கள் மூன்று அடுக்கிய திருமுகக் குடைக்கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழ் ஒளி சிறந்து,
கோதை தாழ் பிண்டிக் கொழுநிழல் இருந்த
ஆதிஇல் தோற்றத்து அறிவனை வணங்கி;
கந்தன் பள்ளிக் கடவுளர்க்கு எல்லாம்,
அந்தில் அரங்கத்து அகன் பொழில் அகவையின்
சாரணர் கூறிய தகைசால் நன்மொழி,
மாதவத் தாட்டியும் மாண்புற மொழிந்து, ஆங்கு;
அன்று அவர் உறைவிடத்து அல்கினர் அடங்கித்
தென் திசை மருங்கின் செலவு விருப்புற்று,
வைகறை யாமத்து வாரணம் கழிந்து,
வெய்யவன் குணதிசை விளங்கித் தோன்ற,
வளநீர்ப் பண்ணையும், வாவியும் பொலிந்து, ஓர்
இளமரக் கானத்து இருக்கை புக்குழி;

[திங்கள் மூன்று அடுக்கிய — மூன்று நிலாக்களை அடுக்கி வைத்தாற் போன்ற; திருமுகக் குடைக்கீழ் — அழகிய மூன்று குடைகளின் கீழ்; செங்கதிர் ஞாயிற்று — சிவந்த கதிர்களை யுடைய சூரியனின்; திகழ் ஒளி சிறந்து — விளங்குகின்ற ஒளி போலச் சிறப்புற்று; கோதை தாழ் பிண்டி — மாலைகளாகப் பூத்துத் தொங்கும் அசோக மரத்தின்; கொழுநிழல் இருந்த — கொழுமையான நிழலில் இருந்த; ஆதி இல் தோற்றத்து — பிறப்பித்தவர் இல்லாத பிறப்பினையுடைய; அறிவனை வணங்கி — அருகக் கடவுளைத் தொழுது;

கந்தன் பள்ளி — (உறையூரிலுள்ள) நிக்கந்தன் கோயிலில் இருக்கும்; கடவுளர்க் கெல்லாம் — முனிவர்களுக் கெல்லாம்; அரங்கத்து அகன் பொழில் அகவயின் — திருவரங்கத்தில் உள்ள அகன்ற சோலையின் உள்ளே; சாரணர் கூறிய — சமண முனிவர் சொன்ன; தகைசால் நன்மொழி — பெருமை மிக்க நல்ல மொழிகளை; மாதவத் தாட்டியும் — பெரிய தவத்தினையுடைய கௌந்தியடிகளும்; மாண்பு உற மொழிந்து — சிறப்பு மிகும்படி எடுத்துச் சொல்லி;

அன்று அவர் உறை விடத்து — அன்று இரவில் அம் முனிவர்கள் இருந்த பள்ளியில்; அல்கினர் — மேலே வழிப் போகுதலை விட்டு; அடங்கி — தங்கியிருந்து; தென் திசை மருங்கின் செலவு விருப்புற்று — தெற்கு திசையில் செல்ல விரும்பி; வைகறை யாமம் — நாலாம் சாமத்தில்; வாரணம் கழிந்து — உறையூரை விட்டு; வெய்யவன் குணதிசை விளங்கித் தோன்ற — சூரியன் கீழ்த் திசையில் விளக்கமாய்ப் புலப்பட; வளநீர்ப் பண்ணையும் — வளப்பமான நீரையுடைய வயல்களும்; வாவியும் — பொய்கைகளும்; பொலிந்தது — சிறந்து விளங்கியதாகிய; ஓர் இளமரக் கானத்து இருக்கை — இளம் மரங்களையுடைய ஒரு சோலையில்; புக்குழி — புகுந்த பொழுது.

[சந்திராதித்தியம். நித்திய விநோதம், சகல பாசனம் என்று அருகனுக்கு மூன்று குடைகள் உண்டு. இவற்றை "திருமுகக்குடை" என்றார். கோதை — மாலை; பிண்டி — அசோக மரம். அம்மரம் அருகனுடைய ஆணையால் மாலைகளாகவே பூக்கும்.

அந்தில், ஆங்கு இவைகள் அசைச் சொற்கள்.

அல்குதல் — குறைவுபடுதல், அதாவது வழிப்போக்கர் நடை தளர்ந்து தங்குதல். வாரணம் — உறையூர்.]

★

பாண்டியன் புகழை வாழ்த்தும் ஓர் அந்தணன்

[15—34]

மூவரும் சோலையை அடைந்த போது, அங்கு ஒரு அந்தணன் இருந்தான். அவன் பாண்டிய குலத்தின் பெருமைகளை எடுத்துச் சொல்லிப் பாண்டிய மன்னனை வாழ்த்திக் கொண்டிருந்தான். இந்திரனுக்கும் உக்கிர பாண்டியனுக்கும் போட்டி ஏற்பட்டதைப்பற்றிப் பலகதைகள் உண்டு. ஒரு காலத்தில் இந்திரன் பாண்டியன் மேல் பொறாமை கொண்டு, மதுரையை அழிக்கக் கடலை ஏவினான். பாண்டியன் கோபங்கொண்டு கடலின் மேல் தன் வேலை எறிந்து கடலைக் கால் மட்டத்திற்கு வற்றவைத்து அடக்கினான். அப் பகையைப் பொறாமல், கடல் பொங்கி வந்து பாண்டியனுக்குச் சேர்ந்த குமரி நாடு, பஃறுளியாறு இவற்றை யெல்லாம் அழித்து நீருள் மூழ்கச் செய்தது. இப்படித் தன் நாட்டின் சில பகுதிகளை இழந்ததும், பாண்டியன் வடக்கேயுள்ள இமயமலை, கங்கை யாறு இவைகளைக் கைப்பற்றினான். அங்ஙனம் செய்த பேரரசன் பாண்டியன் வாழ்க! என்று அந்தணன் வாழ்த்தினான். அனேக ஆயிர வருஷங்களுக்கு முன் இந்தியாவின் தென் பாகத்தில் குமரிக் கண்டம் என்று ஒரு பெரிய நிலப்பகுதி இருந்த தென்றும், அதைக் கடல் கொண்டதென்றும் பூமி ஆராய்ச்சியாளர் முடிவுக்கு வந்திருக்கின்றனர். இந்தக் கண்டத்திற்கு "மறைந்து போன லெமூரியா" என்று பெயர் சொல்வதுண்டு. இந்த நிகழ்ச்சி பழந்தமிழர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

ஒரு காலத்தில் பாண்டியன் இந்திர சபைக்குப் போன போது, கனத்த மாலை ஒன்றை இந்திரன் அவன் கழுத்தில் போட்டான். மாலையின் கனத்தைத் தாங்காமல் பாண்டியன் தவிப்பான் என்பது இந்திரனுடைய எண்ணம். ஆனால் அக் கனத்த மாலையைத் தாங்கி இந்திரன் வெட்கப்படும்படி, பாண்டியன் சபையில் வீற்றிருந்தான்.

தன்னுடைய கைவளையை வீசி இந்திரன் மகுடத்தை ஒரு சமயத்தில் பாண்டியன் வீழ்த்தினான். தன் தலைவனை இப்படி அவமானம் செய்தானே என்று மேகம் கோபங் கொண்டு பாண்டியன் நாட்டில்

நுழையாமல் சென்றது. மேகம் நுழையாமல் போகவே நாட்டில் மழை இல்லாமல் போயிற்று. இப்படிச் செய்த மேகத்தை பாண்டியன் உடனே சிறைப்படுத்தி, தன் நாட்டில் எப்பொழுதும் மழை வளம் குன்றாமல் செய்தான்.

இப்படிப் பலவாறாகப் பாண்டியன் புகழை வாழ்த்திக் கொண்டிருந்த அந்தணனை நோக்கி "உம்மூர் யாது? நீர் இங்கு வந்த காரணம் என்ன?" என்று கோவலன் கேட்க அந்தணன் தன் வரலாற்றைச் சொல்லுகின்றான்.

"வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை!
ஊழிதொறு ஊழிதொறு உலகம் காக்க!
அடியின் தன் அளவு அரசர்க்கு உணர்த்தி
வடிவேல் எறிந்த வான் பகை பொருது,
பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடும் கடல் கொள்ள:
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு,
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி!;
திங்கள் செல்வன் திருக்குலம் விளங்கச்
செங்கண் ஆயிரத்தோன் திறல்விளங்கு ஆரம்,
பொங்கு ஒளி மார்பில் பூண்டோன் வாழி!;
முடிவளை உடைத்தோன் முதல்வன் சென்னி என்று
இடி உடைப் பெருமழை எய்தாது ஏக,
பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப,
மழை பிணித்து ஆண்ட மன்னவன் வாழ்க!" என;
தீதுதீர் சிறப்பின் தென்னனை வாழ்த்தி
மாமுது மறையோன் வந்திருந் தோனை,
"யாது நும் ஊர்? ஈங்கு என் வரவு?" என,
கோவலன் கேட்ப, குன்றாச் சிறப்பின்
மாமறையாளன் வருபொருள் உரைப்போன்;

[வாழ்க! எங்கோ மன்னவர் பெருந்தகை — எமது அரசனாகிய வேந்தர் வேந்தன் வாழ்வானாக; ஊழிதொறு ஊழிதொறு உலகம் காக்க — பல ஊழிக்காலம் வரை இவ்வுலகை ஆள்வானாக! அடியின் — கால் மட்டத்திற்கு; தன் அளவு — தன் (கடலின்) அளவு (வற்றும்படி செய்து); அரசர்க்கு உணர்த்தி — (அதை) மற்ற அரசர்களுக்குக் காட்டி; வடிவேல் எறிந்த வான்பகை — கூறிய தனது வேலைத் தன்மேல் (கடல்மேல்) எறிந்த அப்பெரும் பகையை; பொருது — (கடலானது) பொறுக்கமாட்டாமல்; பஃறுளியாற்றுடன் — பஃறுளி என்னும் ஆற்றோடே; பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் — பலவான பக்க மலைகளையுடைய குமரி நாட்டையும் சேர்த்து; கொடும் கடல் கொள்ள — கொடிய கடல் கொண்டு போக; வடதிசைக் கங்கை

யும் — வட திசையிலுள்ள கங்கை ஆற்றையும்; இமயமும் கொண்டு— இமய மலையினையும் கைக்கொண்டு; தென் திசை ஆண்ட —; தென்னவன் வாழி — பாண்டியன் வாழ்க;

திங்கள் செல்வன் — நிலாவாகிய செல்வனின்; திருக்குலம் விளங்க — சிறந்த குலமானது என்றும் விளங்கும்படி; செங்கண் ஆயிரத்தோன் — ஆயிரம் கண்களையுடைய இந்திரன் இட்ட; திறல் விளங்கு ஆரம் — வலிமை நிறைந்த மாலையை; பொங்கு ஒளி மார்பில்— ஒளி நிறைந்த தன் மார்பில்; பூண்டோன் வாழி — அணிந்து கொண்ட பாண்டியன் வாழ்க;

முதல்வன் சென்னி — தனது தலைவனாகிய இந்திரனின் தலையில் உள்ள; முடி — முடியை; வளை உடைத்தோன் என்று — இவன் (பாண்டியன்) கைவளையால் உடைத்தான் என்று; இடி உடைப் பெரு மழை — இடி ஓசையை உடைய பெரு மேகம்; எய்யாது ஏக — அவன் (பாண்டியன்) நாட்டில் நுழையாது போகவே; பிழையா விளையுள் — ஒரு காலத்தும் கெடாத விளைச்சலையுடைய; பெரு வளம் சுரப்ப — தன் நாட்டின் பெரும் வளம் செழிக்கும்படி; மழை பிணித்து ஆண்ட — மேகத்தைச் சிறைப்படுத்தி வைத்து ஆண்ட; மன்னவன் வாழ்க என —;

தீது தீர் சிறப்பின் — குற்றமற்ற சிறப்பினையுடைய; தென்னனை வாழ்த்தி — பாண்டியனை வாழ்த்திக் கொண்டு; மாமுது மறையோன்— மிகப் பழைய வேதத்தினை அறிந்த அந்தணனாகிய; வந்திருந்தோனை — அங்கு வந்திருந்த அவனை; யாது நும் ஊர் —; ஈங்கு என் வரவு என — இங்கே வந்த காரணம் என்ன என்று; கோவலன் கேட்க —; குன்றாச் சிறப்பின் — குன்றாத சிறப்பினையுடைய; மாமறையாளன் — சிறந்த அந்த அந்தணன்; வரு பொருள் உரைப்போன் — தான் வந்த காரணத்தைச் சொல்லுகின்றவன்;

[வடி — கூர்மை; அடுக்கம் — பக்க மலைகள்; கோடு — மேட்டு நிலம்;

உக்கிரவன்மன் என்னும் பாண்டியன் தன் வேலை எறிந்து கடல் நீர் வற்றும்படி செய்ததும், இந்திரன் பூட்டிய கனத்த மாலையைத் தாங்கினதும், இந்திரன் முடிமேல் தன் கைவளையை எறிந்ததும், மேகத்தைச் சிறையிட்டதும், திருவிளையாடற் புராணத்தில் சொல்லப் படுகின்றன.]

★

அந்தணன் வரலாறு

(35—57)

"நான் குடகு மலையிலுள்ள மாங்காடு என்னும் ஊரில் வசிப்பவன். விரிந்த அலைகளையுடைய காவிரி யாற்றிலிருக்கும் சீரங்கத்தில் பலரும் தொழுதேத்தும்படி ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேஷனை

படுக்கைமேல் திருமால் பள்ளி கொண்டிருக்கிருன். அந்தக் காட்சியானது பொன்மலையின் மீது நீலமேகம் படிந்தது போலிருக்கிறது.

அருவிகள் ஓடுகின்ற திருவேங்கட மலையின் உச்சியில், துஷ்டரை வதைக்கும் சக்கிரத்தை ஒரு கையிலும், பால் போன்ற வெண் சங்கை மற்ருெரு கையிலும் ஏந்தி, மார்பில் அழகு விளங்கும் மாலையை அணிந்து, பொன்னுடை உடுத்தி செங்கண் திருமால் நிற்கின்ருன். கார்மேகம் மின்னலான ஆடை உடுத்தி, கையில் வில் ஏந்தி, சூரியன் ஒரு புறமும், சந்திரன் ஒருபுறமுமாக நடுவில் நின்றது போலிருக்கின்றது இந்தக் காட்சி.

இவ்விதம் திருமால் பள்ளிகொண்ட கோலத்தையும் கண்ணாரக் கண்டு களிப்பதற்கு வந்தேன். வழியில் பாண்டிய நாட்டின் இயற்கை வளப்பங்களையும், செயற்கை மகிமையையும் கண்குளிரக் கண்டு அனுபவித்தேன். ஆகையால் இவற்றிற்குக் காரணமாகிய பாண்டிய மன்னனை வாழ்த்திக் கொண்டிருக்கிறேன்" என்று அந்தணன் கூறினன்.

"நீல மேகம் நெடும்பொன் குன்றத்துப்
பால் விரிந்து அகலாது படிந்தது போல,
ஆயிரம் விரித்து எழுதலையுடை அரும் திறல்
பாயல் பள்ளி பலர் தொழுது ஏத்த,
விரி திரைக் காவிரி வியன்பெரும் துருத்தித்
திரு அமர் மார்பன் கிடந்த வண்ணமும்;
விங்கு நீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்கு உயர் மலையத்து உச்சி மீமிசை,
விரிகதிர் ஞாயிறும், திங்களும் விளங்கி
இரு மருங்கு ஓங்கிய இடை நிலைத் தானத்து
மின்னுக் கோடி உடுத்து, விளங்குவில் பூண்டு,
நல் நிற மேகம் நின்றது போலப்
பகை அணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி,
நலம்கிளர் ஆரம் மார்பின் பூண்டு,
பொலம்பூ ஆடையின் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்;
என்கண் "காட்டு" என்று, என் உளம் கவற்ற,
வந்தேன்; குடமலை மாங்காட்டு உள்ளேன்;
தென்னவன் நாட்டுச் சிறப்பும் செய்கையும்
கண்மணி குளிர்ப்பக் கண்டேன்; ஆதலின்,
வாழ்த்தி வந்திருந்தேன்; இது என் வரவு" என;
நீத்திறம் புரிந்தோன் செப்பக்கேட்டு;

[நீல மேகம் — நீல நிறமுடைய மேகம்; நெடும் பொன் குன்றத்து — நீண்ட பொன் மலையின் மீது; பால் விரிந்து அகலாது — அம்மலையின் பக்கங்களில் விரிந்து செல்லாமல்; படிந்தது போல —

அம்மலையின் அளவாகப் படிந்தது போல; விரித்து எழு — பரப்பி எழுந்த; ஆயிரம் தலை — ஆயிரம் தலைகளையுடைய; அரும் திறல் — அரிய வலிமையையுடைய; பாயல் பள்ளி — பாயாகிய படுக்கை மீது; பலர் தொழுது ஏத்த — ; விரிதிரைக் காவிரி — விரிந்த அலைகளையுடைய காவிரி ஆற்றின்; வியன் பெரும் துருத்தி — மிகப் பெரிய ஆற்றிடைக் குறையில்; திரு அமர் மார்பன் — திருமகள் விரும்பி உறையும் மார்பினையுடைய திருமால்; கிடந்த வண்ணமும் — படுத்துக் கிடந்த கோலத்தையும்;

[துருத்தி — ஆற்றிடைக் குறை, அதாவது ஆற்றின் நடுவில் இருக்கும் சிறு தீவு. இங்கு அது சீரங்கத்தைக் குறித்தது.]

வீங்கு நீர் அருவி — மிக்க நீரையுடைய அருவிகள் ஓடுகின்ற; வேங்கடம் என்னும் ஓங்கு உயர் மலையத்து — திருவேங்கட மலை என்ற ஓங்கி உயர்ந்த மலையின்; உச்சி மீமிசை — உச்சியின் மேல்; விரி கதிர் ஞாயிறும் — விரிந்த ஒளியையுடைய கதிரவனும்; திங்களும் — நிலாவும்; விளங்கி இரு மருங்கு ஓங்கிய — விளக்கமாக இரு பக்கத்திலும் சிறந்திருக்கின்ற; இடை நிலத்தானத்து — அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட இடத்தில்; மின்னுக் கோடி உடுத்து — மின்னலாகிய புது ஆடையை உடுத்தி; விளங்கு வில் பூண்டு — விளங்குகின்ற வில்லைக் கையிலே பிடித்து; நல் நிற மேகம் நின்றது போல — நல்ல நிறத்தையுடைய மேகம் நின்றாற் போல்; பகை அணங்கு ஆழியும் — பகைவர்களை வருத்துகின்ற சக்கரமும்; பால் வெண் சங்கமும் — பால் போன்ற வெள்ளிய சங்கும்; தகை பெறு தாமரைக் கையின் ஏந்தி — அழகு பெற்ற தாமரை போன்ற தன் கைகளில் ஏந்தி; நலம் கிளர் ஆரம் — அழகு விளங்குகின்ற மாலையை; மார்பின் பூண்டு — தன் மார்பில் அணிந்து; பொலம்பூ ஆடையின் — பொன்னாலான பூத் தொழிலையுடைய ஆடையோடு; பொலிந்து தோன்றிய — அழகு பெற விளங்கிய; செங்கண் நெடியோன் — சிவந்த கண்களையுடைய திருமால்; நின்ற வண்ணமும் — நிற்கின்ற கோலத்தையும்;

[நீல மேகம் திருமாலுக்கும், கதிரவன் சக்கரத்திற்கும், நிலா வெண் சங்கிற்கும், மின்னல் ஆடைக்கும், வில் ஆரத்திற்கும் உவமை. வீங்கு — நிறைந்த; தகை — அழகு; பொலம் — பொன்.]

என் கண் காட்டு என்று — என்னுடைய கண்கள் 'காட்டுவாயாக' என்று; என் உளம் கவற்ற — என்னுடைய உள்ளத்தைத் துன்பம் செய்தமையால்; வந்தேன் — புறப்பட்டு வந்தேன்; குடமலை மாங்காட்டு உள்ளேன் — குடகு மலையிலுள்ள மாங்காடு என்னும் ஊரில் வசிப்பவன்; தென்னவன் நாட்டுச் சிறப்பும் — பாண்டிய நாட்டின் இயற்கை வளப்பங்களையும்; செய்கையும் — தொழில் வளங்களையும்; கண்மணி குளிர்ப்பக் கண்டேன் ஆதலின் — என் கண்கள் குளிரப் பார்த்தேன் ஆகையால்; வாழ்த்தி வந்திருந்தேன் — இத்துணைக்கும் காரணமான அப்பாண்டியனை வாழ்த்திக் கொண்டே வந்தேன்; இது என் வரவு — இதுதான் என் வரலாறு என்று; தீத்திறம் புரிந்தோன் — தீயை வழிபடுகின்ற அந்தணன்; செப்பக் கேட்டு — சொல்லக் கேட்டு;]

(தொடரும்)

தேன்சிட்டு

பி. பி. எஸ்.

★

தாயார்:-

பாரடி, பாப்பா! வானத்திலே
பறந்து திரியுதோர் தேன்சிட்டு!

குழந்தை:-

அழகிய சின்னக் குருவியதை
அம்மா பிடித்துக் கொடுத்திடடி!
‘சிப்சிப்’ என்று கத்துதம்மா,
சிறகை யடித்துப் பறக்குது பார்!

தாயார்:-

கண்ணே! நீயும் தேன் சிட்டும்
கண்கள் இரண்டு போலன்றோ!
மண்ணில் பிறந்த சீவன்கள்
மகிழ்ந்து வாழ்ந்திட வேணுமடி!
சிட்டைப் பிடித்துக் கொடுத்திட்டால்
சின்னச் சீவன் துன்பமுறும்!
பட்டு ரோஜா மலரின் மேல்
பாயுது பாரந்தத் தேன் சிட்டு

குழந்தை:-

அப்படி யானல் வேண்டா ‘ம்மா!’
அங்கே சுகமாய் இருக்கட்டும்!
என் போல் எந்த உயிரையுமே
எண்ணிப் பார்ப்பேன் இனிமேலே!

சென்னையில் இரண்டு நாட்கள்

"கே. வி"

சென்னையிலே இப்போது என்ன என்று யாரும் கேட்க மாட்டார்கள்! இதுதான் கிரிஸ்மஸ் சீசன் ஆயிற்றே! சென்னையிலே என்றதும் தமிழிசைக் கச்சேரிகள் சங்கீதக் கச்சேரிகள், நாடகங்கள் ஆடல் பாடல்கள், கண் காட்சிகள், பந்தாட்டங்கள் எல்லாம் கண்கொள்ளாக் காட்சிகளாகக் கண் முன் வந்து நிற்கிறதல்லவா?

ஆனால் நான் இங்கே குறிப்பிடுவது சென்னையிலே, டிசம்பர் 14 15 தேதிகளில் நடந்த தமிழ் எழுத்தாளர் இரண்டாவது மகா நாட்டைப் பற்றியது. பிரசித்தி பெற்ற முதல் எழுத்தாளர் மகாநாடு கோவையில் அற்புதமாக, ஆனந்தமாக, அமோகமாக நடந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதைத் தொடர்ந்து இந்த இரண்டாவது மகாநாடு சென்னையிலே நடை பெற்றது, இரண்டு வருஷம் கழித்தாவது! இந்த மகாநாட்டுக்குப் பிரபல எழுத்தாளரான திரு பெ. தூரன் அவர்கள் தலைமை வகித்தார்கள். சிறந்த தமிழ்க் கலைஞரான அவர் இம் மகாநாட்டுக்கு தலைமை வகித்ததே தமிழ் எழுத்தாளர்கள் பெருமைப்படக் கூடிய விஷயமாகும். மகா நாட்டை நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் திறந்து வைத்தார்கள். அவர்கள் திறப்புரையில் தமிழ் மரபு தமிழ் நாடு, தமிழ் அரசு, தமிழ்ப் பண்பு என்பது பற்றிய ஒரு சிறந்த ஆராய்ச்சி நிறைந்த பிரசங்கத்தைச் செய்தார்கள்.

தூரன் அவர்கள் தலைமைப் பிரசங்கம் எழுத்தாளர்களுக்கு மிகவும் பயன் தரத்தக்கதாக இருந்தது.

"தமிழானது பல துறைகளிலே வளர்ச்சி பெற வேண்டும். தமிழர்களது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட சிறந்த நவீனங்கள், நாடகங்கள் பல வெளியாக வேண்டும். கட்டுரைகள் உயர்ந்த முறையிலேயும், ஹாஸ்யம், வஞ்சப் புகழ்ச்சி முதலிய பலவகைப் பட்ட சுவைகளுடன் சமூக ஊழல்களை எடுத்துக் காண்பிப்பனவாகவும் எழுதப்பட வேண்டும்" எனவும் குறிப்பிட்டார். அவருடைய பிரசங்கத்தில் பாரதியாருடைய கருத்துக்களை அங்கங்கே வற்புறுத்தித் தாம் பாரதிப்பித்தர் என்பதையும் ஞாபகப் படுத்தினார்.

இந்த மகாநாட்டில் கல்வி மந்திரி டி. எஸ். அவனுசிலிங்கம் அவர்களும் கலந்து கொண்டு எழுத்தாளர்களுக்குச் சில அரிய யோசனைகளைச் சொன்னார்.

அரசியல் கட்சி வேறுபாடுகளுக்காகத் தமிழ் எழுத்தாளர்கள் என்றும் வேறுபட்டிருக்க வேண்

டிய அவசியமே இல்லை என்பதை வசந்தம் செயல் மூலம் நிரூபித்துக் கொண்டு வருகிறது. அதையே கோவை மகா நாட்டில் தெளிவாகக் கண்டோம். இந்த இரண்டாவது மகா நாட்டிலும் நன்கு கண்டோம். மகா நாட்டில் மூன்று பேர் முக்கிய பிரசங்கிகளாகப் பிரகாசித்தார்கள்.

ம. பொ. சிவஞானக்கிராமணியார், பா. ஜீவானந்தம், சி. என். அண்ணாதுரை ஆகிய மூவரும் ஒன்றாக விளங்கியது, தெற்கு கிழக்கு மேற்கு ஆகிய திக்குகள் ஒன்றாகத் தோன்றிய விந்தையை விளைவித்தது!

இரண்டாவது நாள் தீர்மானங்களின் மீது எழுந்த விவாதங்கள் காரசாரமாக இருந்தன. இது ஒருவேளை மகா நாட்டில் ஆகார விஷயத்தில் ஏற்பட்ட கோளாறுகளாகவும் இருக்கலாம். அருகிலே அடிக்கடி அலறித் தன்னை விளம்பரப் படுத்திக் கொண்டிருந்த ரயில்வே எஞ்சினையும், கொட்டுகிற மழையையும், சாப்பாட்டையும் மறந்து எழுத்தாளர்கள் தாங்கள் எழுத்தாளர்கள் மட்டுமல்ல சிறந்த பேச்சாளர்கள் என்பதையும் காட்டி விட்டார்கள். இடையிடையே தலைவர் மணி அடித்துப் பிரசங்கிகளை அமரச் செய்த காட்சி வேடிக்கையாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் எழுத்தாளர் அனைவரும் ஒரு முகமாகத் தலைவருடைய திறமையை புகழ ஆரம்பித்து விட்டார்கள். இந்த மகா நாட்டிலும் சில நல்ல தீர்மானங்கள் செய்யப்பட்டன. அதை நடை முறையில் அமுல் செய்ய தலைவர் வாக்குக் கொடுத்திருக்கிறார். 'இம்மகா நாட்டில் எழுத்தாளர்கள் தங்களுக்கென, தங்கள் வாழ்க்கைக்கென திட்டங்கள் ஒன்றும் செய்து கொள்ளவில்லையே என்று ஒரு சிலர் குறைபட்டார்கள். உண்மை தான். ஆனால் அதை மகா நாட்டுத் தீர்மானங்களின் மூலம் மட்டும் சாதித்து விட முடியாது. ஜில்லாக்கள் தோறும் சங்கங்கள் நிறுவி, மத்திய சங்கத்தைப் பலப்படுத்தி அரசியலாரும் பொது ஜனங்களும் உணரும்படியாகச் செய்ய வேண்டும். அப்போது தான் எழுத்தாளர்கள் தங்கள் சுயதேவைத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர முடியும். எழுத்தாளர்கள் வருடம் ஒரு தடவை கூடிக் கலைவதுமல்லாமல் தங்களை, தங்கள் சங்கங்களை பலப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். சென்ற மகாநாடு என்ன சாதித்தது என்று கேட்பவருக்கு தலைவரே பதில் சொல்லியிருக்கிறார்.

"கோவையில் கூடிய மகாநாடு ஒரு பெரிய காரியத்தைச் சாதித்திருக்கின்றது. அம் மகாநாடு தான் முதன் முதலாக வெற்றிகரமாக எழுத்தாளர்களை ஒருங்கே கூட்டிற்று. அம் மகாநாடு தான் எழுத்தாளர் சங்கத்திற்கு அடி கோலிற்று. அதுவே தான் இந்த மகா நாட்டிற்கும் காரணமாக இருந்திருக்கிறது. ஆதலால் அம் முதல் மகா நாட்டைப்பற்றி பெருமை கொள்ள முடியும். எழுத்தாளர் சங்க வரலாற்றில் கோவை மகா நாட்டிற்கு ஒரு முக்கிய ஸ்தானம் உண்டென்பது தான் எனது துணிவு."

இந்த மகாநாட்டுக்கும் சிலோன் உள்பட வெளியூர்களிலிருந்து பல எழுத்தாளர்கள் வந்து கலந்து கொண்டார்கள். ஆனால் சென்னை எழுத்தாளர்களில் சிலர்

மட்டும் ஏனோ இந்த மகா நாட்டில் கலந்து கொள்ளவில்லை. அவர்களுடைய சுய முயற்சியில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை போலும். இதற்காகவும் அடாத மழையிலும் விடாது மகா நாட்டை நடத்திய மகா நாட்டு நிர்வாகிகளைப் பாராட்டாமல் இருக்கவே முடியாது.

இந்த இரண்டாவது எழுத்தாளர் மகா நாட்டின் பரிபூரண வெற்றிக்குக் காரணமாக இருந்த நாரண துரைக்கண்ணன், ரா. நா. ஆகியவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவர்களின்றேல் மகா நாடு இல்லை! மகா நாடென்றால் ரா. நாவும் துரைக் கண்ணனும் தான் கண் எதிரே தோன்றுகிறார்கள். அப்பப்பா! அவர்கள் இரண்டு பேரும் பட்ட கஷ்டத்தையும் சந்தோஷத்தையும் சொல்லவே முடியாது! அவர்களுக்குச் சந்தோஷம் என்னவென்றால், வந்த எழுத்தாளர்கள் எல்லோரும் நிம்மதியாகத் திரும்பிப் போனார்களே என்பது தான்!

காரியதரிசிகளான ''நவயுவன்'' முத்து சாமியும், பாசுவும் மும்முரமாகப் பாடு பட்டார்கள். அவர்கள் வாழ்க! எழுத்தாளர் அனைவரும் வாழ்க!

★

கவிஞா!

'விசாகன்'

வண்ணமயில் நடனத்தில் வனப்புக் கண்டாய்
வான் தவழும் முகில்களிடை வனப்புக் கண்டாய்
தண்ணிலவின் வடி வமதை எழிலில் மிக்க
தையலர்தம் வதனமதற் குவமை கண்டாய்
பெண்மையினில், இள நகையில் வனப்பைக் கண்டு
பெற்றெடுத்த தாய்நாட்டை மறப்ப துண்டோ?
கண்ணதன்முன் மக்களினம் ஓல மிட்டுக்
கதறுகிற நிலைமைதனைக் காணாய் அந்தோ!

நாடெலாம் பஞ்சமெனும் பெருந்தீ யாலே
நரிகூவும் பிணக்காடாய் நலிதல் காணாய்
பீடெலாம் நிறைந்தயிந்தப் பார தத்தின்
பெருங்குடிகள் புலம்புகிற நிலையைப் பேசாய்
கேடலாம் நிறையடிமை போக்க மக்கள்
கிளர்ந்துவரும் புதுமைதனைப் பாட மாட்டாய்
வீடெலாம் தீப்பற்றி எரியும் போது
வீணையொடு பாடுமிழி செயலோ செய்வாய்?

நட்பும் காதலும்

["தென்றல்"]

நகரின் எல்லா பாகங்களும் அசாதாரணமான அமைதியில் மூழ்கி ஆழ்ந்து கிடந்தன. மாலை சுமார் எட்டுமணியிருக்கலாம். வானிலே சந்திரன் வலம்வரப் பயப்பட்டவன் போல மேகத்திரையினூடே ஒளிந்து கொண்டிருந்தான். நட்சத்திரங்கள் கூட ஒளி வீசவில்லை. ஆனால் மிகவும் பயங்கரமான பேய்க் காற்றுதான் அந்த அமைதியைக் கெடுத்துக் கொண்டிருந்தது.

வீதிகளில் விளக்குகள் ஒன்று கூட ஏற்றப்படவில்லை. ஜன நடமாட்டமோ, அன்றி போக்கு வரவு சாதனங்களோ நடைபெறவில்லை. ஆனால், சிறிது நேரத்திற்கு ஒரு முறை ஜப்பானிய ராணுவ லாரிகள் தான் அங்குமிங்கும் அவசரமாக ஓடிக்கொண்டிருந்தன.

அன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கீழ்த்திசைக் கோட்டையான சிங்கப்பூர், ஷோனனாக உருமாறிய தினம். ஏகாதிபத்திய அடிமைகள் ஜப்பானிய அடிமைகளாக மாறுதலடைந்த நாள். எனவே, அங்குள்ள இந்தியர்கள், மலேயாக்காரர்கள் முதலியோரின் உள்ளங்கள் பயத்தினால் பீடிக்கப்பட்டிருந்தன.

மிஸ். மேரி தேவஇரக்கம் இந்தப் பயத்திற்கு விலக்கானவள் அல்ல. இருபத்திரண்டு வயதிருக்கலாம். எழிலின் எல்லையாகக் கருதப்பட்டாள். நீண்ட கரிய கூந்தலும், அகன்ற நெற்றியும், பெரிய விழிகளும், கூரிய மூக்கும் புன்னகை தவழும் இதழும் அவளுடைய செந்நிற தேகத்திற்குத் தனி வசீகரத்தை யளித்தன. இண்டர்மீடியட் வரை படித்தவள். தன்னுடைய ஒரே பெண்ணாகிய மேரியை டாக்டர் தேவ இரக்கம் சிறந்த முறையில் பழக்கியிருந்தார். சீர்திருத்த மனப்பான்மையும், சஞ்சலமற்ற சுபாவமும், வயிரம் பாய்ந்த – ஆனால் எளிதில் உருகும் – உள்ளமும் கொண்ட மேரி தேவ இரக்கத்தைக் காண்பவர்கள் அவள் மீது தனி மதிப்பும் அன்பும் கொள்வார்கள். தாயை இழந்ததும் தந்தையுடன் அங்கு வசித்து வந்தாள்.

ஜப்பானியர் பெரும் போராட்டம் நடத்தி சிங்கப்பூரைக் கைப்பற்றவில்லை என்பது பிரசித்தம். ஆயினும் சிற்சில இடங்களில் சாதாரண மிஷின் பீரங்கித் தாக்குதல் நடைபெற்றுத்தானிருந்தது. அவ்விடங்களில் காயம் பட்டோரைக் காப்பாற்றவும் பீதியடைந்த மக்களுக்கு தைரியம் கூறவும் சென்றிருந்தார் பரோபகாரியான டாக்டர் தேவ இரக்கம்.

ஹாலிலுள்ள கடிகாரம் ஒன்பது தடவை அடித்து ஓய்ந்தது. பயத்தினால் என்றும் மயங்காத மேரி, சற்று முகத்தில் கலவரந் தோன்ற, தன்னுடைய நிலைமையைப் பற்றி சிந்தனை செய்து

கொண்டிருந்தாள். வீட்டில் அவளைத்தவிர வேறு யாருமே கிடையாது. வேலைக்காரன் அன்று வரவில்லை. சமையற் காரக்கிழவி யுத்தத்தால் பாதிக்கப் பட்டிருக்கும் பாகத்தில் வசித்து வந்த தன்னுடைய பேரன் என்ன வானன் என்று விசாரிப்பதற்காக மத்தியானம் சென்றவள் இன்னும் திரும்பிவரவில்லை. 'அவளுடைய பேரனுக்கும் ஏதாவது ஏற்பட்டிருக்குமோ' என்று ஒரு கணம் யோசித்தாள் மேரி. 'திருக்குமாரன் ஏசு நாதர் தான் காப்பாற்ற வேண்டும்' என்று மனதினுள் பிரார்த்தனை புரிந்துக் கொண்டாள். தன் தகப்பனருக்கு உதவிபுரியும் நர்ஸ் மீனம்மாள், சாயந்திரம் வந்தவள் மேரி மட்டும் தனியாக இருப்பதைப் பார்த்து, தான் அன்றிரவு அவளுக்குத்துணையாக இருப்பதாகக் கூறியதை மறுத்து விட்டாள் மேரி. அவள் 'இருக்கவேண்டாம் என்று ஏன் மறுத்தாய்?' என்று கேள்வி கேட்கும் அவள் உள்ளத்திற்கு பதில் கூறத்தெரியாது தவித்தாள்.

மீண்டும் கடிகாரம் பத்துத் தடவை வேகமாக அடித்து அவள் சிந்தனையைச் சற்றுக் கலைத்தது. மேரி தன் அறையில் இருந்தவாறே தலையை வெளியே நீட்டி 'வாசற் கதவு சாத்தியிருக்கிறதா' என்று கவனித்தாள். அது சிறிது திறந்திருக்கவே, வெளியே மெதுவாக வந்து கதவை மூடித் தாளிட்டு விட்டு, திரும்பவும் தன் அறையில் வந்து ஈஸிசேரில் சாய்ந்தாள்.

ஆலோசனைகள் அவளையண்ட மறுத்தன. ஒன்றும் தோன்றவில்லை. புத்தக அலமாரியைத் திறந்து பிடித்தமான நாவல் ஒன்றை எடுத்துப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள். பக்கங்கள் ஓடின. மனதில் ஒன்றும் பதியவில்லை. சலிப்பு தட்டிவிட்டது நாவல்மீது. மற்றொன்றை எடுத்தாள். முதல் பக்கமே கால்மணி நேரத்திற்கு மேல் எடுத்துக் கொண்டது. அதிலும் மனம் செல்ல வில்லை. புத்தகத்தை சலிப்புடன் மேஜைமீது வீசி எறிந்துவிட்டு, 'அப்பாவை ஏன் இன்னும் காணோம்?' என்று தனக்குள் முணுமுணுத்தாள்.

வாசற்கதவு தட்டும் சப்தம் கேட்டது. நினைக்கவும் அப்பா தான் வந்துவிட்டாரா? அன்பு ததும்ப "அப்பா" என்று கூப்பிட்டாள். பதிலில்லை. சில விநாடிகள் அமைதி. தேகமெல்லாம் நடுங்க, "யாரது" என்று கேட்டாள். குரலில் பயம் தொனித்தது.

"கதவைச் சற்றுத் திறங்களேன்" கெஞ்சும் ஆண் குரல் கேட்டது. என்ன செய்வதென்று தோன்றவில்லை. கதவைத் திறக்கலாம், ஆனல் ஆபத்துக்கள் ஏதாவது ஏற்பட்டால்......? உடல் ஒரு ஆட்டம் ஆடி நின்றது.

"ஐயையோ! திறக்க மாட்டீர்களா? அவர்கள் வந்தால் என் உயிர் போய்விடுமே" என்று திரும்பவும் வெளியிலிருந்து கேட்டது.

'என்ன வந்தாலும் வரட்டும்' என்ற துணிவுடன் வாசலுக்குச் சென்று கதவைத் திறந்தாள். சுமார் முப்பது வயதுள்ள ஆடவன் ஒருவன் சட்டென்று உள்ளே வந்து கதவைமூடி இறுகத் தாளிட்டான். அவனது கட்டுமஸ்தான தேகமும், மீசையும் பார்க்கப் பயங்கரமாக இருந்தாலும், அவளுக்கு அவை அழகின் சின்னங்கள் என்று தோன்றின. வந்த வாலிபனும் மேரியும்

ஒருவரை யொருவர் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்ருர்கள். இரண்டு நிமிடங்கள் அமைதி நிலவிற்று.

வெளியே ஒரு கூட்டம் செல்லும் கூக்குரல் கேட்டது. மேரி மெதுவாகச்சென்று, ஜன்னல் கதவை இலேசாகத் திறந்து வெளியே நோக்கினுள். ஜப்பானிய சோல்ஜர்கள் அந்நகரில் அகப்பட்ட ஆண்கள் பலரை இழுத்துக் கொண்டு சென்ருர்கள். கதவை மூடிவிட்டு உள்ளே வந்தாள். வாலிபன் வராண்டாவில் போட்டிருந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்து களைப்பாறிக் கொண்டிருந்தான்.

“நீங்கள் மட்டும் கதவைத் திறக்காவிட்டால், என் கதியும் அப்படித்தான்! என் உயிர் உள்ள மட்டும் உங்கள் நன்றியை மறக்க மாட்டேன்” என்ருன் வாலிபன். மேரியின் தலை வெட்கத்தால் தானே கவிழ்ந்தது.

“குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்களேன்.”

மேரி உள்ளே சமையலறையை நோக்கி நடந்தாள். வாலிபன் அங்குள்ள சாமான்களைத்தன் கூரிய பார்வையால் நோட்ட மிட்டான்.

ஹாலுக்குச் செல்லும் வாசலில் பதிய வைத்திருக்கும் ‘பெயர் போர்டு’ தான் அவன் கண்களுக்கு முதலில் பட்ட பொருள். ‘டாக்டர் தேவஇரக்கம் – வெளியே’ என்று எழுதியிருந்தது.

‘என்ன, டாக்டர் தேவ இரக்கமா?’

திரும்பவும் ஒருதடவை நன்கு கவனித்தான். ஆம், அவன் கண்கள் கூறியவை உண்மைதான்! அந்தப் பெரிய நகரில், தேவ இரக்கம் என்ற பெயருடைய டாக்டர் ஒருவர்தான் என்று அவனுக்குத் தெரியும். ஆனல் ஒருதடவைகூட அவரை அவன் நேரில் பார்த்ததுமில்லை. வீட்டிற்கு வந்ததுமில்லை. அங்கு மாட்டப்பட்டிருந்த படங்களைப் பார்த்தான். இயேசுநாதர் படங்களுக்கு மத்தியில், ‘என்லார்ஜ்’ செய்யப்பட்ட படம் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதனடியில் ‘மிஸ். மேரி தேவஇரக்கம்’ என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்ததும், முகத்தில் தோன்றிய கலவரச் சின்னங்களை மறைத்துக் கொண்டு, வலுவில் புன்னகை புரிய முயன்ருன் வாலிபன்.

ஒரு பாத்திரத்தில்கூட தண்ணீர் இல்லை என்பதை எளிதில் உணர்ந்தாள் மேரி. ஜப்பானியக் குள்ளர்கள் மீது கோபம் கோபமாக வந்தது. நகரை சுலபமாக வசப்படுத்த தண்ணீர்க் குழாயைத் தடை செய்து விட்டார்கள் அல்லவா?

சற்று யோசித்தாள். முகத்தில் புன்னகை அரும்பியது. கையில் பிடித்திருந்த கண்ணுடி டம்ளருடன் அப்பாவின் அறைக்குள் நுழைந்து ‘டிஸ்டில்ட் – வாட்டர்’ (சுத்தமான நீர்) என்று எழுதப்பட்டிருந்த சீசாவை எடுத்தாள். அதிலிருந்த நீர் டம்ளருக்கு மாறியது. அறைக்கதவை இழுத்து சாத்திவிட்டு, வெற்றி நடையுடன் வராண்டாவிற்கு வந்து, டம்ளரை அன்பு ததும்பும் பார்வையுடன் வாலிபன் கையில் கொடுத்தாள்.

தண்ணீரைக் குடித்து விட்டு, ‘வந்தனம், போய்வருகிறேன்’ என்று எழுந்தான் வாலிபன்.

“வேண்டாம். மணி பன்னி

ரெண்டு அடிக்கப்போகிறது. நடு நிசி. இப்போது சென்ருல் ஆபத்து ஏற்படலாம். போகவேண்டாம்'' என்று தடுத்தாள் மேரி.

வாலிபன் உட்கார்ந்து கொண்டான். "உங்கள் கட்டுரைகளைப் பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். பிரசங்கங்களைப் பற்றி கேள்வியுற்றிருக்கிறேன். குணத்தையும் இப்போது அறிந்து கொண்டேன்'' என்ருன்.

மனித உள்ளம் சுடரில் விழும் விட்டிற் பூச்சியைப் போன்றதல்லவா? அவள் இதயமும் அவன் யார் என்று அறிய ஆசைப் பட்டது.

"குருடன் தன் அருகில் வந்தால் ரோஜாமலர் தான் யார் என்பதை தன் மணத்தினுல் அவனுக்குத் தெரிவிக்கும்'' என்ருள் மேரி.

"அப்படியானுல் நான் யார்?''

மேரி, தன் மெல்லிய கன்னங்களிரண்டும் சிவப்பதை அவன் பார்க்கக்கூடாதென்று நினைத்துத் தான் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாளா?

"நான் யார் என்று இப்போது சொல்லப்போவதில்லை'' என்ருன். அவளுடன் எப்படியாவது பேச வேண்டும் என்று அவன் உள்ளம் துடித்தது போலும்!

"நல்ல குணமுடைய வாலிபர்'' நல்ல 'குணமுடையவர்' என்று அவள் கூறியது அவனுக்குத் திருப்தியைக் கொடுத்திருக்க வேண்டும்!

"இந்த நல்லெண்ணம் எப்போதும் மாருதல்லவா?''

"மாருது! ஆனுல் தங்கள் பெயர் என்னவென்று கூறவில்லையே?''

வாலிபன் முகத்தில் சிரிப்பின் அடையாளங்கள் தோன்றியதே யொழிய அவன் வாய்விட்டு ஒன்றும் கூறவில்லை!

'அவன் யாராக இருக்கலாம்?' மேரி ஹாலுக்குச் சென்று நாற்காலியொன்றில் உட்கார்ந்து யோசனை புரிய ஆரம்பித்தாள். வாலிபன் முன்பிருந்த பெஞ்சிலேயே உட்கார்ந்திருந்தான்.

'அவன் திருடனாக இருக்க முடியாது. ஏனென்றால் திருடனைப் பற்றி நாவல்களில் வருணிக்கப்படும் அம்சங்கள் அவனிடமில்லை. மேலும் திருடனாக இருந்தால் வந்ததும், அவளைக் கட்டிப் போட்டுவிட்டு, சாமான்களையும், நகைகள், பணம் ஆகியவற்றையும் எடுத்துக் கொண்டு போன இடம் தெரியாமல் போயிருப்பான். பிறகு யாராக இருக்கலாம்?......

போக்கிரியாக இருந்தால்?...... அவளிடம் அவன் அசம்பாவிதமாக நடந்து கொள்ள வில்லை. ஆகவே அப்படியும் இருக்க முடியாது! இப்போது அவளுக்கு அந்நகரிலேயே பெயர் பெற்ற போக்கிரி, 'கபர்தார்' என்பவன் ஞாபகம் வந்தது. பெயர் வாங்கியவன் எந்த விதமான கேசுகள் வந்தாலும் தப்பிவிடுவான். போலீஸ் கூட அவன் பக்கம் போகவே நடுக்கம். அவனுக்குப் பெண்கள் என்றால்.........!' அவள் உடம்பு சிலிர்த்தது. 'பரமபிதாதான் காப்பாற்ற வேண்டும்' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

கபர்தாரின் செய்கைகளைப் பரிகசித்துக் கதைகள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் இந்த இரவில் அவன் பெயரை நினைத்ததுமே அவள் உள்ளம் இருண்டது. நினைப்பை மாற்ற முயற்சி செய்தாள்.

அவனைக் கண்டதும் ஏன் அவளுக்கு அவன்மீது அனுதாபம் ஏற்பட்டது. தண்ணீர் இல்லையென்றால், 'இல்லை' என்றுதானே கூறியிருக்கவேண்டும்? மேலும், 'போகிறேன்' என்று புறப்பட்டவனைத் தடுத்து நிறுத்தியது ஏன்? காரணம் சொல்ல முடியவில்லையே!'

புத்தகங்களில் காதலைப் பற்றிப் படித்திருக்கிறாள். காதற் கதைகளும் எழுதி யிருக்கிறார்கள். ஆனால், காதல் ரசத்தை அவள் அனுபவிக்கவில்லை! 'கண்டதும் காதல்' என்று சொல்கிறார்களே இதுதானோ?' அவள் சிந்தனைக் குதிரை துள்ளிக் கொண்டிருந்தது.

தான் யார் என்று அவள் அறியவில்லை என்பதால் வாலிபன் மனம் பூரித்தான். அவளுடைய செய்கைகள் அவனுக்கு வியப்பை யளித்தன. அவளுடைய வார்த்தைகளில் பரிவையும் பிரேமையையும் செய்கைகளில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கண்டான். தான் யார் என்று அவளுக்குத் தெரிவிக்கலாமா? அதனால் அவள் அவன் மீது வெறுப்படைவாளோ?......அவன் உள்ளம் நிலை தளர்ந்தது.

''டங்....டங்....டங்....டங்....'' நான்கு தடவை கேட்டது. மேரி திடுக்கிட்டு விழித்தாள். ஆம்! சிந்தனா தேவி அவளைச் சுமார் நான்கு மணி நேரம் நித்திராதேவியிடம் ஒப்படைத்திருந்ததை அறியவே அவள் இருதயம் 'டட்-பட்' என்று வேகமாக அடித்துக் கொண்டது. ஹாலை விட்டு வெளியே வந்தாள். வாலிபன்

இருந்த இடத்தை விட்டு அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

"என்ன, இவ்வளவு நேரமும் தூக்கி விட்டீர்களா?" அவன் கண்கள் கொவ்வைப் பழம்போல் சிவந்திருந்ததிலிருந்து அவன் இரவு முழுவதும் விழித்திருந்தான் என்பதை மேரி அறிந்து கொண்டாள். அவன் கேள்விக்கு 'இல்லை' யென்று கூறுவது போலத் தலையை அசைத்தாள்.

அவளுக்குப் பசி எடுத்தது போல் தோன்றியது. தன் அறைக்குள் சென்று கொஞ்சம் பிஸ்கோத்துகள் கொண்டுவந்து அவனிடம் நீட்டினாள். அதை வாங்கிக்கொண்டு, "நீங்கள் சாப்பிட வில்லையா?" என்றான்.

"தயவு செய்து தாங்கள் என்னை 'நீ' என்று அழைத்தால் போதும்" என்றாள் மேரி.

"சரி, உங்கள் – இல்லை – உன்னிஷ்டம்."

"உங்கள் பெயரென்ன?"

"சொல்லட்டுமா. என்னை இகழமாட்டாயே?"

"இல்லை சொல்லுங்கள்!"

"கபர்தார் — அதுதான் உன் கதைகளில் கதாநாயகனாக வரும் போக்கிரி ஆசாமி." அவள் முகம் மாறுதலடையும் என்று எதிர்பார்த்தான். ஆனால் புன்னகை பூத்தாள்.

"அமிர்தத்தை விஷம் என்று அழைப்பது எவ்வளவு அபத்தம்"? தன்னையறியாமலே கேட்டு விட்டாள்.

அமிர்தம் விஷமாவது சுலபம். ஆனால் விஷம் என்றும், அமிர்தம் ஆக முடியாது. "உண்மையில் நான் போக்கிரி அல்ல. ஆனால் உலகம்தான் என்னை அப்படி அழைக்கிறது உலகத்தின் கண்ணுக்கு நான் அப்படித் தோன்றுகிறேன்"

"தங்களைப் பற்றிவரும் செய்திகள்?"

"உண்மையாக இருக்கலாம். என்னை நல்லவன் என்று ஏற்க மறுக்கும் உலகத்தில் எப்படி வாழ்வது? நான் மடையன் அல்ல. மாசறக் கற்றவன்தான். விதி என்னிடம் விளையாடுகிறது............" அவன் உணர்ச்சி வேகத்தில் பேசிக் கொண்டே போனான். அவன் கண்களில் நீர் நிறைந்தது. அது மேரியின் உள்ளத்தை உருக்கிற்று. தன் சேலைத் தலைப்பைக் கொண்டு அவன் கண்களைத் துடைத்தாள். சுமார் அரைமணி நேரம் அமைதியுடன் கழிந்தது.

"பொழுது விடியப் போகிறது. நான் போய் வருகிறேன்."

கபர்தார், புறப்பட்டான்.

"தாங்கள் போக வேண்டாம். இங்கேயே இருங்கள். உங்கள் துன்பங்கள் விரைவில் மறையும். ஏசுநாதர் அருள் உங்களுக்கு உண்டு" என்று கூறி ஏசுநாதர் படத்தின் முன் மண்டியிட்டாள். அவனும் அப்படியே செய்தான்.

மணியும் ஐந்து தடவை கம்பீரத் தொனியுடன் அடித்தது!

★

“ஒரு இரவு”

சா. பூரணையன்

நேற்று காதலரின் உள்ளத்திலே காதல் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பிய வெண்ணிலவு, இன்று பௌர்ணமியாயிருந்தும் வானத்திலே காணவில்லை! நேற்று மதியின் அழகைக் கண்டு, நாணம் கொண்டு பொறாமையுடனே, ‘பாரடீ அவளை! எவ்வளவு செருக்கு?......ஒன்றும் தலைகால் புரியாது ஒய்யாரமாய் சுற்றிக் கொண்டேயிருக்கின்றாள்!...ம்... எல்லாம் எத்தனை நாளைக்கு?...... பதினைந்து நாட்கள் கடந்தால் பவிசு வெட்ட வெளிச்சமாகி விடுகின்றது!’ எனக்கூறிக் கொண்டே, ஒன்றைப் பார்த்து ஒன்று கண் சிமிட்டிக்கொண்டு இருந்த நக்ஷத்திரங்களையும் காணவில்லை! இன்று காதலர்களின் உள்ளத்திலே காரிருள்!

எங்கும் இருள்! எங்கும் இடியின் ஓசை! காணும்போதெல்லாம் மறையாத மின்னல்! வானத்தையே மறைத்து ஆனந்த நடனம் புரிந்து கொண்டிருந்தன கார் முகிற் கூட்டங்கள்! அவைகள் கக்கிய காரிருள் கதிரவன் ஒளியையும் விழுங்குவதுபோல் இருந்தது!

ஒரு மணி நேரம் விடாது பெய்தது கனத்த மழை!...பின்னர் சிறு தூற்றல்! கார்முகிற் கூட்டங்களும் கலைந்திருந்தன!...எங்கோ ஓரிரு மேகங்கள் காணப்பட்டன! திரை மறைவில் காணும் அரசிளங்குமரி போன்று தண்மதி வெண்மேகங்களின் மறைவில் காணப்பட்டது! அவன் மறைந்து மறைந்து முன்னால் வந்தது, காதலி காதலனுடன் சோலையிலே மாலைவேளையிலே விளையாடும் பொழுது செடி மறைவில் மறைந்து மறைந்து தலையை வெளியே நீட்டுவது போல விருந்தது!

நீண்ட பாதை! பாதையின் இரு மருங்கிலும் மொட்டை மரங்கள் அடர்ந்து இருந்தன! இலையுதிர்காலம் ஆனதால் எங்கும் மொட்டை மரங்கள்!

வெண் குதிரையின் மேல் ஓர் மாது!............விரைந்து சென்று கொண்டிருந்தாள். அவளது இரண்டு கால்களும் குதிரையின் இரு பக்கத்திலேயும் தங்கு தடையின்றி ஊஞ்சலாடின! அவள் அணிந்திருந்த ஆடை நனைந்திருந்தது! கனத்த மழையானதால் பாதை முழுதும் சேறாகக் காணப்பட்டது. குதிரை வேகமாகச் சென்றதால் சேறு தெறித்து விழுந்து ஆடைகளையெல்லாம் பாழாக்கியிருந்த்து. கூந்தலின்மேல் கொட்டிய மழை நீர் தலையிலிருந்து முகத்தில் வழிந்தது! கண்ணீரும், மழை நீரும் கன்னங்களிலே வழிந்தோடின! காரணமில்லாது பெருமூச்சு விட்

டாள்! களைப்பு அதிகமாயிருந்தது. குளிரின் வேகம் அதிகரித்தது! அவளது மென்மையான கைகள் கடிவாளங்களைப் பிடிக்க மறுத்தன! கால்கள் பாதரட்சைகளுடன் கூடியிருக்க முடியாது என முணுமுணுத்தன!

அவளுக்கு முன்னால் ஓர் வாலிபன், அவன் அடிக்கடி அவளுக்கு முன்னாலேயே சென்றான்! தனது ஆட்கள் 'குசு குசு' வார்த்தைகள் பேசினால் அவர்களையடைந்து பணமும், பரிசும் பின்னர் தருவதாக வாக்களிப்பான்! பின்னர் முன்னால் செல்லுவான் வழக்கம் போல! பாதைகள் கூடுமிடத்திலே பகைவர்கள் பதுங்கியிருப்பரோ என்ற ஒரே பயம் தான் அவனுக்கு!

தாங்கள் போக வேண்டிய இடம் அருகேதானுள்ளது என்பதை நினைத்ததும் வாலிபனின் மனம் பூரித்தது! அவனது முகத்திலே பொலிவு மிகுந்தது! அவனது வதனத்திலே புன்னகை தவழ்ந்தது!......ஆனால் அவளது உள்ளத்திலே உணர்ச்சியேயில்லை! ஓயாத எண்ண அலைகள் அவளது நெஞ்சுக்கடலில் புயற்காற்றில் மோதும் அலைகளைப் போன்று மோதின. கண்ணீர் அவள் கண்களிலிருந்து ஒவ்வொரு சொட்டாய் வழிந்து கொண்டிருந்தது.

நீண்டதோர் பாதை!......அப்பாதையின் ஒருபுரத்தில், அந்நேரத்திலே மெல்லப்பறந்து கொண்டிருந்தது ஓர் கொடி! அந்தி நேரத்திலே ஆண்மான், பெண்மானைக் கூட்டிக்கொண்டு போகும்போது பசியால் பல நாட்கள் வாடிய புலியைப்போல மூன்றுபேர் நின்றிருந்தார்கள். அவர்களின் கண்களிலே நெருப்பு சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தது! அவை களின் கோரப் பற்கள் கொலைஞனையும் நடுங்க வைத்துவிடும்!... கொடியின் கீழ் முப்பது பேர்!

காட்மேர்! இரக்கமில்லாத அரக்கன்! கல் மனம்கொண்ட மானிடப் பூதம்! உள்ளத்திலே தூய்மை அணுவளவும் இல்லாத சண்டாளன்! பழிக்குப் பழி வாங்க வேண்டுமென நினைப்பவன். எதிரிகள் கையிலே சிக்கிய பின்னர் பார்க்கும் 'வெற்றிப் பார்வை அவனிடம் காணப்பட்டது!

ராபர்ட் கண்டான் காட்மேரை அவனைக் கண்டு ராபர்ட் கலங்கினான். பின் மன உறுதி! நம்பிக்கை!.........தனது ஆட்களிடம் வந்தான் ராபர்ட்!

அவள் வெண் குதிரையின்மீது வீற்றிருந்தவாறே காட்மேரைக் கண்டாள்! மனம் பதைபதைத்தது!......நேரப்போகும் முடிவை என்னவென்று நிச்சயித்துக் கொண்டாள்! மலரின்மேல் நாட்டம் கொண்ட ஓர் வண்டு மதுவையுண்ண பல நாட்கள் காத்திருந்து மலரினின்றும் தேன் வழிந்து அழிவதைக் கண்டு, மனம் பொருது, அழுது கண்ணீர் சொரிவது போன்று, அவள் கண்ணீர் விட்டாள். தனது தலையிலிருந்து அழகுத் தொப்பியை முன்னால் இழுத்துக் கொண்டாள்! கண்களுக்குத் திரை!

ஜெகானியின் செய்கையைக் கண்டான் ராபர்ட்! "ஜெகானி! என் அன்பே! இன்பக் களஞ்சியமே ஏன் வீண் பயம்? மறந்தாயா நம்மவர் அவர்களை பாயிட்டியரில் துரத்தி வீறு கொண்டதை? வெற்றி முரசு எட்டுத்திக்கும் ஒலித்ததே!...என் கண்ணின் ஒளியே! அஞ்சாதே! அஞ்

சுகமே! காஸ்கனி நாட்டு எல்லையைக் கடிதில் அடைந்திடுவோம் பின்னர் ஒன்றும் நேராது ஆபத்து!" என்று தேற்றினான் ராபர்ட்!

ஒவென அலறினாள் ஜெகானி! "அன்ப! நீ எது சொல்லினும் என் மனம் ஆறுதல் கொள்ளாது! ஆறுதல் அவசியமில்லை! ‘முடிவு’ முடிவானதுதான்! நான் கூறுவதே நடக்கப் போவது! காதல்! நீயின்றியே தனித்து வந்த வழியே திரும்பி பாரிஸ் நகரத்திற்குச் செல்லவேண்டும் இருண்ட மனதுடனே!...அங்கே ஆறு நீதிபதிகள் எனக்கு நான் உன்னை காதலித்ததற்காக உண்மை அழகை வணங்கியதற்காக!–காதல் எனும் தித்திப்பு மருந்தை உண்டதற்காக அன்புக்கு அடிமைப்பட்டு உன்னை விட்டு பிரிய மனமில்லாது உன்னுடனே வந்ததற்காக—அநியாயத் தீர்ப்பு அளிப்பர்! தீர்ப்பின்படி மழை பெய்த நாளிலே, பெருநதியிலே வெள்ளப் பெருக்கெடுத்தோடும்போது, பலர் என்னைப் பார்த்து எளனம் செய்து, தூற்றி



துரோகி என ஏசி, சிரித்து கைகொட்டி நகைக்க, நான் துவண்டு அழ, என்னை எடுத்து வீசுவர் இன்னுயிரின் இச்சை விடேன் அப்பொழுதும்! இயற்கையின் வேகத்தை வெல்ல உறுதி கொள்வேன்! பலமற்ற எனது நீண்ட கைகளினால் எதிர்நீச்சுநீந்துவேன். பயனற்ற செய்கையென அறிந்

தும்...எனது நிலை பரிதாபத்திற்குரியதாகும் உயிரே! இன்றேல் நான் இவனுடன் அவனுடைய இச்சைக்கு!......'' என்று கதறினாள்.

காதலன் இப்பொழுது ஆறுதல் கூறவில்லை! போர்ப்பாட்டைப் பாடினான்! அவனது ஆட்கள் தொடர்ந்து பாடவில்லை. வாக்குறுதிக்குப் பங்கம் விளைவித்தனர். மின்னிய வாட்களை உறையிலேயே ஒளி வெளியே வீசாதபடி வைத்திருந்தனர்! மனம் முறிந்தது ராபர்ட்டுக்கு! அவர்களது அமைதியான நிலை, மௌனம் ராபர்ட்டுக்கு அடக்க முடியாதுக்கம் அளித்தது. ராபர்ட் தளரா நெஞ்சத்துடனே வாளேந்திய கையை மேலே தூக்கினான்; உயர்ந்தது வாள்!......ஐயோ படுமோசம்! வாளேந்திய கை வரிதே காணப்பட்டது! ராபர்ட்டின் கழுத்தைச் சுற்றிலும் பட்டுக் கைக்குட்டைகள்! ராபர்ட்டு கைதியாக்கப்பட்டான்!

வெற்றிச் சிரிப்புச் சிரித்தான் காட்மேர் கர்வத்துடன்! ஜெகானியும் குதிரை மீது வீற்றிருந்தவாறே காட்மேரின் முன்னால் நிறுத்தப்பட்டாள்!

''ஜெகானி! எட்டாத பழமாயிருந்து இன்று எட்டி விட்டாய்! கனியே! கலங்காதே! உன்னை நான் ஆதரிக்கின்றேன்! அஞ்சாதே! கொஞ்சமும் சந்தேகம் வேண்டாம்! ஜெகானி!...நீ காதலித்த...உன் நெஞ்சிலே பாதிக்கப்பட்ட—யாரின் அன்பு உனதுயிருக்கு உணவாக இருக்கின்றதோ—உன்னையே வாழ்க்கைத் துணைவியாக ஏற்று பேரின்பம் வாழ்நாட்கள் முழுவதும் பெற்று இன்புற்று வாழ நினைத்த ராபர்ட்—இனி உனக்குச் சொந்தமல்ல! நீ அவனுடைய காதலியல்ல! நீ எனக்குச் சொந்தம்! அவன் இயற்கைக்குச் சொந்தம்! அவனுயிர் இயற்கையில் கலந்து இன்புற ஏற்றது!...கண்ணே! ராபர்ட்டின் நிலை தேய்பிறை மதியைப் போன்றதே! அவனது வாழ்நாட்கள் முடியும் நேரம் நெருங்குகின்றது'' என்றான் காட்மேர்! எதையோ கூற நினைத்து பேச எத்தனிக்கும் சமயம், ''ராபர்ட்! வாயைக் கட்டுங்கள்......பேசுவாயானால் உன் மண்டை பிளக்கப்படும் இந்த இடத்திலேயே என்று கர்ஜித்தான் காட்மேர்.'' கலங்கினான் ராபர்ட்.

பொங்கி வந்த துயரத்தை அடக்குவதுபோல் நெற்றியிலே உள்ளங்கையை அழுத்தினாள் எதையோ எண்ணியவாறு ஜெகானி!

காட்மேரைக் காணச் சகிக்கவில்லை! அவனது விகாரமடைந்த முகத்திலே கொதிக்கும் குருதி வழிந்தது வேகமாக! கண்களிலே கனல்!

''ஜெகானி! மதிமயக்கமோ? பிதற்றாதே! அதோ ஆங்கு தெரியும் எனது கோட்டையைப் பார்! உன்னை அங்கு எடுத்துச் செல்வேன்! என் கோபம் தணியும்! பின்னர் நீ என் இன்பக் காதலி! யார் மறுத்து தடை செய்யப் போகின்றார்கள்? உனது வீரன் இங்கு இறந்து சேற்றில் அமைதியில் ஆழ்ந்திருக்கும்போது!' காட்மேர் சிரித்தான் உரத்த குரலில்!

கோரச்சிரிப்புடன், குறும்புச் சிரிப்பும் கலந்து ஜெகானியின் முகத்தை விகாரப் படுத்தின! புன்முறுவல் முகத்திலே ஆழ்ந்து காணப்பட்டது—பின்னர் பலத்த சிரிப்பு!

''ஹ...ஹ...ஹ'' என்று சிரித்தாள் ஜெகானி. ''நீ என்னை

அடைந்தால்......நீ என்னைத் தூக்கிக் கொண்டு சென்று விடுவாய்! உண்மை. ஆனால் நான் என்ன செய்வேன் தெரியுமா? உன்னைக் குத்திக் கொன்று உனது இரத்தத்திலே எனது கைகளை அலம்புவேன்! எனது தீராத் துக்கத்திற்கு—அடங்கா ஆத்திரத்திற்கு உனது பச்சை இரத்தமே சாந்தியளிக்கும்—உன் மென்னியைக் கடிப்பேன்— உனது உயிரை இரத்தத்துடன் கலந்து உறிஞ்சுவேன்!'' மீண்டும் உரக்கச் சிரித்தாள் ஜெகதானி.

ஜெகானி! பயம் காட்டுகின்றாயா?...ம்...நான் உன்னை உள்ளத்திலே நேசிக்கின்றேன்......... ஆனால் நீ என்னைத் தூற்றுகின்றாய்! பயம் காட்டி ஏமாற்றப் பார்க்கின்றாய்! உன்னைப்பற்றி யாவையும் வெளிப்படுத்தி விடுவேன் ஆமதம்......'' 'என்றான் காட்மோர்.

''சுத்தப் பொய்! யாவும் வெறும் வார்த்தைகள்—அபாண்டப் புளுகு!'' என்று இடை மறுத்தாள் ஜெகானி.

''சுத்தப் பொய்—யாவும் வெறும் வார்த்தைகள்; அபாண்டப்புளுகு!'' என்று இடை மறுத்தாள் ஜெகானி!

''எய்!...பொய்யா!...ம்...பயித்தியக்காரி!...பாரிஸ் மக்கள் யாவரும் உண்மையான தென்றே எண்ணுவர் நான் கூறுவதை! நான் மொழியும் பொய் மொழிகளை மெய்யானதென்றே நினைப்பார்! ......அவர்கள். உன்னைச் சித்திரவதை செய்யக் காத்துக் கிடக்கின்றனர்...'' ஜெகானியைக் கொடுங்கள்! அவளை நெருப்பிலே குளிப்பாட்டுவோம்...வெள்ளப் பெருக்கெடுத்தோடும் நதியிலே கண்டதுண்டமாக வெட்டி வீசி எறிய'' என்று கத்துகின்றனர் ஓயாது. ஜெகானி! நீ எனக்கு வைத்திருப்பது வெறுப்பு ஒன்றைத்தான்! ஜெகானி எனக்கிணங்கு—இணங்காவிடில் பெரும் இன்னல்தான் விளையும்! உன் காதலனை அணைத்து முத்த மீந்தபோது கழுத்தைப் பிடித்துத் தொங்க ஏதுவாயிருந்த உனது கைகால் வெள்ளத்திலே தத்தளித்துக் கொண்டுச் செல்ல வேண்டியதுதான். ஜெகானி! உனது ரோஜாக் கன்னங்கள் எரிந்து போகும்—மானம் பறிபோகும்—மானம் காக்க எனக்கு இணங்கி என்னையடை—என்னையணை—இன்றேல் உனது முடிவு துக்ககரமானதாய்த் தானிருக்க முடியும்! மாற்றம் காணமுடியாது. வாழ்நாட்களிலே விருப்பம் கொள்! உயிரின்மேல் ஆர்வம்கொள்! வாழ்நாட்களை வளரவிடு—வளரவிட என்னைக் காதலி! உனக்கு மரணத்தைத் தழுவ ஆசையா—அன்றி வாழ விருப்பமா? உனது முடிவை ஒரு மணி கழித்துத் தெரிவி!'' என்று கூறினான் கடகடவென்று.

குதிரையை விட்டுக் கீழிறங்கினாள்—தட்டுத்தடுமாடி நடந்தாள்! எங்கும் இருள், அருகில் ஒரு வைக்கோல்போர் நனைந்து கிடந்தது! வானத்தைப் பார்த்தவாறு படுத்தாள், இரு கைகளும் தலையணையாய் உதவின—எண்ணக் குழுறல் அலைமோதின!

ஒரு மணி கழிந்தது. உறக்கமில்லாது அரக்கன் விழித்திருந்து உட்கார்ந்திருந்தான். காட்மேரிடம், ஜெகானி வந்தாள். ''உனக்கு இணங்க முடியாது'' என்று கூறினாள். அவள் குரலில் உறுதியும், கம்பீரமும் தொனித்தது.

ராபர்ட்டின் கழுத்திலே கட்டப்பட்டிருந்த பட்டுக் கைக்குட்

டைகள் அவிழ்க்கப் பட்டன. கொடும் தண்டனைக்கு ஆளாக்க. காட்மேரின் வலது கை, வாளைத் தேடி, அம்மெல்லிய வாளை வெளியே எடுத்தது. மின்னலின் வேகத்திலே வானையளாவியது வாள்! இடது கையிலே இளம் ரபட்டின் தலை முடி! கொடூரப் பார்வை; ராபர்ட்டின் 'பிடரி' காட்மேரின் கையில்! வீரனின் தலை, சூழ்ச்சியையே மூச்சாகக் கொண்ட காட்மேரின் கறுத்த தடித்த கொலைக் கையில்! கொலை செய்வது கொசுவைக் கொல்லுவதுபோன்று காட்மேருக்கு! என்றும் கொலை செய்யும் காட்மேர் அன்று ஒன்றும் அத்'தீரச்' செயலைப் புரியவில்லை! இரத்த உணவை உண்ணும் அவனது வாள் அன்று பசியுடன் இருந்தது! கையை மேலே தூக்கினன்! ஜெகானி கைகளினல் கண்களை மூடிக் கொண்டாள்! சுருண்டு அடர்ந்து அழகாக அமைந்திருந்த ராபர்ட்டின் தலை மயிர் காட்மேரின் கையில் ஓர் பிடி! ஓவென்று அலறினள் ஜெகானி! மின்சார வேகத்திலே கழுத்தை அறுத்தது வாள்! காதலனின் முகம் முன்னல் விழுந்தது! அவனது முண்டம் பின்னல் வீழ்ந்தது!...... க்...ர்...ர்...ர்...என்ற சத்தம்!

விரல்களின் சந்திலே இந்தக் காட்சியைக் கண்டாள் ஜெகானி! கண்களைப் பிடுங்கினள்! முகத்தைக் கிள்ளிக் கொண்டாள்! தலை மயிரைப் பிடித்துக் குலுக்கிக் கொண்டாள்—ஆடைகளை கிழித்தாள்! ஐயோ ஐயோ வென்று கூவினள்—கதறினள்— அழுதாள் —உரக்கச் சிரித்தாள்—பயித்தியக்காரிதான்!

பிரான்சுக்குச் சண்டை செய்ய வந்தான் ராபர்ட்! அழகுக்கு அடிபணியும் 'ஆற்றல்' யாருக்கும் உண்டு. ஆங்கில நாட்டு ராபர்ட் பிரான்சு நாட்டு ஜெகானியைக் கண்டான்! அவளும் கண்டாள்! அழகுக்கழகு நேர்! உளம் ஒத்தது; ஈருயிரும் ஒன்ருய்க் கலந்தன—காதலுக்கடிமையாளுர்! பிரான்சு நாட்டை விட்டு ஓடி தப்பித்துக் கொள்ள—அர்த்த ராத்திரியிலே பிரயாணம் ஆரம்பமாயிற்று. ஆபத்தும் வந்தது!

இன்பக் களஞ்சியத்தைத் தக்க விடத்தில் வைக்க எடுத்துச் செல்லும் போது நடுவழியிலே பறிக்கப் பட்டது! இன்ப ஆற்றிலே நீந்த எண்ணி எக்களித்துச் சென்ற போது எதிர்பாராத விபத்து. போர்புரிய வந்த ராபர்ட் கொல்லப்பட்டான்! இன்னலுக்குப் பின் இன்பம் பெறலாம் என்று எண்ணியிருந்த வீரராபர்ட் இன்பம் காணுது இன்னலையே முடிவாகக் கொண்டான்! பெரும் இன்பம் இனி இல்லை. பெரும் துன்பம்தான்; ஒரு முறை இதழ் சுவைப்போம் என, ஏங்கியிருந்த ராபர்ட், இதழை அணுகிய காலை பிரிக்கப் பட்டான்! அவனது எண்ணத்திலே மண்! அவனது தூயகாதலுக்குத் தீ. அவனது வெள்ளை மனதுக்கு காரிருள்—அவனது வீரத்திற்கு பெரும் சூழ்ச்சி! அவனது இன்பத்திற்கு பெரும் அணை! யாவும் ஒன்ருய்ச் சேர்ந்தன!...கொடூரமாகக் கொல்லப்பட்டான்!

அவன் கற்பனை செய்த சுவர்க்கம், அதளபாதாளத்தில் தலை குப்புற வீழ்ந்து சிதறி விட்டது! எல்லாம் ஒரு கனவாகி விட்டது.

(ஆங்கிலத்தைத் தழுவியது)

★

ஆசீ

கு.ப.சேதுஅம்மாள்

நாட்களும் மாதங்களுமாக ஓடி சித்தார்த்தர் அந்த ரத்னகிரியின் தாழ்வரைக்கு வந்து வருஷ காலம் கடந்து விட்டது.

அருணோதயத்தில் எழுந்து ஸ்நானம் முதலிய காலைக்கடன்களை முடித்துக் கொண்டு பிறகு உதய ஞாயிறை வணங்கி சூரிய உதயத்தைப் போன்ற ஞான ஒளி தம் மனதிடை உதயமாக வேண்டுமென்று பிரார்த்தித்து விட்டு கையில் பிக்ஷா பாத்திரத்தை ஏந்தியவராக நகரத்திற்குள் சென்று உணவை யாசித்துக் கொண்டு திரும்பி வருவார். அந்த அன்னத்தில் விலங்குகளும், பக்ஷிகளும் பங்கு பெற்ற பின்பு மீதியை உண்டு, யோசனையில் ஆழ்ந்து மௌனமாகி விடுவார்.

இவ்விதமாகவே அந்த ஓராண்டும் சென்றது. பார்த்தார் சித்தார்த்தர். தான் அனுஷ்டிக்கும் மௌன தியானத்தினால் மேன்மேலும் அதில் ஊக்கம் பிறக்க வேண்டியதிருக்க, அதற்கு மாறாக மனதில் பளு தென்பட்டது. ஒன்றிலும் நாட்டமின்றி மனம் அலைய ஆரம்பித்து விட்டதை தம்மில் தெளிவாகக் கண்டார் சித்தார்த்தர்.

அப்போது அவருடைய நினைவில் புதிதாக ஒரு யோசனை உதித்தது. தினந்தோறும் பிக்ஷைக்காக அவர் நகரத்திற்குச் செல்லும் வழியில் இருபுறமு மிருந்த வனப்பிரதேசத்தில் தபசிகளைப் பார்த்தது நினைவுக்கு வந்தது.

ஆம், அவர்களும் என்னைப் போலவே தியானபரர்களாகத்தான் காணப்படுகிறார்கள். அவர்களிடம் சென்று பார்ப்போம். ஏதாவது அறியலாம் என்ற யோசனையில் அவ்விடத்தை விட்டு எழுந்து அந்தத் தபசிகளிருந்த இடத்திற்கு வந்தார்.

சற்று நேரம் வரையில் நின்று பார்த்து விட்டு பிறகுதான் அந்த இருண்ட வனப்பிரதேசத்தில் புகுந்தார்.

மூலைக்கொருவராக தியானத்தில் ஈடுபட்டு பலவித முயற்சிகளிலிருந்ததைக் கண்டார். அவருடைய திருஷ்டிக்கு எதிரே தென்பட்ட ஒரு தபசி யோக சாதனையில் இருந்தார். மூச்சை நெடுநேரமாக உள்ளடக்கி வைத்ததால், அவருடைய உடலும், கை கால்களும் விறைப்புக் கொண்டிருந்தன. பெரும் சுமையைச் சுமந்து கொண்டு பாரந்தாங்காமல் தத்தளிப்பது போன்ற முகம், நெற்றி நரம்புகள் புடைத்துக் கொண்டு நின்றன.

அந்தக் காட்சியைக் கண்டு மனம் கலங்கிப்போய் மறுபுறம் திரும்பிப்பார்த்தார் சித்தார்த்தர்.

அங்கே ஒரு தபசி ஒற்றைக் காலில் நின்று கொண்டு இருப்பதைக் கண்டார். அந்த தபசியின்

கூப்பிய கைகள் உயர எழும்பி இருந்தது. ஒட்டி உலர்ந்துபோய் ஒரு தோலே உராய்ந்தவாறு ஒரு புறமாகத்தென்பட்ட அவருடைய முகத்தோற்றத்தில் ஒருவித பிடிவாதமும்கூட இருந்தது!

"எவ்வளவுநாளாயிற்ருே பாவம் இவ்வாறு நிற்கத் தொடங்கி? தேகத்தின் பாரத்தைத் தாங்கிய ஒற்றைக்கால் சூம்பியல்லவோ போயிருக்கிறது! ஹா......என்ன கஷ்டமிது!" என்று அங்கலாய்த்தபடியே வேருெருபுறம் பார்க்கும்போது இன்னுமொரு விந்தையைக் கண்ணுற்ருர்.

ஒரு தபசி தன் முன்பு பிடி அரிசியைப் போட்டுக் கொண்டு ஒவ்வொரு அரிசியாக எண்ணி வாயில் போட்டுக் கொண்டிருந்தார்.

அதைப் பார்த்தவுடன் சித்தார்த்தனுடைய நெஞ்சு அப்படியே நின்று விட்டது.

எதையோ எதிர்பார்த்து அங்கு வந்ததற்கு எதையோ கண்டதும் அவருடைய அறிவு ஸ்தம்பித்து விட்டது!

சிறிது நேரம் வரையில் அங்கேயே நின்று விட்டு பிறகு சாவதானமாக அடியெடுத்து வைத்து முன்னேக்கிச் சென்று அரிசியை ஒவ்வொன்ருகத் தின்று கொண்டிருந்த தபசியை அணுகினர் முதலில்.

விதிப்படி வணங்கி விட்டு, "தபோதனரே, ஒவ்வொரு அரிசியாக ஏன் புசிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஓ, அதுவா? ஒரு நாளைக்கு ஓராயிரம் அரிசிதான் எனக்கு ஆகாரம்—ஒருவாயில் அதை மென்று விட்டால் மீதமுள்ள பசிப்பொழுதைப் பொறுப்பதெப்படி? அதற்காகத்தான் சந்தியா ஜபத்தின் நேரம் வரையில் இதை ஒவ்வொன்ருக மென்று தின்று......"

'ஏன், அன்னமுண்பதில்லையா?'

"இல்லை, அன்னமுண்டால் சரீரத்தில் திருடமல்லவோ ஊறும்?"

"குறைத்து உண்டால் கூடவா?"

கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் முதலில் அவர் விழித்தார். பிறகு ஒருவித அலட்சியத்துடன் "ஆம், நாவுக்கு ருசி காண்பித்து சோறும், அறுசுவையும் உண்டு கொண்டே இருந்தால் மோக்ஷபதம் கிடைப்பது என்றைக்கு?" என்ருர் வெட்டென்ற குரலில்.

அலட்சியமாக துடுக்காகத் தன்னைப் பேசிய போதிலும்கூட அவர்மீது சித்தார்த்தனுக்கு இரக்கம் பிறந்ததேயொழிய கோபம் வரவில்லை!

மிகவும் இரக்கத்துடன் அவரைப்பார்த்து "முனியே, உமது வழி சரியன்று, இவ்விதம் செய்வதால் எதிர்பார்க்கும் நன்மை கிட்டாததும் தவிர, ஞானேந்திரியங்களன்ருே வீணுகிவிடும் இவ்வித கடும் தேக தண்டனையால்!"

சித்தார்த்தருடைய இந்த விவேக போதனை அவருக்கு சிறிதும் புலனுகவில்லை. ஆதலால், தன் தபத்தைக் கெடுக்க வந்த துராசரனுக சித்தார்த்தரை அனுமானித்துக் கொண்டு உரத்த குரலில் "ஓய், என்னை இதெல்லாம் விசாரிக்க நீர் யார்? உமது வழியைப் பார்த்துக் கொண்டு நீர் செல்லும்" என்று சொல்லி தம் காரியத்தில் கவனமாகி விட்டார் அவர்.

சித்தார்த்தருக்கு விசனமுண்டாயிற்று, மிகவும் கிலேசத்துடன் அனைவரிலும் முதியவராகத் தென்பட்ட ஒரு முனிவரை நோக்கிச் சென்றார்.

அவர் உடம்பு பார்க்கவே பயங்கரமானதாக அவ்வளவு எலும்பெடுத்துப் போயிருந்தது.

மெல்ல அவரருகில் சென்று நமஸ்கரித்து விட்டு "விருத்த முனியே சத்தியத்தைக் கண்டு பிடிக்க வென்று சென்ற ஓராண்டாக இக்குன்றினடிவாரத்தில் வசித்துக் கொண்டு தியானம் செய்து வருகிறேன். இன்று வரையில் எனக்கு ஒன்றும் புலனாகாததால் தங்களைப் போன்ற பெரியோர்களை அண்டினால் ஏதாவது அறியக் கிடைக்குமென்று இங்கே வந்தேன்.

வந்து பார்த்தால் இங்குள்ள என் சகோதர தபசிகளும் தாங்களும் தங்களை வருத்திக்கொண்டு மாய்கிறீர்கள்! ஐயோ, வாழ்வின் துயரங்களும், பிணிகளும் போதாதென்று இவ்விதம் நீங்கள் உங்களையே ஹிம்சித்துக் கொள்ளுகிறீர்கள்?"

"பாலயோகி, உனக்கு இதன் அர்த்தம் விளங்கவில்லை! அதனால் தான் தேகத்தைப் பெரிதாக பாவிக்கிறாய்! கேள்; நான் சொல்லப் போவதை.

"ஒருவன் சுக ஜீவியாக இருக்கும் வரையில் இவ்வாழ்வைத் துறக்க விரும்பான். வாழ்க்கையின் மாயை உள்ள வரையில் அவனுக்கு விடுதலை இல்லை. ஆதலால்தான் சரீரத்தை வருந்தி உலர்த்தினால், தேகாபிமானம் குறைந்து மரணத்தை இனியதாகக் கருதி அதை வரவேற்பான். அப்பொழுது அவன் செய்த அந்த தபாக்கினி அவனுடைய பாபத்தைத் தகித்துவிட்டு புண்ய பலங்களை அனுபவிக்க சுவர்க்கம் புகுகிறான் என்பதுதான் இதன் பொருள்" என்றார் கம்பீரமாக.

சுவர்க்கத்தை மோக்ஷ சாதனமாக நினைத்து அரும்பாடு படும் இந்த கஷ்ட ஜீவன்களைப் பார்த்து சித்தார்த்தருக்கு இன்னும் அதிகமாக துயரமுண்டாயிற்று, பரிதாபம் ததும்பும் குரலில் "முனியே, தாங்கள் சொன்ன பிரகாரம் சுவர்க்கமடைந்து விட்டால் போதுமா? அதோ வானத்தில் தெரிகிறதே பொன்னுடை நிகர்த்த மேகக் குவியல்கள்—அவை எவ்வாறு பிறந்தது? கடலினின்றும் உயர எழுந்ததுதான்; ஆனால் மறுபடியும் மழையாக பூமியின்மீது சார வேண்டியதே! மேடு பள்ளங்களிலும், நாற்ற, நறுமணங்களிலும் சமமாகக் கலந்து சிற்றாறாகி ஓடி. பெருநதியில் கலந்து அதுபோய் கடலில் கலந்து மறுபடியும் உயரப்போய் சேருகிறது.

அவ்விதமேதான் பாபமழிந்து புண்ய பலத்தினால் சுவர்க்கம் புகும் சுகிர்தாத்மாக்களுக்கும் இதே கதிதான்—இல்லையா? விலைக்கு வாங்கினது செலவழிந்து தானே போகிறது ஒரு நாள்? ஆதலால் புண்யத்தை விற்று வாங்கின சுவர்க்க சுகம் தீர்ந்து போனதும் மறுபடியும் மானிட தேகமெடுத்து வாழ்வின் துயரங்களை கற்றாக வேண்டி வருமல்லவா?"

"ஆமாம், நீ சொல்வது சரியாகத் தானிருக்கிறது. ஆனால் சிறிதாகிய இந்த உடல் துன்பத்தை சகித்தால் பெரிய பேறாகிய சுவர்க்க பதம் கிடைப்பதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம்!" என்றார் அந்த விருத்த தபசி.

சித்தார்த்தன் மிக்க கருணை யுடன் "முனிவரே, கோடி வருஷ அனுபவமாயினும் அது அழியும் சுகம்தான். தேவர்களோ, தேவ ராஜனே, நிலைத்து இருப்பதுண்டா என்றென்றும்?" என்று கேட்ட தும் தபசி சட்டென்று "அது இல்லை. பிரம்மம் ஒன்றுதான் நிலையுள்ளது. மற்ற யாவும் தோன்றி யழிவதுதான்" என்றார்

"ஞான விருத்தரே, சித்த சுத் தர்களான நீங்கள் அனித்தமான சுவர்க்க போகத்திற்காகவா இவ் வாறு ஆத்மாவைத் துன்புறுத்து கிறீர்கள்? தன்னலமற்றதும், சுத் ததத்துவமானதும், சாவற்றது மான ஆத்மாவின் உறைவிடமான இத்தேகத்தை வாட்டி நசிக்கக் கூடியதான சுவர்க்க போகத்தை அடைய விரும்புகிறீர்கள்!"

"ஜன்மாந்தரத்தின் வினைப்பயனை அனுபவிக்கப் பிறந்த இந்த ஜீவ னுடைய உடலை........."

விருத்த முனிவருக்கு அதற்கு மேல் தாங்க இயலவில்லை. நிர்தாட் சண்யமான குரலில் "பால பிரா யத்தில் யதியானவனுக்கு இம் மாதிரி குதர்க்க வாதம் புரியத் தான் தோன்றும், ஆதலால் உன திடமிருந்து ஏதேனும் கிடைக்கு மென்று எதிர்பார்க்கவில்லை நாங் கள். நம்பும் முயற்சியில் இறங்கிச் சென்றால் மேலே ஆகிறது ஆகட் டும். நீ உன் வழியைப் பார்த்துக் கொண்டு போ" என்றார்.

அந்த அஞ்ஞானிகளைக் கண்டு சித்தார்த்தருக்கு மிகவும் இரக்க முண்டாயிற்று மறுபடியும் "முனிவரே, உங்கள் நிர்தாட்சண் யத்தினால் எனக்கு ஏதும் குறை வில்லை. சுவர்க்க வாழ்வின் சுகத் திற்காக, நரகவேதனையையும் மிஞ் சியதான இச்சரீர வாதனையை அனுபவிக்கும் கொடுமை; ஆ, என்ன பாபமிது?" என்று அங்க லாய்த்தவராக வானத்தை நோக்கி நிமிர்ந்தார்—பிறகு திக்குகளை யெல்லாம் திரும்பித் திரும்பிப் பார்த்தார்.

ஆஹா, இயற்கைக்கு எவ்வளவு ...இழுக்காகிறது? அதோ, சூரிய தேஜஸை தான் உட்கொண்டு அத ற்குபசாரமாக இனிய சுகந்தத் தையும், வர்ண விசித்திரமான தோற்றங்களையும் பெற்ற புஷ்பங் களே! உங்கள் ஜனன மரணம் அர்த்தமுள்ளது-சார்த்தகமானது! அதோ, வானோங்கிய மரங்களெல் லாம் இனிதாக வாழவில்லையா? இளங்காற்றையும், நிலத்து நீரை யும் உட்கொண்டு? தான் பிறந்த பயனை நிழலையும், தளிர்களையும் காய், கனிகளையும் மானிடருக்குத் தரும் கடமையை உல்லாசத்தோடு தருகின்றன!

இதோ பக்ஷிகளின் பெருங்கூட் டத்தைப் பார்க்கிறேன்! பாவம் அவற்றிற்கு சுவர்க்கத்தின் சுக சௌக்யத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது! ஆதலால்தான் பெரிய பேறுகளை விரும்பி சிறிதான இப் பிறவிப் பயனை வெறுத்து விடா மல், ஜீவஹிம்ஸையினின்றும் தப் பியவர்களாக வாழ்கிறீர்கள்!

ஆம்! அசேதனமான தாவர உயிர்கள், ஜீவஹிம்ஸை என்பதே தெரியாத பட்சி இனங்கள், மிருக ஜாதிகள் அனைத்தையும்விட உத்த மமானது மானிடப்பிறவி! மானி டப் பிறவியின் அறிவு இவற்றி னின்றும் உயர்ந்தது எனப்படு வது; ஆனால் அது எதை நுகர்கின் றது? பேசக்கற்றது எதை? ஆமாம், அறிவு என்ற ஒன்றை ஆராய்ந்து அதன் மூலமாக......" இவ்வாறு சிந்தித்துக் கொண்டே மெல்ல நடந்து கொண்டிருந்த

சித்தார்த்தருடைய சிந்தனையைக் கலைத்தது ஒரு சலசலப்பு.

உடனே தலை நிமிர்ந்து சுற்று முற்றும் பார்க்கும்போது தூரத்தில் தெரிகிற மலையடிவாரத்திலிருந்து அந்த வழியில் வந்து கொண்டிருந்த பெரிய ஆட்டுமந்தை ஒன்றைக் கண்டார் சித்தார்த்தர்.

மந்தையின் இருபுறமும் இரு ஆட்டிடையர்கள் அவற்றை சிதற விடாது பாதுகாத்து ஓட்டிக் கொண்டு வந்ததை சித்தார்த்தர் நின்று கவனித்தார்.

மெதுவாக ஆடுகளின் கூட்டம் அவரைக் கடந்து சென்றது.

கூட்டத்தின் பின்புறமாக ஒற்றை ஆட்டுக்குட்டி வருவதும் கூட்டத்திலிருந்த ஒரு பெண்ணாடு, பின்னால் வரும் குட்டியை நோக்கி ஓடுவதும் அதை மறித்து அடித்து கூட்டத்தில் சேர்த்துச் செல்லும் ஆட்டிடையனையும் சித்தார்த்தர் கவனித்தார்.

பாவம், பின் தங்கிவிட்ட அந்த ஆட்டுக்குட்டி நொண்டி—மற்றவைகளுடன் சேர்ந்துவர அதற்கு திறனில்லாததால் நொண்டி நொண்டி மெல்ல நடந்து வந்தது தனது குட்டி எங்கு பின் தங்கி நின்று விடுமோ என்ற நினைவால் அதன் தாய் அதை நோக்கி ஓடுவதைக் கண்ட சித்தார்த்தருடைய நெஞ்சு உருகிற்று.

அட! மலைத்தாழ் வரையில் தபசியென்ற பெயருடன் வசித்துக் கொண்டு, பிக்ஷையெடுத்த அன்னத்தை உண்டு திரிந்து கண்டதென்ன? ஓயாத சிந்தனையால் என்ன பெற்றேன்?

ஆம்! வீண்பொழுது! இதோ இந்த ஆடு, குட்டியைத் தனித்து விட இயலாதபடி அதன் தாய்மையை அனுசரித்து ஓடுகிறது—தன்னை மறிப்பவனையும் மீறியதாக! குட்டியோ நொண்டி!

"அம்மா, பரோபகாரமாக யாதும் இதுகாறும் செய்தறியாத நான் இன்று இதோ உன் குட்டியை உன்னோடு கூடவே தூக்கிக் கொண்டு வருகிறேனம்மா! நீ சஞ்சலமின்றி வா" என்று சொல்லிக்கொண்டே சென்று முடமாக இருந்த அந்த ஆட்டுக் குட்டியைத் தூக்கி தோளில் சுமந்து கொண்டு நடக்கலானார்.

★

"உயர்ந்த கலை இயற்கையை அடியோடு மாற்றுவதில்லை; சீர்திருத்தம் செய்வதுமில்லை. எது அழகானதோ, எது பரிசுத்தமானதோ அதையே தேட விரும்புகிறது. கலைஞன் எவ்வளவு தூரம் அழகையும் தூய்மையையும் வெளிப்படுத்துகிறானோ அவ்வளவு தூரம் கலையும் உயர்வடைகிறது."

ருஸ்கின்

அன்னியன்

[கே. ஸ்ரீனிவாசன் எம். எஸ். ஸி]

எங்கள் ஊரே எந்தன் உலகம்
ஓடும் ஓடையே ஒலிக்குங் கடலாம்
கடலில் காகிதக் கப்பல் விடுவேன்
தேருந் திரு விழாச் சிந்தைக் கினிய
பண்டிகைப் பருவமே பூலோக சொர்க்கம்.
வாத்தியார் ஐயா சர்வ வியாபி
கண் கண்ட தெய்வம் கோயில் குருக்களே
ஆடை வழங்கும் ஆனந்த நகரம்
தூரத் திருப்பினும் தெய்விக உலகாம்
எல்லாக் குடிசையும் எந்தன் வீடே
பெரியவர் எவரும் பிரிய நண்பர்
அரும்புமென் அழகிய பாலர்
விரும்பும் என் விளையாட்டுத் தோழர்
ஆயினும் இன்றோ?
இன்று நானோர் அன்னியன் இங்கே.

(2)

பட்டணம் அனுப்பிப் படிக்க வைத்தனர்
பன்மொழிப் பண்டிதன் ஆக்க வேண்டி.
ஊருக்கு அதனல் உயர்வு வருமாம்
பேருக்கு எல்லாப் படிப்பும் படித்தேன்
புதுப்புதுச் செய்தி., புதுப் புது உண்மை
மனத்தை யாவும் மங்கச் செய்தன
கற்றுங் கேட்டவை கணக்கி லடங்கா
அன்னியருடனும், அயலாருடனும்
மெள்ள மெள்ளக் கலந்து கடைசியில்
ஐக்கியமானேன் அவர்களுடனே.
ஆயினும் எனது நெஞ்சமோ வென்னில்
தூரமிருப்பினும் ஊரையே எண்ணும்.
கிராமப் பண்பும், கிராமியப் பாங்கும்

ஊற்றெனப் பொங்கும் உள்ளக் கடலில்
திரும்ப மீண்டும் திரும்பி வந்தேன்
ஆயினும் நானோர் அன்னியன் இங்கே

(3)

இதயத் தினிக்கும் இன்ப ஞாபகமே!
மனம் நிறைந்த வாழ்த்துதல் நினக்கே
அன்பெலாம் உனக்கே ஆசை விளக்கே!
உன்னை யன்றி உறுதுணை இல்லை.
சாலை வழியே சென்றேன் ஓர் நாள்
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக
ஆகாய மளாவிய ஆலயத் திருமதில்
ஆண்டவன் எங்கோ யாரே அறிவர்?
ஈசன் இருக்கை எங்கோ தெரியேன்.
இங்கு நானோர் அன்னியன் அன்றோ!

(4)

சாளரந் தோறும் சிரிக்கும் முகங்கள்
சந்தோஷமாய் வரவேற்கும் முகங்கள்
சாத்திக் கிடக்குங் காரணம் என்னவோ?
மெல்லிய வெட்கத் திரையில் மறைந்தே
மெல்லியர் வருகை மெல்லென மறைந்தது.
ஆடவர் ஏனோ அமைதி யுற்றனர்.
காரணம் இதற்குக் காணவும் வேண்டுமா?
படிப்பும் வயசும் பண்ணிய மாறுதல்.
ஊரடிப் பள்ளியின் ஓரம் சென்றேன்
ஓர் காலத்தே "அ, ஆ" கற்ற
உண்மையின் இருப்பிடம் கண்டு வியந்தேன்.
ஆட்டமும் பாட்டமும் ஆடிக் குதிக்கும்
அருமைக் குழந்தைகள் சமுசயத்துடனே
பார்த்தே என்னைப் பக்கம் சென்றன
ஏனெனில் நானோர் அன்னியன் இங்கே.
குளிர்ந்த நிழலில் கூடி யிருப்போர்
கார சாரப் பேச்சிலே கலந்து

(5)

களிப்புக் கடலில் மூழ்கியதுண்டு.
ஆயினும் இன்று அவர்களும் ஏனே
அமைதி பூண்டு மௌன மாயினர்
'உடம்பு எப்படி? ஊருக்குப் போக
இன்னும் இரண்டொரு நாளாகுமோ?'
என்று மட்டும் என்னைக் கேட்டனர்.
அந்தி சாயும் அழகிய வேளை
அருவி யெங்கும் தகத் தகாயம்.
ஒளியின் மயக்கில் குளிக்கும் இயற்கை
தெம்மாங்கோடு வீடு திரும்பும்
உழவர் உழத்தியர் பள்ளுப் பாட்டு
கீத அலைகளில் மோதும் நெஞ்சம்.
முன்பு அக்காட்சியில் மூழ்கித் திளைப்பேன்
இன்று நானே என்னை வினவினேன்.
'என்ன இன்பம் இதிலெலாம்?' என்று.
வரையறை யற்ற குறைவிலா இன்பம்
எல்லை கோல எவரால் இயலும்?
அத்தனை அழகுதான் ஆயினும் எனக்கோ
இத்தனை துயரம், என்ன காரணமோ?
இன்று நானோர் அன்னியன் இங்கே.

(6)

எண்ணெய் விளக்கின் இலேசான ஒளியில்
திண்ணையில் கூடினர் யாவரும் ஒன்றாய்.
புதுமை பற்றிப் புதுப்புது விஷயம்
புதுமை குறித்துப் பொழுதெலா முரைத்தேன்.
அஞ்சா நெஞ்சுடை அருமைத் தலைவர்கள்
பஞ்சம் போக்கப் படுகிற பாட்டை
நெஞ்ச முருகக் கூறி மேலும்
நித்தியம் நிகழும் இத்தரைப் போக்கு
அங்கு மிங்கும் எங்கும் நடக்கும்
மகத்தான மாறுதல், மாபெரும் பிரச்னை

நமது நிலையை நன்கு கூறினேன்.
'ஆகா!' என்றனர். 'அடடா!' என்றனர்.
'ஆகா'க் கருதியா, 'அடடாக்' கருதியா
வேகா நெருப்பில் வேகுமென் நெஞ்சம்
விளக்கிக் கூறி விளக்கந் தந்தது?
ஐக்கியமாகி அவர்களுடனே
இரண்டறக் கலக்க இதயந் துடித்தது.
ஆயினும் அவர்கள் அறியவில்லை.
அன்பை நாடித் தவித்த(து) உள்ளம்
'ஆகா'க் கேட்டு அயர்ந்தது மெள்ள.
அவர்கள் அகத்திடை அன்பு உண்டு
என்னைப் பற்றிய ஏற்றமும் உண்டு.
நானே அவர்களின் அன்பின் ஆழம்
நீங்கி என்வழி — சென்றேன்.
ஆதலால் நானோர் அன்னியன் இங்கே.

(7)

இருண்ட இரவின் கருக்குப் பாதையில்
இல்லம் நோக்கி மெல்லச் சென்றேன்.
எனக்குமவர்கட் கிடையே பெரிய
வேலி, விளைந்த விவரம் என்னவோ?
கட்புலம் காணு முட்கள் முளைத்தன.
சொந்தம் என்றோ சுக்கு நூறுச்சு
என்ன நிகழ்ந்தது? ஏது நடந்தது?
நண்பர்களிடையே நான் தனி யானதேன்?
சகிக்க முடியாச் சங்கடம் எதனால்?
கடக்க முடியா வேலியும் ஏனோ?
இருண்ட இரவில் இருட்டே என் துணை.
அன்னியன் ஆன அதிசயம் என்னவோ?

(8)

மெள்ள மெள்ளச் சென்றன நாட்கள்
எங்கும் அமைதி, எவருடை வாழ்வும்
பண்டைப் போக்கே யாயினும், பரவசம்.
சஞ்சலம் சங்கடம் யாது நேரினும்
அன்று வகுத்த வழியே சென்றனர்.

எந்தன் இதயக் கரையிலோ வென்னின்
எழுந்தது இணையிலாப் பெரும் புயல் ஒன்று
அறிவு என்னும் அற்புத மணிகள்
அகத்தில் ஆழச் சென்று பதிந்தன.
அருமை மணிகள் அமைதி குலைத்தது.
பெருகும் எண்ண அலைகளைப் பெருக்கின.
மீண்டும் மனத்திடை புயலின் வேகம்
அண்ட முயரச் சுழன்று சுளித்தது.
சாந்தி சிதைத்துச் சாடும் சுழலில்
அடங்கி எந்தன் ஆன்மா ஆழ்ந்தது.
சாந்தி போகச் சஞ்சலம் மீள
நம்பிக்கை என்றோ நாசமாச்சுது.
பற்றுதல் வீணில் பாழாயிற்று.
ஆதலாலே ஆனந்த மில்லை.
அதனால் நானோர் அன்னியன் இங்கே.

(9)

இடை வெளி இன்னும் அதிகரித்தது.
இக்கரைக் கக்கரை பசுமை அன்றோ?
அங்கு என்றும் அமைதி உண்டு.
என்றோ இனித்த இன்ப நினைவில்
இன்று நானும் தேக்கித் திளைத்தேன்.
ஆயினும் இன்றதை நினைப்ப தன்றி.
மார்க்கமில்லை மகிழ்வுமில்லை.
மழையுங் காற்றும் என் வாழ்க்கை வழியில்
சீறும் புயலும் சிரிக்குங் கடலும்
நினைவுக் கோவையில் நிகழும் சலனம்.
உணர்ச்சியில் மாறிய பிணக்கின் போக்குகள்
குழப்பப் போக்கால் குவிந்திடும் உள்ளம்.
நீங்குவ தன்றி நிற்ப தேது?
பண்டைச் சித்திரம் பொய்க்கும் போது
தூர இருந்தே சுவைக்கலாம் இன்பம்
கனவு என்பதோர் கற்பகச் சோலை.
தூரம் அதற்குத் தடையிட முடியா.
இன்ப நினைவே இனிய நீர்ப் பெருக்கு.
இன்று நானோர் அன்னியன் இங்கே!

புத்தக ஆராய்ச்சி

●

[இந்து முஸ்லிம் ஏக் ஓ: ஆசிரியர்: முத்தமிழ் மணி. பிரசுரம்: முத்தமிழ்ப் பண்ணை, சென்னை. விலை ரூ. 1—0—0 பிரதிகளுக்கு: மானேஜர் தமிழ்மணி, சென்னை]

"இந்து முஸ்லிம் ஏக் ஓ!" என்ற புத்தகத்தைப் பார்த்ததும் "அச்சா ஹை!" என்று சொல்லும்படி இருக்கிறது. "மாசற்ற தமிழ் மக்களின் பசும் பொன் அனைய மனத்தினைச் சோதிக்கும் உறை கல்லே இப்பண்ணையில் வெளிவரும் ஒவ்வொரு நூலும்!" என்று பதிப்பகத்தார் தங்கள் குறிக்கோள் இன்னதென்பதைக் கூறுகிறார்கள். மனம் மகிழும்படியானதாக இருக்கிறது இக்குறிக்கோள்.

மந்திரி பக்தவத்சலம் 'மதிப்புரை'யில் இந்த விதம் குறிப்பிடுகிறார்: "தலைவர்கள் பேசுவதும், பத்திரிக்கைகளில் வெளி வருவதும் தவிர நம் கிராமங்களிலுள்ள இந்துக்களும் முஸ்லிம்களும் தொன்று தொட்டு ஏகோபித்து வாழ்ந்து வருபவர்கள். விவசாயத் துறையிலும், வியாபாரத் துறையிலும், சிநேக பாவத்துடன் தொழில் நடத்துபவர்கள். சமூகத் துறையில் ஒரு குடும்பமாக வாழ்கின்றவர்கள். அத்தகைய கிராம வாசிகளுக்கு இந்த சண்டையின் அர்த்தம் கூட சில சமயங்களில் புரிவதில்லை."

அனுபவ உண்மையில் நியாயமுண்டு. அதற்கு யாரும் மதிப்பும் தருவார்கள். சிக்கலான பிரச்னைகளிலும் அறிஞர்கள் ஈடுபட்டுச் சிந்தித்துக் கூறும் முடிவுகள் சமூகத்திற்கு அவசியம் நன்மை விளைவிக்கும். நல்ல நடையில் ஆசிரியர் புத்தகத்தை எழுதி இருக்கிறார். ஒற்றுமை ஓங்குமாக!

●

[ஆரோக்யமும் ஆசனமும்: ஆசிரியர்: வி. என். குமாரஸ்வாமி. பிரசுரம்: வி. என். குமாரஸ்வாமி அண்டு சன்ஸ், 216, திருவொற்றியூர் ஹைரோட், தண்டையார் பேட்டை. சென்னை. விலை அணா 12.]

"வயிரமுடைய நெஞ்சு வேண்டும்" என்று கவி பாரதியார் முழக்கினார். ஆம். வயிரமுடைய நெஞ்சு வேண்டும். அதற்கு என்ன வழி? பாரதியாரே பதிலும் சொல்லி விட்டுச் சென்றார். தேகத்தை இரும்பாக்க வேண்டும். திடமுள்ளதாகச் செய்ய வேண்டும். உடல் உறுதியுடனிருந்தால் உள்ளத்திலும் தெளிவு பிறக்கும். ஆனால், நம்மில் அனேகருக்கு அது தெரிவதில்லை. அந்தக் குறையை நீக்க ஆசனங்களின் சிறப்பை எடுத்துச் சொல்லி, தாமே செய்து காட்டி, விளக்குகிறார் இந்நூலாசிரியர்.

ஆசிரியர் திரு. டி. எஸ். சொக்க லிங்கம் அவர்கள் 'முன்னுரை'யில் கூறுகிறார்: "ஆசனங்கள் செய்வதில் ஸ்ரீ குமாரஸ்வாமி மிகுந்த திறமையுள்ளவர். தாம் பெற்ற நன்மைகளை வையத்து மக்களும் அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தான் இந்த நூலை அவர் பிரசுரிக்கிறார். அவர் எங்கு சென்றாலும் ஆசனங்கள் செய்து காட்டி, அவற்றின் நன்மைகளை எடுத்துச் சொல்லி வருகிறார். தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் அவருடைய இல்லத்திற்குப் போனால் சொல்லியும் வைக்கிறார். அவர் மேற் கொண்டிருக்கும் இந்தப் பரோபகார வேலைக்காக அவரை மிகுதியும் பாராட்டுகிறேன்.

"அவரை மட்டும் பாராட்டினால் போதாது. அன்னாரது மனைவியார் ஸ்ரீமதி சீதாலட்சுமி குமாரஸ்வாமியையும் பாராட்ட வேண்டும். ஏன்? ஸ்திரீகள் ஆதரவில்லாவிடில் எக்காரியமும் நடைபெறாது. அவர்கள் இடைஞ்சலாக இருக்க முற்பட்டு விட்டால் எதையும் ஈடேறாமல் செய்து விடலாம். ஸ்ரீமதி சீதாலட்சுமி குமாரஸ்வாமி அவ்வாறின்றித் தமது கணவருக்கு யோகாசன விஷயத்திலும் பெருத்த ஆதரவாயிருந்து வருகிறார்."

பெண்களும், ஆண்களும் ஆசனம் செய்து பயன் பெறலாம் என்பதை நூலாசிரியர் பிரத்தியட்சமாக எடுத்துக் காட்டுகிறார். பலவீனர்களாலும், கோழைகளாலும் சுதந்திரமாக வாழ முடியாது. ஆளவும் முடியாது. நம்முடைய அரசாட்சியை நாமே நடத்த நம்மை நாமே தயார் செய்து கொள்ள வேண்டாமா? பாரதியார் இசைத்தது போல், தேகத்தைப் பொன்னாக்க வேண்டும். அதற்கு துணை புரிகிறது இந்நூல்.

★

"பொருட் செல்வத்திற்கும் கல்விச் செல்வத்திற்கும் வித்தியாசம் உண்டு. பொருட் செல்வம் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க குறைவுபடும். கைவிட்டுக் கொடுக்க மனம் வருவதும் கடினம். கல்விச் செல்வமோ ஊற்று நீர்போல் அள்ளிக் கொடுக்கக் கொடுக்க மேலும் மேலும் பெருகும். கொடுப்போனுக்கு இன்பத்தையும் தரும். நாம் பெற்ற கல்விச் செல்வத்தைப் பிறருக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் போதுதான் நம் இன்பம் பூர்த்தி யடைகிறது."

சர். ஆர். கே. எஸ்
சிலப்பதிகாரம், புகார்க்காண்டம்
முகவுரையில்

197250

வெள்ளியோடம்

டி. சி. ராமசாமி

(ஒரு எழுத்தாளன் வீட்டின் உட்புறம். ஓர் அறை. அந்த அறையின் ஒரு சுவற்றின் மத்தியில் ஒரு சன்னல். அந்தச் சன்னலுக்கு வலது புறம் ஒரு கதவு.

அடுப்பங் கரையில் அவன் மனைவி உட்கார்ந்து கொண்டிருக்கிறள். இரண்டு சிறுவர்கள். கோபுவும் கோகிலமும் சன்னலுக் கருகில் நின்று பேசுகிறர்கள்.)

கோபு : அக்கா, அந்த மேகத்தைப் பார். (கோகிலம் சந்தோஷத்தினல் கை தட்டுகிருள்) ஒரு யானையைப் போலிருக்கிறது. யானையேதான்!

கோகிலம் : அது நொண்டி. வேகமாய்ப் போக முடியாது.

கோபு : நொண்டியல்ல. மிகப் பெரியது. மெதுவாகத்தான் போகும்.

கோகிலம் : நம்ம தாத்தாவின் தாடிமாதிரி எவ்வளவு வெள்ளையாகயிருக்கிறது! பாரடா கோபு

கோபு ! அதோ பார் நகர்ந்து கொண்டிருக்கிறது! எங்கே போகிறது?

கோகிலம் : காளை மாதிரி யிருக்கிறது. அதோ திமிழ்! வெகு தூரம் போகும்போலிருக்கிறது!

கோபு : அடேயப்பா! எவ்வளவு கருப்பா யிருக்கிறது! அப்பாவின் கவலைதோய்ந்த முகத்தைப் போல். இந்தக் கருமேகத்தைக் கண்டாலே பிடிக்கவில்லை! எனக்கு......?

கோகிலம் : எனக்கும் அப்படித் தான். கொஞ்சங்கூடப் பிடிக்க வில்லை, பிடிப்பதுமில்லை. அடுப்புக்கரி மாதிரி யிருக்கிறது! அம்மாவின் சேலைகூட அப்படித்தானிருக்கிறது!

கோபு : அக்கா, ஞாபக மிருக்கிறதா? அன்ருெருநாள் அப்பாவுடைய புஸ்தகத்தின் மேல் இங்க் கவிழ்ந்து விட்டதே. எப்படி யிருந்தது? ஒரே கருப்பா யிருந்தது. அப்பா எவ்வளவு வருத்தப் பட்டார். அது போலிருக்கிறது இந்த மேகம்!

கோகிலம் : கருப்பு மேகமா? ஐய்யய்யோ!

கோபு : மணியண்ணுவின் கோட்டுப் பிடிக்கிறது. கருப்பா யிருந்தாலும் எவ்வளவு 'பளபளப்' பாயிருக்கிறது! வக்கீலா யிருக்கிருர்; அப்பாவின் ஆப்த சிநேகிதராம்.

ராதை ! (கிருஷ்ணனின் மனைவி) பேசினது போதும். விளக்கை ஏற்றிப் படியுங்கள்.

கோபு! இருட்டா யில்லையே! என்ன அவசரம்?

கோகிலம்: இந்தச் சன்னலுக்கு அருகிலிருப்பது எவ்வளவு நன்ருக யிருக்கிறது! உனக்கு...?

கோபு: சன்னல் திறக்கும் பொழுது வானத்தைப் பார்ப்பதும் எவ்வளவு நன்ருக யிருக்கிறது!

கோகிலம்: சன்னல் மூடியிருக்கும் பொழுது அந்தக்கூரை கண்ணுடி வழியாக வானம் எவ்வளவு அழகாயிருக்கிறது! இரவு எப்படி உண்டாகிற தென்று உனக்குத் தெரியுமா?

கோபு: தெரியுமே. யார் வேண்டுமானுலும் சீக்கிரம் பதில் சொல்லி விடலாம்! உனக்குத் தெரியாதா?

கோகிலம்: நன்ருகத் தெரியும் உனக்கு...?

கோபு: எனக்கும் தெரியம். சூரியன் தூங்கப்போய் விட்டால் இரவு; விழித்துக் கொண்டால் காலை.

கோகிலம்: மேகங்கள் மறைந்து விட்டன. எங்கே போயிருக்கலாம்? ஒருக்கால் எங்கேயாவது ஒளிந்து கொண் டிருக்குமோ! அவைகளில்லாமல் வருத்தமா யிருக்கிறது.

கோபு: அப்பாவைப் பார்த்தால் தான் வருத்தமா யிருக்கிறது. மற்றபடி இந்தச் சன்னலில் வானத்தைப் பார்ப்பது ஆனந்தமாயிருக்கிறது. (இதற்குள் இருட்டி விடுகிறது) நெருப்புப் பெட்டி எங்கேயம்மா? விளக்கு ஏற்றி வைக்கிறேன்.

ராதை: இந்தா எடுத்துக்கொள். ஜாக்கிரதையாய்ப் பற்றவை. 'கண்ட்ரோல்' வந்ததிலிருந்து முக்கால்வாசி தீப்பெட்டிகள் கள்ள மார்க்கெட்டில் நுழைந்து விடுகின்றன! காற்று பலமாக வீசுகிறது. சன்னலை மூடி விட்டு தீபம் ஏற்று.

கோபு: ஒரு குச்சியிலே பற்ற வைக்கிறேன். (உரைக்கிருன்)

கோகிலம்: தீ எவ்வளவு அழகாயிருக்கிறது! எதையோ தேடுவது போலிருக்கிறது.

(குச்சி அணைந்து விடுகிறது)

ராதை: ஒரு குச்சி வீணுகி விட்டதா. அப்பவே சொன்னேன் கேட்டையா?

கோபு நானில்லை, அம்மா அவள் தான்......

கோகிலம்: நான் என்னடா பண்ணினேன். கோள் சொல்லாதே.

(மறுபடியும் பற்ற வைக்கிருன். அணைந்துவிடுகிறது.)

ராதை: இரண்டு குச்சிகள் வீணுகி விட்டன. இன்னும் சில குச்சிகள் தானிருக்கின்றன. நானே பற்றிக் கொள்கிறேன். புஸ்தகங்களை எடுத்துப் படியுங்கள். அப்பா வந்துவிடுவார். (தனக்குள் முணு முணுக்கிருள்) பாவம்! தினமும் எவ்வளவு நேரம் எழுதிக் கொண்டே இருக்கிருர்! எத்தனை தரம் பத்திரிகாலயங்களுக்குச் சென்றுவருகிருர்! (பிள்ளைகளைப் பார்த்து) சன்னலை மூடுங்கள்.

[சன்னல் மூடப் படுகிறது. இருட்டாக யிருக்கிறது]

கோபு: அக்கா, இருட்டில் உனக்குப் பயமில்லையா?

கோகிலம் : இல்லே உனக்கு...?

கோபு : எனக்கு மில்லே.

கோகிலம் : அப்பாவுக்குப் பகலேக் கண்டாலே பிடிப்பதில்லே என்று அம்மா நம்மிடம் சொல்லி யிருக்கிருள்.

கோபு : பாவம்! பகலெல்லாம் அவரைப் பலர் வந்து பார்க்கிருர்கள். அவரும் எங்கெல்லாமோ சுற்றுகிருர். என்ன வெல்லாமோ எழுதிக் கொண்டிருக்கிருர்! அதோபார். அந்த மலேகளுக்கு அப்பால் வெளிச்சம் தோன்றுகிறது!

கோகிலம் : அதுவா? சந்திரன். எவ்வளவு நன்ருக யிருக்கிறது! நம்மிடத்தில் இருந்தால் எப்படி யிருக்கும்?

கோபு : உன்ஞல் அதைப் பெற முடியாது. கைக்கு எட்டாது.

ராதை : (விளக்கை சுவரில் மாட்டி விட்டு தனக்குள் முனகிக் கொள்கிருள்.) எழுத்தாளன்... இருட் கடலில் மிதந்து கொண்டிருக்கும் மானிட சமுதாய மென்னும் கப்பல் நல்வழியிற் செல்ல உதவும் கலங்கரை விளக்கம் என்று சொல்லுகிருர்கள்... ஆனல்... அவன் குடும்பம்...நினேத்தாலே உள்ளம் குமுறுகிறது... இருக்க நல்ல வீடு கிடையாது... உடுக்க நல்ல ஆடை கிடையாது... உண்ண நல்ல உணவு கிடையாது... நாடகம், சினிமா, திருவிழா முதலிய சுகங்களுண்டா... (சமையல் செய்ய போகிருள்)

கோபு: (சந்திரனேச் சுட்டிக்காட்டி) எவ்வளவு பெரிய வட்டமா யிருக்கிறது! தங்கத் தட்டம் போலிருக்கிறது!

கோகிலம் : தங்கத் தட்டத்தைவிட தங்க நாணயமாயிருந்தால் நமக்கு வேண்டிய தெல்லாம் வாங்கலாமே.

கோபு: என்னென்ன வாங்குவாய்?

கோகிலம் : கடைக்குப் போய் மிட்டாய் வாங்குவேன்.

கோபு : நான் ஒரு பந்து வாங்குவேன். நாளேக்குப் பூராவும் அதை வைத்துக் கொண்டு விளேயாடுவேன். அக்கா, சந்திரனும் ஒரு பந்துதானே! ஒருக்கால் கடவுள் அதனுடன் விளேயாடுவார்!

கோகிலம் : இந்தச் சன்னல் மூலம் எவ்வளவு விந்தை விந்தையான காட்சிகளேப் பார்க்கலாம்! பாடலாம், அக்கா.

கோபு : என்னத்தைப் பாடுவது?

கோகிலம் : நிலவைப் பற்றிப் பாடலாம்.

கோபு : சரி. நீ முதலில் பாடு.

கோகிலம் : மாட்டேன் நீயே பாடு.

கோபு: இரண்டு பேருமே பாடலாம்.

(இருவரும் பாடுகிறார்கள்)

"மீன்கள் கோடி கோடி சூழ
வெண்ணிலாவே — ஒரு
வெள்ளி யோடம் போலவரும்
வெண்ணிலாவே"

பாட்டு முடிந்ததும் சந்தோஷத்தினால் பெருத்தஆரவாரம் செய்கிறார்கள். அந்த ஆரவாரம் வீட்டிலும் வெளியிலும் எதிரொலிக்கிறது)

ராதை: கோபு, கோகிலம், சாப்பிட வாருங்கள் நேரமாகி விட்டது. (இருவரும் சாப்பிட்டு விட்டு தூங்குகிறார்கள்)

(பக்கத்து வீட்டு லக்ஷ்மி உள்ளே நுழைகிறாள்.)

லக்ஷ்மி: 'ஒளி உதயத்தைக்' கொடு படித்து விட்டுத் தருகிறேன்.

ராதை: இதோ எடுத்துக் கொள். மெதுவாகக் கொடு. அவசரமில்லை.

லக்ஷ்மி: (புஸ்தகத்தைப் பெற்றுக் கொள்கிறாள்) உன் கணவன் எங்கே போயிருக்கிறார்? ஏன் இன்னும் வரவில்லை?

ராதை: உன் கணவன் வந்து விட்டாரா?

லக்ஷ்மி: இன்று வெகு சீக்கிரமே வந்துவிட்டார். தொழிற்சாலையில் இன்று வேலை அதிக மில்லையாம்.

ராதை: நீங்களெல்லாம் கொடுத்து வைத்தவர்கள். ஆட்களை மிரட்டி வேலை வாங்குகிறீர்கள். ஆனால், நீங்கள் வேலையில்லாமலே சுகப் படுகிறீர்கள்! பணம் குவிகிறது. மற்றவர்களும் உங்களை மதிக்கிறார்கள். ஆனால், எங்கள் தொழில்......

லக்ஷ்மி: உங்கள் தொழிலுக்கென்ன? எவ்வளவு மகத்தான தொழில்! பேரும் புகழும் சரமாரியாகப்பொழியும் தொழில். உலகமே எழுத்தாளனைக் கௌரவிக்கிறது.

ராதை: கௌரவித்து என்ன பயன்? வெறும் புகழையும் பேரையும் வைத்துக் கொண்டு என்ன செய்ய? சோறு

போடுமா? எழுத்தாளனின் சிருஷ்டிகளை ரசித்து என்ன பயன்? அவனுடைய க்ஷேமத்தைப் பற்றி யார் கவனிக்கிறார்கள்? அதுவும் இந்தத் தமிழ் நாட்டில்! வறுமை, வறுமை. இதுதான் அவன் ஊதியம்! அவன் காணும் சுகம்!

லக்ஷ்மி: ஆம், நீ சொல்வது உண்மைதான். வருந்தத்தக்க விஷயம். அனுதாபத்துக்குரியது.

ராதை : உண்மையாகவே நீ வருத்தப் படுகிறாய். பொருளுதவி கூடச் செய்கிறாய். உன்னைப் போல் பிறரும் அனுதாபம் தெரிவிக்கிறார்கள். வெறும் பசப்பு வார்த்தைகள்! இவர்களால் எங்கள் நிலைமை மாறி விடுமா?

லக்ஷ்மி : நேரமாகி விட்டது. நான் போய் வருகிறேன்.

(கிருஷ்ணன் உள்ளே நுழைகிறான்)

ராதை: ஏன் இன்று இவ்வளவு தாமதம்?

கிருஷ்ணன்: இலக்கிய சங்கத்திற்குப் போயிருந்தேன். விவாதம் நடந்தது. நேரமாகி விட்டது. நம் குழந்தைகள் எங்கே?

ராதை: அந்தி வேளையிலிருந்து அந்த சன்னலுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு, வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். படிக்கவில்லை. நிலவு உதயமானதும் அதைப் பற்றிப் பேசினார்கள்; பாடினார்கள். சாப்பிட்டு விட்டு தூங்கி விட்டார்கள். பாவம்! மேகமும் நிலவும் பாட்டும்தான் அவர்கள் கண்ட சுகம்! நல்ல ஆடை, நல்ல உணவு, கொண்டாட்டம் முதலியவை அவர்களுக்கு ஏது?

கிருஷ்ணன்: பசிக்கிறது இலைபோடு.

(இலை போடப்பட்டு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான்)

ராதை: நம்ம லக்ஷிமி இன்று 'ஒளி உதயத்தை' எடுத்துக்கொண்டு போய் விட்டாள்.

கிருஷ்ணன்: அது சரி, 'பனித்துளி' எப்படி யிருக்கிறது என்று சொன்னாள்?

ராதை: அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நமது லக்ஷியத்தை மறந்து விட்டீர்களா? மக்களின் அறியாமை இருளை அகற்றுவதுதானே? அவர்கள் நம்மை ஆதரிக்கா விட்டாலென்ன? மனதைப் புண்ணாக்கிக் கொள்ளாதீர்கள். நம் குழந்தைகளைப் போல் நாமும் சன்னல் வழியாக வானத்தைப் பார்த்து சந்தோஷப் படுவோம் வாருங்கள்.

(இருவரும் சன்னலுக்கருகில் நின்று வானத்தைப் பார்க்கின்றனர். வெண் மேகத் துண்டுகள் பல சிதறிக்கிடக்கின்றன. வெள்ளியோடம்போல் நிலவு மிதந்து கொண்டிருக்கிறது)

கிருஷ்ணன்: அதோ, அந்தக் கருமேகத்திற்குள் நிலவு மறைந்து கொண்டு, மேகத்தைச் சுற்றி வெள்ளிக் கம்பிகளைப் பரப்பி எவ்வளவு அழகு படுத்துகிறது! அதுபோல் வறுமையில் தவிக்கும் எனக்கு உன்னுடைய காதல் இன்பத்தைப் பரப்பி எழில் செய்கிறது! எழுத்தாளனுக்கு மிஞ்சியிருக்கும் ஆறுதல் அவனுடைய சிருஷ்டியின்பம் என்று சொல்லுகிறார்கள். அதைவிடக் காதல்தான் அவனுக்கு மிஞ்சியிருக்கும் ஆறுதல் என்று சொல்ல வேண்டும்.

(டிங், டிங் என்று 12 மணியடிக்கிறது.

ராதை: மணி 12 ஆகி விட்டது. நேற்றிரவு வெகு நேரம் எழுதிக்கொண்டிருந்தீர்கள். சரியாகத் தூங்கவில்லை. இன்னும் வெகு நேரமாகி விட்டது. உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள், தூங்குங்கள்.

(இருவரும் தூங்கச் செல்கிறார்கள்)

புனர்ஜென்மம்

கே.வி. துரைசாமி ராஜா

(சமீபத்தில் நடைபெற்ற ரேடியோ நாடகப் போட்டியில் பரிசு பெற்ற நாடகம் இது. இளம் நாடகாசிரியர்கள் இந்த நாடகத்தை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளலாம். நாடக பாத்திரங்கள் இயற்கையான குணத்தோடு நடமாடுகின்றன. நாடகாசிரியர் ஸ்ரீ ராஜு அவர்களுக்கு இது ஒரு பெரிய வெற்றி என்றே சொல்லலாம். 'நடிப்பதற்கு மட்டுமல்லாமல் படிப்பதற்கும் ஏற்ற நாடகம்'

ஆசிரியர்.)

★

இடம்: கிராமத்துப் பள்ளிக்கூடம். நேரம்: காலை.
பாத்திரங்கள்: உபாத்தியாயர் மாணவர்கள்.

[கடவுள் வாழ்த்து நடக்கிறது. எல்லோரும் சேர்ந்து பாடுகிறார்கள்.]

அய்யா நம் தோழர்களே அன்புடனே வருவீர்
ஆண்டவனைத் தோத்திரம் செய் (து)
அல்லல் அறப் பெறுவீர்

மெய்யாகக் காலைமாலை வேளைகளில் நெஞ்சம்
வேண்டித் துதிப்போம் நமக்கு
வேறில்லையே தஞ்சம்.

கொய்யாத தீங்கனியாம் கோதுபடாக் கரும்பாம்
குன்றாது வாழ்மணியாம்
கூறிடும் பொன் அரும்பாம்

பொய்யாமல் எவ்விடத்தும் பூரணமாம் பரமன்
பொற்பதத்தைப் போற்றி இன்பம்
பூண்டு மகிழ்வோமே

[இது கல்லார்க்கும் கற்றவர்க்கும் எனும் பாடலின் சந்தம்.]

[பாட்டு முடிகிறது. உபாத்தியாயர் உத்திரவு போடுகிருர்.]

உபாத்தி: உட்கார்.

[எல்லோரும் உட்காருகிருர்கள்.]

உபாத்தி: எழுந்திரு.

[எல்லோரும் எழுந்திருக்கிருர்கள்.]

உபாத்தி: கையைக் கட்டி ஆஜர் சொல்லு. வராதவன் வர்லேன்னு சொல்லு. வந்தவன் பிரசன்ட் சார்னு சொல்லு. அது எவண்டா அங்கே குனிஞ்சிட்டு இருக்கிறவன்; முதுகு பேந்து போகும். நிமிந்து நிக்கிரையா இல்லேயா. எவண்டா பக்கத்திலே போடுங்கடா முதுகிலே.

[பொத்-பொத்தென்று நாலடி விழுகிறது. அடி வாங்கினவன் பொறுக்க முடியாமல் அழுகிருன்.]

பையன்: ஊ ஊ ஊ ஊ.

உபாத்தி: ஏண்டா கிஜம்மா அழுவே — எடுடா பிரம்பே — வாயை மூடரையா இல்லேயா?

[வாயை மூடிக்கொண்டு திக் திக் கென்று மூச்சைப் பிடித்துக் கொண்டழுகிருன்.]

சீனு: சார் அப்புக்குட்டி என்னைக் கொக்காணி காட்ரான் சார்.

உபாத்தி: (கோபத்துடன்) தடிக் கழுதைகளா சத்தம் போடா தீங்கடான்னு மறுபடியும் சத்தமா?

[பிரம்பை எடுத்துச் சுளீர் சுளீர் என்று முறை இட்டவனை வீசுகிருர்.]

உபாத்தி: போடுவையா சத்தம்?

[சுளீர் என்று ஒரு வீச்சு.]

சீனு: இல்லே சார் இனிமே போடுலே சார். போடுலே சார். இல்லே சார். இல்லே சார்...... இல்லே சார்.

[கதறிக் கொண்டழுகிருன்.]

உபாத்தி: மூடுவாயெ, ஏறு பெஞ்சிமேலே.

சீனு: மூடிட்டேஞ் சார் — ஏறிட்டேஞ் சார்.

உபாத்தி: (சிங்க கர்ஜனையுடன்) கையைக் கட்டி ஆஜர் சொல்லு.

[ஆஜர் கூப்பிடுகிருர்]

உபாத்தி: குப்பண்ணன்.

பையன்: பிரன்ஞ்சார். (பிரஸன்ட் சார்)

உபாத்தி: குப்பமுத்தான். (சத்தம் இல்லே. மறுபடியும்)

உபா: குப்ப முத்தான்.

பையன்: வர்லேங்க சார்.

உபா: (உரத்த குரலுடன்) ஏண்டா வர்லே.

பையன்: அவகம்மா காட்டுக்குப் போயிட்டா சார். அவன் புள்ளேயை வெச்சிட்டு இருக்கான் சார்.

உபா: நாசமாப் போகட்டும் — அடுத்தவன் சொல்லு 'வீராச்சி'

[பதில் இல்லே.]

உபா: அவனெங்கேடா வீராச்சி வந்திருக்கானு.

பையன்: அவன் அப்பளே தாஞ் சார் மாட்டெப் புடுச்சிட்டு ஓடரான் சார். இனிமே எப்பவுமே பள்ளிக்கூடத்துக்கு வர மாட்டானுமாங்க சார்.

உபா: (கோபமாக) அப்படியாகிலும் தொலையட்டும். அடுத்தவன் சொல்லு 'சுப்பக்காள்'

சுப்பக்காள்: புருஷன் சார்.
(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

உபா: பிரஸன்ட் சார்னு நல்லாச் சொல்லித் தொலையரதுக்கு என்ன கேடு.

சுப்பக்: புருஷன்ஞ் சார்.

உபா: உட்கார்ந்து தொலை. எங்கயோ சாணி பெறுக்கப் போற கொரகங்களை எல்லாந் தலையிலே கட்டிட்டழுகத் தலைவிதி. அடுத்தவன் 'புளுகாண்டி'

ஒப்பயன்: அவனும் வர்லே சார்.

உபா: அந்த மந்தி எங்கேடா தொலைஞ்சான்.

பையன்: அவன் அம்மத்தாளோடே ஊருக்கு ஓடிட்டாஞ் சார்.

உபா: (சங்கடமாக) வெகு கழுதைகள் வரல்லே போலிருக்கே.

பையன்: ஆமாங்க சார்.

[ரிஜிஸ்டரை டொப் பென்று மூடுகிறார்.]

உபா: சரி ரெண்டு பேர் ஒருரவுண்டடிச்சு வராதவனை எல்லாங் கையோட பிடிச்சுக் கொண்டா.

[ரெண்டு பேர் "திப்புரு, திப்புரு" என்று வெளியே ஓடுகிறார்கள்.]

உபா: எங்கே 'பாக்கிப் பேர் — பாடங்களைப் படிச்சிட்டு இருக்கணும். எவனாவது ஒரு துளி மூச்சுக் கீச்சு விட்டீங்களோ. உரிச்சு உப்பைத் தடவிடுவேன். அவனாரா சட்டாம்பிள்ளே.

[பதிலைக் காணோம்]

பையன்: நேற்றுப் பொழுதோட சார் – அவன் கழுதைக்குப் பின்னாலே போயி வாலைப் பிடிச்சு சார்; அது எட்டி லப்புன்னு ஒதச்சு சார், முன்னத்தாம் பல்லெல்லாம் உதுர்ந்து போயி, ஆஸ்பத்திரிக்கும் போயிட்டாஞ் சார்.

[உபாத்தியாயர் அடை மூக்கை னொய்......னொய்...... என்று உறுஞ்சிக் கொண்டு]

ஜாக்கிரதை எவனாகிலுஞ் சத்தங் கித்தம் போட்டீங்களோ, தொலைஞ்சீங்கேன்னு வச்சுக்கோங்கே. நான் போயி காப்பி சாப்பிட்டு வர்ர வரைக்கும் அப்படியே அலுங்காமெக் குலுங்காம உக்கார்ந்திருக்கோணுந் தெரியுமா.

(எல்லோரும் ஒருமிக்க) சரீங்க சார்.

[வாத்தியார் வெளியே போகும் சத்தம்]

2

[உபாத்தியாயர் மனைவி லொடக் லொடக் கென்று பாத்திரம் தேய்த்துக் கொண்டிருக்கிறாள். கூப்பிட்டுக் கொண்டே நுழைகிறார்.]

உபா: ஏண்டி அடியே அடியே.

[பதில் இல்லை. மறுபடியும் கூப்பிடுகிறார்]

உபா: ஏண்டி – உன்னைத்தானே... அடியே. உனக்கென்ன தோட்டம் கீட்டந் தொலையாப் போயிரிச்சா என்ன.

மனை: ஐயா சொல்லுங்க (சிடுசிடுப்புடன்) நல்லாத்தாம் கேட்குது.

உபா : என்னடி வாய்த் திறக்க வேண்டாம்னு சொல்லறையா. நேரம் பாரு ஒரு பாடு ஆகிறது. இன்னும் வயித்துக்கு ஒன்னை யுங் காணம். அதிகாரி, கிதி காரி எவனுச்சியும் வந்து தொலைஞ்சுட்டான்னு அப்புறந் தெரியும்.

மனை : வந்தான்னு எல்லாமே முழுகிப் போகிற மாதிரிதான்.

உபா : உங்க பெரியப்பன் மக னல்ல விட்டுட்டுப் போயிடற துக்கு.

[பாத்திரங்களை எடுத்துக் கொண்டு வந்து கோபங் கோப மாகத் திப்பென்று போடுகிறுள். மூலைக் கொன்றாக உருண்டோடு கிறது.]

உபா : (பல்லை நெற நெற என்று கடித்துக் கொண்டு) ஏண்டி பாத்திரங்க உன்னை என்னடி பண்ணுச்சு. ஒதை பெறண்டு போகும் ஜாக்கிரதை,

மனை : மனுஷனுங்கற நெனப்பு இருந்தா ஆகும் – கழுதை நெனப்பு – ஏன் ஒதைக்கிறே ன்னு சொல்ல மாட்டீங்க.

[உபாத்தியாயருக்கும் கோபம் அபாரமாக வருகிறது. குரலைப் பிசாசு நிலைக்கு எழுப்பிக் கொண்டு]

உபா ; ஏண்டி நான் கழுதையாடி? நிஜந்தானடி.

மனை : சந்தேகமில்லாமெ. இப்ப என்னமோ மனுஷ சொரூபமா இருந்துட்டாலும் முன்னத்த ஜன்மத்திலையாச்சிக் கழுதையா பெறந்திருக்கோணும். அல்லது வர்ர ஜன்மத்திலையாச்சிக் கழு தையாப் பெறக்கப்போகணும். இல்லாட்டி இப்போ ஒதைக் கிற ஞாபகம் வருமா?

உபா : அடியே வார்த்தையை ஒதட்டுக்கு மீற விடாதே. பொல்லாதவனுயிடுவேன். பல்லு ஒண்ணில்லாமெ உதுந்து போகும்.

மனை : ஒதச்சுத்தானே உதுத்தப் போறிங்க. முன்னத்தங் காலா லையா பின்னத்தங் காலாலையா? உதுத்துங்க உதுத்துங்க மஹாரா சரா உதுத்துங்க. எப்போ இருந்தாலும் உதுர்ர பல்லுத் தானே இது.

[உபாத்தியாயருக்குக் கோபம் கரையை மீறி விடுகிறது. கீழே கிடக்கும் விளக்குமாற்றுக் கட் டையைக் கையிலே எடுத்துக் கொள்ளுகிறுர்.]

உபா : பாரடி கையிலே என் னென்று, தேய்ஞ்ச கட்டை. உச்சந்தலை பொகையாப் பொ கஞ்சிறும் ஜாக்கிறதை. வாய்க் கொழுப்பே சீலையிலே ஒழுக விடாதே.

மனை : பொம்மனட்டிகளும் ஆண் களோடே போட்டி போட் டுட்டு சரிசமானமாகக் காரி யங்க செய்யர காலம் இதுங் கிறதை ஐயா, கொஞ்சம் ஞாப கத்திலே வச்சுக்கோணும்.

உபா : ஏண்டி லம்பாடி, மறுபடி யும் வார்த்தைக்கு வார்த்தைப் பேசி வயித்தெரிச்சலைப் பொங்க வெக்கிறயா,

[பொங்காளிக் கவுண்டர் வாத் தியாரைக் கூப்பிட்டுக் கொண்டே வருகிறுர்.]

கவுண்டர் : வாத்தியாரையா, வாத் தியாரய்யா.

உபா : அது யார்? வெளியே! ஓஹோ ஊர்க் கவுண்டரா. வாங்க வாங்க உட்காருங்கோ.

கவு: இருக்கிறீங்களா; என்னங்கோ வீட்டிலே ஒரே ரவுசு மயமா இருக்குதுங்களா. வெளக்கமாற்றுக் கட்டையை வேறெ கையிலே வைச்சிக்கிட்டிருக்கறீங்க. அம்மாளோடே சண்டைங்களா.

உபா: சண்டை என்னங்க சண்டை, குடும்பம்ன்ஞலே



சண்டைன்னுதானே அர்த்தம். அந்தக் கொழுத்துப் போன முண்டைக்குப் பூசை போட்டு ரொம்ப நாளாகுதுங்கோ. இன்னைக்கிக் கெடுவு. குடுக்கறதைக் குடுத்தர்லாமுன்னு ஆரம்பிச்சேன். அதுக்குள்ளே நீங்க வந்து கெடுத்துப் போட்டீங்களே.

மனை: (உள்ளே இருந்துகொண்டு ஆத்திர ஆத்திரமாக) நீங்க பிசாசாட்டமாஇருக்கறப்போ நான் ஏன் முண்டையாகிறேன்? தெரியாது... உங்களைப் பாடையிலே வைச்சுக் கொண்டு போன பதினொன்னும் நாள் முண்டையாகிறது.

[விக்கி விக்கி அழுகிருள்]

உபா: பார்த்தீங்களா கவுண்டரே பார்த்தீங்களா! அவ வாய்க் கொழுப்பை, ஒரு அசலான் இருக்கிருனேன்னுங் கூடப் பார்க்காமே என்னைப் பிசாசுன்னு சொல்ருளே! அவளைச் சும்மா விட்டறலாமா? இப்பவே கொன்னு குழியெ வெட்டி இறக்கிப் போடறேன் பாரு.

கவு: சேச்சே வேண்டாங்க, வேண்டாங்க. படிச்சவங்க எல்லாம் இப்படிக் கோவுச்சுகிட்டா பாக்கிரவங்க காரித் துப்பிப் போடுவாங்கய்யா. புருசனும் பொஞ்சாதியும்னு இருந்தா போட்டுக்கிறதுதான் சண்டை. ஆனலும் இப்படியா நீங்கதானகட்டும், அடிக்கிறதுன்னு ஒரு குச்சிகிச்சி எடுத்து அடிக்கப் படாதா... கையிலே கிய்யிலே அடிக்கப் படாதா... மரியாதை இல்லாமெ விளக்கு மாற்றை எடுத்திட்டு ஓங்க நீங்களே ஐயா? உங்க புத்தி எப்படி; அதுன்னு ஒரு பெண்ணல்லவா மனுச சாதியல்லவா...... உங்களைப் போல பத்தெழுத்துப் படிச்சுப் பார்த்ததல்லவா? அதுக்குன்னு ஈஸுா ரோஸ மில்லாமப் போகுமா. ஆனலும் போங்க. காட்டு முட்டாளுக நாங்களுங் கூட இப்படி அசிங்கிதமா நடந்துக்கமாட்டமய்யா!. படிச்சவன் புத்திப் பானை வாயிக் குள்ளேன்னு சொல்ருகளே, அது நிசமாத் தான் போச்சு வாத்தியரே.

[கெஸ் கெஸ் என்று பெருமூச்சு விட்டு அழுதுகொண்டு உபாத்தியாயர் மனைவி வெளியே வருகிருள்.]

உ-மனை: கேளுங்கோ கவுண்டரே இந்த மனுசரோட யோக்கிதையை. கருப்பட்டி, காப்பித்தூள் தீந்து இன்னைக்கு சரியா ரெண்டு மாசமாகுது.

உபா: (குறுக்கிட்டு) அட சனியனே இந்தப் பாழாப் போன யுத்தம் வந்தன்னைக்கேதானே காப்பியைத் தொலச்சு தலைமுழுக்குப் போட்டுட்டேன். அதை ஏன் கட்டீட்டு அழறே.

கவு: காப்பியை விட்டுட்டது உடலுக்கு வெகு நல்லதுங்க. காலையிலே பழையது சாப்பிட்டா உடம்புக்கு ரொம்ப ரொம்ப நல்லதுங்க. தமாஷல்லங்க நிஜந் தானுங்கோ. நானுங்கூட அந்த கெரகத்தை எப்படியாகிலும் நிறுத்திப் போடோணும்னு ரொம்ப நாளா ரோசனை பண்ணிட்டிருக்கறேன்.

உபா: அந்தப் பாழாப் போன பழையதுக்குத்தான் கவுண்டரே மணி பதினென்ணகியுங் கெடைக்காமெ வயிறு பத்திப் பத்தி அவுஞ்சிட்டிருக்குது.

மனை : வீட்டிலிருந்தாத் தானே சட்டிக்கு வரும். நல்லாக் காது குடுத்துக் கேளுங்கோ கவுண்டரே. கூப்பன் கம்பு இவருக்கு ஒத்து வராது. ஒரு நாள் சாப்பிட்டதுக்கு வயித்திலே புடுங்கு புடுங்குன்னுப் புடுங்கி நடு வீட்டிலே தூக்கிப் போடற நிலமை ஆய்ப்போச்சு. ஆய்சு கெட்டியா இருக்கத் தலை தப்பிச்சாரு. மூந்தாநேத்துக் கோடூட்டு குப்பம்மா கிட்டிருந்து ஒருபடி அரிசிதான் வாங்கினேன். நேத்தைக்கிம் பக்கத்தூட்டுப் பார்வதி கிட்டே வாங்கினேன் – இன்னிக்கு – இன்னிக்குத்தான். மூந்தாநாள் புடிச்சுத்தான் சோத்துக்கில்லே, சோத்துக்கில்லேன்னு பாட்டுப் பாடீட்டு இருக்கறேன். மனுஷன் காதிலே போட்டுட்டாத் தானே? வீட்டிலே மிளகாயில்லே – வெங்காயமில்லே – பருப்பில்லே – புளியில்லே. அதெல்லாம் இல்லாட்டித் தொலையது. கடைசிக்குக் கஞ்சி கிஞ்சியாகிலும் வைச்சுக் குடிக்கிறதுக்கு உப்பும் விறகாயிலும் வேண்டாமா. அதுக்குக்கூட கதி இல்லே "உப்பு லேதுன இல்லு உத்தா இல்லு" ன்னு நாய்க்கர் தாஞ் சொல்லுவாங்க. வீட்டிலே ஒரு பொம்பளை சந்தோஷமா இருக்கோணும்னு எப்படி இருக்கிறதுங்கோ. நீங்கதான் சொல்லுங்க.

உபா: உன்னையாரடி வெறும் வீட்டிலே இருக்கச் சொன்னங்க? நிறைஞ்ச வீடு பாத்துக்கிறது. ஒரு வாத்தியான் வீடு எப்படி இருக்கும்னு தெரியாதா. எது எடுத்தாலும் இல்லே – இல்லே… … இல்லேதான்.

கவு : என்னங்க வாத்தியாரே விசயம் தெரியாமக் கோவுச்சுக்கறீங்களே. வீட்லே எல்லாம் நிறைஞ்சிருக்கிற வரையிலுந்தான் – பொண்களெல்லாம் பொன்களாவாங்க. குறைஞ்சு போனப் போச்சு அந்த நிமிஷத்திலேயே பேய்களாயிடுவாங்க. கடனை உடனை யாச்சி வாங்கிப் போடறதுக்குத்தானே ஆம்பளைகள் இருக்கராங்க.

உபா : இனி நான்தான் எங்கே போய் மண்டையை உடைச்சிட்டுச் சாகட்டும். ஐந்து ரூபாக் கைமாத்துக்கு இந்த அஞ்சு நாளா அலைஞ்சலைஞ்சு காலுங்கூடத் தேஞ்சு போச்சு. எவனும் நம்பி ஒரு காசு கொடுக்க மாட்டேங்கரான். பாவம் அவங்களைச் சொல்லி என்ன பண்றது, நம்ம தலை விதிக்கு. சர்க்கார்க்காரன் கொடுக்கிற சம்பளம் மாசத்திலே பாதி நாளைக்குங்கூடப் பத்த மாட்டேனுங்குது. நான் சீட்டாடப் போறதில்லை – குடிச்சுக் கூத்தாடப் போறதில்லை – கூத்தி வீட்டுக்கும் போறதில்லை – வர்ரதை எல்லாம் குடும்பத்துக்குத் தானே அழுதுட்டு வர்ரேன். பொடி மட்டைக் காசை யாகிலும் மிச்சம் பண்ணலாம்னு நித்தம் ஓசுப் பொடியை வாங்கி வாங்கிக் காலத்தை ஒப்பேத்தீட்டு வர்ரனே. நான் என்ன தாஞ் செய்யட்டுங் கவுண்டரே.

உ – மனை : என்ன செய்யரதா – முன்னெல்லாம் சர்க்கார்காரன் உடலையும் உசுரையும் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாகிலும் காப்பாத்தி வைச்சுக்கோன்னு அளந்தான். இன்னிக்கு உடல் போனப் போகுது – யுத்தம் முடியற வரைக்காகிலும் உசிரைப் போகாமெ பாத்துக்

கோன்னுதானே அளக்கிறன். பின்னென்ன ஒரு நேரங்குடிச்சும் ஒரு நேரங் குடிக்காமையும் என்னேரமும் வயித்துக்கு ஈரத்துணியை வைச்சு இறுக்கிக்கிட்டுத்தான் இருக்கோணும். நேரந்தவரும சோறு சோறுன்னு எங்கே போகிறது.

கவு: ஏனுங்க வாத்தியாரே சர்க்கார்காரன் அவ்வளவு மோசமாவா சம்பளம் கொடுக்கிறன். நித்தம் அறுகு வெட்டப் போனலுங்கூட ஒண்ணரை ரூபா துள்ளிக் குதுச்சிட்டு வில்லே போல வீட்டைத்தேடி வருமே. ஒரு புருசனுக்கும் பொஞ்சாதிக்குமே இப்படித் தாளம்போடறீங்களே. இனி பத்துப் புள்ளெ குட்டி ஆயிட்டு துன்னஎன்ன பண்ணுவீங்கோ?

உபா: பிறந்ததாலா—பிறக்கரப்பவே ஒவ்வொன்றைப் புடுச்சுக் கழுத்தைத் திருகிக் கெணத்துக்குள்ளே போட வேண்டியது தான்.

உ—மனே: அதுக்குத்தான் ஆவீங்க பின்னென்ன சந்ததியை விருத்திசெய்து சந்தோஷமாப் பார்க்கணும்ன இருக்கிறீங்க? (மறுபடியும் விக்கி விக்கி அழுதுகொண்டு) கழுத்திலே போட்டிருந்த காப்பவுன் அரப்பவுனுங் கரைஞ்சு கரைஞ்சு காத்தாப் போயாச்சு. இன்னும் கடையாப் போறதுக்குத்தான் வழி பண்ணி வைக்கிறே கடவுளே (விம்மி விம்மி அழுகிருள்.)

கவு: அழுகாதீங்கம்மா, அழுகாதீங்க; விதி எப்படி எப்படி எல்லாம் பொடனியைப் புடுச்சுத் தள்ளுதோ, அப்படி அப்படித்தானே போகணும் அழுதாத் தீருமாம்மா.

(உபாத்தியாயரைப் பார்த்து) ஏனுங்க வாத்தியாரையா எந்திரீங்க எங்க வீட்டுக்குப் போகலாம் ஒரு பிராம்சரி நோட்டு எழுதீட்டு ரெண்டு வள்ளச் சோளம் வாங்கிகிட்டு வருவீங்க.

உபா: போகலாம் எந்திரீங்க.

[இருவரும் எழுந்து போகிறர்கள்.]

உபா: ஏனுங்க கவுண்டரே பள்ளிக்கூடத்துக்குப் போயிட்டு வர்ரேன். தருதலே கழுதைகள் தலே கிளாக் குதுச்சுக்கிட்டிருக்கும். நீங்க போய் காயிதம் தலேச் சீட்டெல்லாம் எடுத்து வையுங்கோ, ஒரு நிமிசத்திலே வந்திர்ரேன்.

[பள்ளிக்கூடத்தில் ஒரே சப்தம்]

ஒரு தூரல்: டேய் மண்டயா பேசாமெ எனக்கொண்ணு குடுத்திறு; இல்லாட்டி வாத்தியாரு கிட்ட ஒண்ணுக்கு ரெண்டா மூட்டி விட்டிருவேன்.

மற்றொரு தூரல்: டேலே! வத்தா, நேத்தே எங்க மயிலக் காளேக்கு மூக்கணம் போட்டாச்சல்லோ.

இன்னொரு தூரல்: டேலே வயித்துக்குட்டி நேத்து எங்கய்யன் எங்க தோட்டத்துக் கிணத்துலே முக்கிளிச்சு எங்க வீட்டுச் சேந்து கெணத்திலே எந்திரிச்சாராக்கும்.

[நான்கு பேர் கொல் என்று சிரிக்கிறர்கள்.]

ஒரு தூரல்: என்னடா இவன் அவ கப்பனேவிட அசாத்தியமாய்ப் புளுகுவான் போல் இருக்கே.

ஒரு தூல்: டேலே—டேலே வாத்தியார் வாரார் டோய்.

[எல்லோரும் கப்சிப் என்று அடங்கிக் கொள்கிருர்கள். உபாத்தியாயர் உள்ளே வருகிருர்.]

உபா: அது யார்ரா பசங்களேக் கூப்பிடப் போனவன். பசங்க வந்தாங்களா.

கூப்பிடப் போனவன்: ரெண்டு பேர்த்தைத் தானுங்கசார் கூட்டிட்டு வந்தோம். ராமலிங்கம் எங்களைப் பார்த்ததும் கதவைச் சாத்தித் தாள் போட்டுட்டானுங்க சார். மாசாணி நாங்க வாரதைப் பார்த்து ஒரே ஓட்டமா ஓடீட்டானுங்க சார். நாங்களும் அவனைத் துரத்திப் பார்த்திட்டு அவனேட்டத்தைப் புடிக்க முடியாமெ திரும்பி வந்துட்டமுங்க சார். வீரப்பன் விளையாடீட்டிருந்தாஞ் சார். நாங்க அவனைக் கையோட புடிக்கங்காட்டி எங்க கையைப் பிடிச்சுக் கடுச்சுப் போட்டுக் கல்லெடுத்திட்டு துரத்தினனுங்க சார். கல்லடிக்குக் கெடைக்காமெ ஒரே ஓட்டமா ஓடி வந்துட்டமுங்க சார்.

உபா: போதுமடா நீங்க பசங்களைக் கூட்டீட்டு வந்த லக்ஷணம். (உரத்த குரலில்) அட மந்திகளா நானிப்போ ஊருக்கவுண்டர் வீட்டுக்கு நோட்டெழுதப் போறேன். நான் வர்ர வரைக்கும் நீங்க ஒன்று செய்திட்டிருக்கோணுந் தெரியுமா, எல்லாருஞ் சிலேட்டெடுத்து—அச்சுப் போல—எழுத்து முத்து முத்தா—நிறுத்தி—இரண்டு பக்கம் நிறைய எழுதியிருக்கோணும்.

எல்லோரும்: ஆகுட்டுங்கசார்.

உபா: சிலேட்டில்லாதவன் கையைக்கட்டி அசையாமெக் கப்புச் சுப்புன்னு இருக்கோணுந் தெரிஞ்சதா.

எல்லோரும்: ஆகட்டுங்க சார்.

[ஆசிரியர் கட் கட் என்று அடி எடுத்து வைத்துக் கொண்டு வெளியே செல்கிருர்.]

(அடுத்த இதழில் முடியும்)

★

"மனிதனின் அறிவை இருட்டடிப்பதை விட குழந்தைகளின் உள்ளத்தை எளிதில் இருட்டடித்து விடலாம்"

(ரிச்சர்)

"நாம் காண முடியாத ஏதோ ஒரு சக்தியின் பயங்கரமான நிழல் நம்மில் வட்டமிட்டுக் கொண்டேயிருக்கிறது"

(கடவுளைப் பற்றி சில்லி)

குழந்தையும் பாட்டும்

வெ. தூரன்

குழந்தை தொட்டிலிலே படுத்திருக்கிறது. தாய் தாலாட்டுகிறாள். அவள் வாயிலிருந்து அன்புடன் கானம் பிறந்து வீட்டை இனிமையிலும் அமைதியிலும் நிரப்புகின்றது.

கண்ணே என் கண்மணியே
  கனிரசமே கற்கண்டே
என்னாசை தீர வந்த
  எழிலுருவே கண்ணுறங்கு
கண்ணே நீ கண்ணுறங்கு
  கான மயிலே உறங்கு

குழந்தை பாட்டைக் கேட்கிறது. இசையிலே அதன் கவனம் சென்று ஒரே இடத்தில் நிலைத்து நிற்பதால் விரைவில் தூங்கி விடுகிறது.

பூங் குழந்தை பல சப்தங்களைச் செய்து மகிழ்கிறது.

உங்கு......ஊ......ஊ
உங்கு...குடிக்கிறயா...
ஊறுக்காய் திங்கிறயா...
பாலு...குடிக்கிறயா...
பழஞ்சோறு திங்கிறயா...

என்று தாய் படுத்துக் கொண்டிருக்கும் சின்னக் குழந்தையிடம் அன்பு கனியப் பேசுகிறாள். குழந்தை கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு முகத்தை குறுநகை தவழ உடலை நெளித்து நெளித்துத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது; அதுவும் ஊங்கு.....என்று இதழைக் குவித்துப் பேச முயல்கிறது.

குழந்தைக்கு நிலாவைக் கண் கண்டால் ஒரே இன்பம். சரோஜா (வயது மூன்று)

நிலா நிலா வா வா
நில்லாமல் ஓடி வா
மலைமேலே ஏறி வா
மல்லிகைப்பூ கொண்டு வா

என்று பாடுகிறாள். பாட்டிற்குத் தகுந்தவாறு கையினால் சைகை செய்கிறாள்.

கண்ணா கண்ணா
வெண்ணெய் தின்னும்
கண்ணா கண்ணா
கன்று மேய்க்கும்
கண்ணா கண்ணா
குன்றை ஏந்தும்
கண்ணா கண்ணா

என்று பாடுவதில் அவளுக்கு மிகப் பிரியம்.

ஓசை வனப்பும், இசையும், சந்தமும் குழந்தைக்கு மகிழ்ச்சியளிக்கிறது. பாட்டின் பொருளைப்பற்றிக் குழந்தைக்கு அக்கறை இல்லை. அதற்கு வேண்டியதெல்லாம் ஓசை இன்பந்தான்.

மலைமேலே மஞ்சு
மாரியம்மா குண்டம்
சின்னப் பிள்ளை தண்டம்
சிறுமணிக் கொப்பு

என்றிப்படிக் குழந்தை பாடுகிறது.

கண்ணம்மா மரப்பாச்சியைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டு கிருள். தாலாட்டுப் பாட்டும் பாடுகிருள். அந்தப் பாட்டு நமக்குப் பொருள் விளங்கும் வகையில் அமைந்திருக்க வில்லை. ஆனுல் அவளுக்கு அது மிக முக்கிய மானது. அவள் வாயிலிருந்து பிறக்கின்ற ஓசையினுள்ளே அவளுடைய உள்ளக் கற்பனைகளெல்லாம் தோய்ந்து கிடக்கின்றன.

குழந்தைக்குப் பாட்டு அவசியம். சந்த இன்பமும், ஓசை வனப்பும் உள்ள பாட்டு வேண்டும். குழந்தைகளுக்கான பழம் பாடல்கள் எத்தனையோ இருக்கின்றன. புதிய பாடல்களும் நிறையத் தேவை. வெகு காலமாகக் குழந்தைகளுக்குத் தாய்மார்கள் சொல்லிக் கொடுக்கும் ஒரு பாட்டைப் பாருங்கள்.

குள்ளக் குள்ளனே
குண்டு வயிறனே
வெள்ளிக் கொம்பனே
விநாயகனைத் தொழு

இது பிள்ளையார் தோத்திரம். குழந்தை அதைப்பாடி அதற்கேற்றபடி கையில் சைகைகளும் காண்பிக்கிறது. அப்படிச் செய்வதில் அதற்குச் சலிப்பே எற்படுவதில்லை.

(இன்னும் ஒரு பாட்டு)

பொழுதெப்போ விடியும்
பூ வெப்போ மலரும்
சிவ னெப்போ வருவார்
வர மெப்போ தருவார்

குழந்தைப் பாட்டிலும் நல்ல கருத்துக்களைப் புகுத்த வேண்டுமென்பது நம்மவர் ஆவல். ஓசையின்பத்தோடு கருத்தும் கலந்திருந்தால் நல்லது தானே? குழந்தை அதைப் புரிந்து கொள்ளுமா என்பது வேறு விஷயம். புரிந்து கொள்ளுகிற அளவு புரிந்து கொள்ளட்டும்; அந்தப் பாடல் மனதில் பதிந்திருந்தால் பின்னுல் அதன் கருத்துப் பயன் படாதா என்ன? என்றிவ்வாறு நம் பெரியோர் கருதுகின்றனர்.

உயர்ந்த சங்கீதத்தையும் குழந்தை கேட்க வேண்டும். அதனுல் அதன் உள்ளம் மலர்ச்சியடைகிறது. நல்ல இசைக்கு அற்புதமான சக்திஉண்டு. அதில் குழந்தையுள்ளமும் பாதிக்கப் படுகிறது. ஆகையால்தான் மற்றக் கலைகளைக் காண்பதற்குச் சந்தர்ப்பம் கொடுப்பது போல இதையும் கேட்கச் சந்தர்ப்பம் அவசியம்.

ஆனுல் சிறந்த சங்கீதத்தைக் கேட்ட குழந்தை நல்ல பாடகனுக வந்து விடுவான் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. சில பெற்ருேர்கள் இவ்வாறு எதிர்பார்த்துப் பின்னுல் ஏமாற்ற மடைகிருர்கள். இது சம்பந்தமாக நாம் ஒரு முக்கியமான உண்மையை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். குழந்தைக்கு இயல்பான திறமை எந்தத்துறையில் இருக்கிறதோ அதில்தான் அது உயர்ந்த நிலையையடைய முடியும். பயிற்சியால் எந்தத் துறையில் வேண்டுமானுலும் ஒரு சிறிது திறமை யடையும்படி செய்யலாம்; ஆனுல் அதில் மிகச் சிறந்து விளங்கும்படி செய்ய முடியாது. அவ்வாருனுல் நல்ல கலை யனுபவம் குழந்தைக்கு வேண்டு மென்று சொல்வதின் கருத்தென்னவென்றுகேட்கலாம். குழந்தைக்கு இயல்பாக எந்தக்

கலையில் திறமை யிருந்தாலும் அது நன்கு மலர்ந்து பூரணமாக வெளிப்படுவதற்கு இந்த இசை அனுபவம் பெரிதும் உதவியாக இருக்கும். குழந்தைக்கு எதில் திறமை இருக்கிற தென்பது ஆரம்பத்திலேயே நிச்சயமாக கண்டு பிடிக்க முடியாது. ஆதலால் தான் எல்லாக் கலைகளையும் அனுபவிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று மனஸ் தத்துவர்கள் சொல்லுகிறார்கள். மேலும் இந்தக் கலையனுபவம் வேறு வகையிலும் குழந்தையின் உள்ளம் மலர்ச்சி யடைவதற்கு உதவி செய்கின்றது. சிறந்த சங்கீதத்தைக் கேட்ட குழந்தை சங்கீதத்திலே பாண்டித்திய மடையாமலிருக்கலாம். ஆனால் அந்தக் கலையனுபவமானது வேறு ஒரு துறையில் குழந்தையின் திறமை வளர்வதற்கும் சாதக மாகின்றது. பொதுவாகக் கூறுமிடத்துக் கலைக்கு உள்ளத்தை விகசிக்கச் செய்யும் ஆற்றல் இருக்கின்றது. உள்ளப் பண்பையும் உயர்வடையச் செய்யும் சக்தி அதற்கு உண்டு. அதற்காகவே கலையனுபவம் எல்லாக் குழந்தைக்கும் வேண்டும்.

சிறு சிறு பாட்டுக்களை கற்றுக் கொடுக்கும் போதும், நல்ல இசையைக் கேட்கச் செய்யும் போதும் அவை குழந்தையின் உள்ள வளர்ச்சிக்கு உதவுகின்றன என்ற பொது நோக்கத்தைக் கொண்டே செய்ய வேண்டும்.

★

" கைகள், கண்களின் உதவியினால் செய்து கொள்ளும் விவாகத்தை விட, அறிவு, இதயம் இவற்றின் உதவியினால் செய்து கொள்ளும் விவாகமே சிறந்தது "

(ஜெர்மி டெய்லர்)

" யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் தன் வீட்டுக் காரியங்களையும் பொதுக் காரியங்களையும் நியாயமாகவும் சாமர்த்தியமாகவும் பிரமாத மாகவும் செய்யும் ஆற்றலைப் பெருக்கும் கல்வியே சிறந்த கல்வியாகும் "

(மில்டன்)

மனமாற்றம்

கோமதி சுவாமிநாதன்

ஜகன்னுதனுக்கு கோபம் கோபமாக வந்தது. அவன் இதயத் துடிப்பும் உள்ளக் கொந்தளிப்பும் சற்றுக்கூட அடங்கவில்லை. அவன் மனதில் ஒரே புயல்! அவனைக் குற்றம் சாட்ட இடமில்லை. அவன் மனதை பைசாசம் போல் பீடித்திருந்த ஓர் எண்ணம் தான் அதற்குக் காரணம். தன் மனைவி ஜானகி தன்னைக் கொஞ்ச நாளாகவே, அலக்ஷியம் செய்கிருள் என்ற உணர்ச்சி தான் அந்த எண்ணத்திற்கு அஸ்திவாரமாக அமைந்தது. அந்த உணர்ச்சி அவன் கண்களை மறைத்து அவள் பணிவுடன் செய்யும் எல்லாக்காரியங்களிலும் ஓர் வித அலக்ஷிய மனோபாவம் ததும்புவதாக ஒரு பிரமையைத் தோற்றுவித்தது.

சில நாட்களாகவே குமுறிக் கொண்டிருந்த அவன் உள்ளத்தை அன்று மாலை நடந்த ஓர் சாதாரண சம்பவம் பிரமாதமான ஓர் எரிமலையாகச் செய்து விட்டது. பார்க்கப் போனல் அது ஓர் மிகவும் சாதாரண விஷயம். மாலை ஆபீசிலிருந்து களைப்புடன் திரும்பியதும் உடைகளைக் கழற்றி விட்டு நாற்காலியில் சாய்ந்தான். கூடத்தில் ஜானகி குழந்தைக்கு பால் புகட்டிக்கொண்டிருந்தாள். ஜகன்னுதன் களைப்புடன் வந்தது அவளுக்குத் தெரியும். ஆனல் முரண்டு பிடித்துக் கொண்டிருந்த குழந்தை அப்போது தான் அழுகையை நிறுத்தி விட்டு பாலைக் குடித்துக் கொண்டிருந்தது.

ஜகன்னுதன் சற்று காத்திருந்தான். ஜானகி காப்பியை எடுத்துக் கொண்டு வரவில்லை. அவன் சிந்தனை அவனை பின் நோக்கி இழுத்துச் சென்றது. எத்தனை நாட்கள் அவன் வரவிற்காக அவள் ஏங்கி, வாசலில் வாடி நின்றிருக்கிருள்! எத்தனை நாட்கள் அவன் வந்ததும் வராததுமாக காப்பியைக் கையில் வைத்துக் கொண்டு காத்திருந்திருக்கிருள்! சிந்தனை பழைய இடத்திற்குத் திரும்பி வந்தது. ஆனல் இப்போது மாத்திரம், அவள் பிறந்தகத்திலிருந்துதிரும்பிய முதல் பழைய அன்பையும் ஆர்வத்தையும் காணுமே. யோஜனையை நிறுத்தி விட்டு "ஜானகி! காப்பி கொண்டு வா" என்ருன். அவன் குரலில் பரிமளித்த ஓர் கரகரப்பு அவன் உள்ளத்தின் நிலையை வெளிக்காட்டுவது போலிருந்தது.

ஆனல் அவள் அதைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. "கரியடுப்பின் மேல் வைத்திருக்கிறேன். எடுத்துக் கொள்கிறீர்களா? குழந்தைக்கு பால் புகட்டும் போது பாதியில் எழுந்திருந்தால் அவள் அப்புறம் குடிக்க மாட்டேனென்கிருள்" என்ருள் ஜானகி. அமைதி நிலவிய அவள் வார்த்தைகள் ஜகன்னுதனின் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. பொலு பொலுவென்று வார்த்தைகளைக் கொட்டி விட்டான். "என்னை விட உனக்கு உன் குழந்தை பெரிதாகப் போய் விட்டது. அந்த தரித்திரத் தோடேயே

கொஞ்சிக் கொண்டிரு. நான் தொலைந்து போகிறேன்,'' என்று சடசடவென்று வார்த்தைகளை உதிர்த்து விட்டு மேல் துண்டை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே போய் விட்டான். ஜானகி பிரம்மித்துப் போய் விட்டாள். தன் கணவனிடத்தில் கோபம் என்பதையே கண்டறியாத அவளுக்கு அன்றைய நிகழ்ச்சி மிகவும் புதிதாக இருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அவள் பிரமிப்பு துக்கமாக மாறியது.

ஜகன்னாதனின் கவனத்தை அவனுக்கு சமீபத்திலெழுந்த சம்பாஷணை கவர்ந்தது. கண்ணை விழித்துப் பார்த்தான். சுமார் பத்தடி தூரத்தில் நாகரீக தம்பதிகள் இருவர் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் மூன்று வயதுள்ள ஆண் குழந்தை ஒன்று விளையாடிக் கொண்டிருந்தது.

"போகுமிடமெல்லாம் இந்தச் சனியனை அழைத்துக் கொண்டு வரவேண்டுமென்கிறீர்களே. எனக்குக் கொஞ்சம் கூட சுகம்



வீட்டை விட்டுக் கிளம்பிய ஜகன்னாதன் நேராக சமுத்திரக் கரைக்குச் சென்று மணல் பரப்பில் துண்டை விரித்துப் படுத்தான். கோபம் என்னும் புயல் ஆத்திரம் என்னும் நெருப்பை கொழுந்துவிட்டு எரியச் செய்தது.

கண்ணை மூடிக் கொண்டு மணற் பரப்பில் படுத்துக் கொண்டிருந்த

கிடையாது'' என்றாள், நாகரீகமே உருவாகி வந்தது போல் அலங்கரித்துக் கொண்டு வந்திருந்த அந்த மங்கை. அவள் கை, தந்த விக்ரகம் போல் பால் வடியும் கன்னங்களுடன் விளையாடிக் கொண்டிருந்த அந்தக் குழந்தையைச் சுட்டிக் காண்பித்துக் கொண்டிருந்தது. ஜகன்னாதனின் மனதில் 'அவள் அந்த பாலகனுக்கு மாற்

ருந்தாய் போலிருக்கிறது. அதனுல் தான் அவள் அந்தக் குழந்தையை வெறுக்கிருள்' என்ற எண்ணம். பின்னும் கவனித்துக் கொண்டிருந்தான். ஆனுல், மேலும் வளர்ந்த எதிரே உள்ளவர்களின் சம்பாஷணே அவனேத் திகைப்படையச் செய்தது.

"நம் குழந்தையை நாம் கூட்டிக் கொண்டு வராமல் வீட்டில் விட்டு வந்தால், குடியிருப்பவர்கள் பார்த்துக் கொள்வார்களா? விளேயாட்டுக் குழந்தை தானே. நம்முடன் வரவேண்டு மென்று ஆசைப்படாதா?" என்று பரிவாகச்சொன்னுன் கணவன். தன்னேப் பற்றிக் காரசாரமான விவாதம் நடக்கிறது என்று தெரிந்து கொள்ளாத அந்தப் பாலகன், மணலே வாரி இறைத்துக் கொண்டு ஆனந்தமாக விளேயாடிக் கொண்டிருந்தான். "இந்தச் சனியன் பிறக்க வேண்டு மென்று நாம் காசிக்கும் ராமேஸ்வரத்திற்கும் போகவில்லேயே! இது பிறந்ததிலிருந்து என் உடம்பு குட்டிச் சுவரானது தான் மிச்சம்." என்று அங்கலாய்த்துக் கொண்டாள் அந்த நவநாகரீக யுவதி.

ஜகன்னுதனுக்கு சுரீரென்றது. "தான் பெற்றெடுத்த குழந்தையையா அவள் இவ்வளவு தூரம் வெறுக்கிருள்! அவள் என்ன ராக்ஷசியா? அந்தப் பச்சிளம் குழந்தையின் மீது பிரேமையே இல்லாத அவள் பெண்ணு பேயா? 'தாயார்' என்னும் மகோன்னத ஸ்தானத்திற்கும் சற்றும் அருகதையில்லாத பாதகி," என்றெல்லாம் அவன் மனம் குமுறியது.

பையைத் திறந்து அவள் கணவன் ஓர் தர்மாஸ் பிளாஸ்கை எடுத்தான். அதைக் கையில் வாங்கி மூடியை கழற்றினுள் அந்த யுவதி. மூடியைத் திறக்கும் சப்தம் கேட்டதும் அந்தக் குழந்தை, காலிலுள்ள சலங்கை குலுங்க அம்மாவிடம் அவசரம் அவசரமாக ஓடி வந்தது. "அம்மா, இப்ப காப்பி தரியா?" என்றது இனிமையான மழலேச் சொற்களினுல். உடனே அவள் ருத்திராகாரமாக மாறினுள்." வந்து விட்டாயா பிராணனே வாங்க? நீ ஒழிந்தால் தான் நிம்மதி" என்று சொல்லிக் கொண்டே, பிளாஸ்கிலிருந்த காப்பியை மடமடவென்று குடித்தாள். கோபத்தில், தன் கணவனுக்குக் கூட கொடுக்க மறந்து விட்டாள் போலிருக்கிறது. கடைசியாக மிஞ்சியதை, பிளாஸ்க் மூடியிலேயே விட்டு அந்தக் குழந்தையின் கையில் வேண்டா வெறுப்புடன் கொடுத்தாள். ரோஷம் தெரியாத அந்தக் குழந்தை அதை ஆவலுடன் வாங்கிக் குடிக்க ஆரம்பித்தது.

அப்போது காற்றுக் கொஞ்சம் பலமாக அடித்தது. அந்தக் குழந்தையின் கையிலுள்ள பிளாஸ்க் மூடி கைநழுவி அவள் கட்டிக் கொண்டிருந்த தும்பைப் பூ போன்ற சேலேயில் விழுந்தது. அதே விநாடியில் அதிலிருந்த காப்பி அவள் புடவையில் கொட்டி அதைப் பாழ்படுத்தி விட்டது. அடுத்த விநாடியில், அவள் இரண்டு கைகளாலும் அந்தக் குழந்தை முதுகில் பிசாசு போல் அறைந்தாள். "நாசமாய்ப் போக நீ," என்று வாய் முணு முணுத்தது. அந்தக் குழந்தை அடிபட்ட பிரமையில் இன்னும் அழ ஆரம்பிக்கவில்லே. ஆனுல் அவளுக்கு அனுதாபம் காட்டுவது போல், அவள் கணவன், அந்தப் பாலகனின் கரத்தைக் கரகரவென்று பிடித்து இழுத்து தானும் இரண்டு அறைகள் வைத்தான். அப்போது

தான் அந்தச் சிறுவன் வீறிட்டு அழ ஆரம்பித்தான். அதை அவர்கள் இரண்டு பேரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அந்தக் குழந்தையை அழாதே என்று கூட அவர்கள் சமாதானப் படுத்தவில்லை.

இதையெல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஜகன்னாதனுக்கு அந்தக் குழந்தையின் மீது அனுதாபம் எழுந்தது. பெற்றோர்களின், அன்பிற்கும், ஆதரவிற்கும், கொஞ்சம் கூட கொடுத்து வைக்காத அந்தச் சிறுவனைப் பார்த்தபோது அவனுக்கு பரிதாபமாக இருந்தது. ஆனால் அவன் பச்சாத் தாபத்தை எப்படிக் காண்பித்துக் கொள்ள முடியும். அந்தக் காக்ஷி அவன் உள்ளத்தை அவன் வீட்டிற்கே இழுத்துச் சென்றது. அவன் அகக் கண் முன்னால், ஜானகி, ஆர்வத்துடனும் அன்புடனும் தன் குழந்தைக்கு பால் புகட்டும் காக்ஷி தோன்றியது. ஜானகியையும் எதிரே உள்ள நாகரீக மங்கையையும் அவன் அந்தராத்மா, ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித்தது. அவன் மனதில் குடி கொண்டிருந்த கோபமும் கொந்தளிப்பும் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது. குழந்தையின் மீது உள்ள பாசத்தினால் தானே, ஜானகி தனக்குக் காட்ட வேண்டிய சலுகைகளைக் கூடக் காண்பிக்கவில்லை. அவள் மீது வேறென்ன குற்றம்? அவன் மனம் அவனை உறுத்தியது. ஜானகி வருத்தத்துடன் வீட்டில் அவன் வரவிற்காக ஏங்கி உட்கார்ந்திருப்பது போல் பிரமை ஏற்பட்டது. துண்டை உதறிக் கொண்டு எழுந்தான். அவனுக்கு உற்சாகமளிப்பது போல் ரேடியோவிலிருந்து இனிமையான குரலில், வசந்தா ராகத்தில், "இன்னும் தாமதமா" என்னும் கீதம் கிளம்பியது.

* * *

கை நிறைய 'புஷ்பம்; தின்பண்டங்களுடன் வீட்டிற்குத் திரும்பிய தன் கணவனைக் கண்டவுடன் ஜானகி தன் கண்களையே நம்பவில்லை. ஓட்டமாக ஓடி உள்ளே போய் சுடச் சுடக் காப்பியைக் கொண்டு வந்தாள். "இதைச் சாப்பிடுங்கள். இன்னும் ஐந்து நிமிஷத்தில் சாப்பிட இலையைப் போடுகிறேன்" என்றாள். "குழந்தை தூங்கி விட்டதா?" என்று கேட்டுக் கொண்டே கையிலிருந்த பூவை ஜானகி தலையில் சொருகினான் ஜகன்னாதன். "அப்பப்பா! என்ன துஷ்டத்தனம் போங்கள்! ரொம்ப சமர்த்து" என்று பதிலளித்தாள் பெருமிதத்துடன். ஜகன்னாதன் புளகாங்கித மடைந்தான். அவன் மனம் எவ்வாறு மாறியது என்று தெரிந்து கொள்ள ஜானகி விரும்பவில்லை. அவள் விரும்பியது அவன் மனமாற்றம் தான். அதன் காரணத்தைப் பற்றி அவள் அக்கரைப் படவில்லை.

தொடர்கதை:

அத்தியாயம் ஆறு

ஒவ்வொருவருடைய வாழ்க்கையின் லக்ஷியமும் ஏறக்குறைய கலாசாலைப் படிப்பிற்குள்ளாகவே பெரும்பாலும் உருவாகி விடுகிறது. சூழ்நிலையும், உலகப் போக்கும் சேர்ந்து அந்த உருவான லக்ஷியத்துக்குப் பாதை வகுக்கின்றன. அந்த லக்ஷியப்பாதையில் செல்பவரின் மனப்பாங்கு, திறமை, புத்திகூர்மை முதலியவற்றைப் பொருத்து அவருக்கு அந்த லக்ஷியத்தில் வெற்றியோ தோல்வியோ கிட்டுகிறது.

பலதரப்பட்ட மக்களுக்கு பல தரப்பட்ட லக்ஷியங்கள் அவரவர்களின் கருத்துக்கும், மனப்போக்குக்கும் ஏற்றதாக இருக்கும். இப்படி வேறுபட்ட லக்ஷியங்கள் கொண்ட ஒரு ஆணும் பெண்ணும் கூடி ஒற்றுமையாகக் குடும்பம் நடத்துவது இந்த நாளில் சாத்தியமல்ல. ஆனல் சுமதி, சுந்தரேசன் இல்வாழ்க்கை இதற்கு விதிவிலக்குப்போல் இருந்தது.

சுந்தரேசன் தீவிர நாஸ்திகன். அவனுக்கு முற்றிலும் மாறுபட்ட நோக்கமுள்ளவள் சுமதி. தெய்வம், பூஜை என்றல் அவளுக்கு ஒரே பைத்தியம். காலச்சுழலும், சமய சந்தர்ப்பங்களும், சுமதியின் அழகும் சேர்ந்து செல்வந்தனை சுந்தரேசனையும், சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்த சுமதியையும் கணவன் மனைவியாகப் பிணைத்தன. இரண்டு வருடங்களுக்குமேல் ஆகியும்கூட அவர்கள் பிணைப்போ, ஒற்றுமையோ துளியும் குறையவில்லை. குழந்தை கண்ணன் பிறந்தபிறகு அவர்கள் ஒற்றுமை இன்னும் அதிகரித்தது.

இருவருடைய லக்ஷியங்களும் ஒன்றற்கொன்று முரண் பட்டவையாய் இருந்தாலும் ஒருவருக்கொருவர் அந்த ஒரு விஷயத்தில் மட்டும் விட்டுக் கொடுத்து வாழ்க்கைஅமுதம் விஷமாகி விடாமல் பார்த்துக்கொண்டனர். கோயில், குளம் முதலிய இடங்க

னுக்கு சுமதி போவதை எக்காரணம் கொண்டும் சுந்தரேசன் தடுப்பதில்லே. அதேபோல் தெய்வ சம்பந்தமாய் எந்த விதமான பேச்சும் சுந்தரேசனிடம் சுமதி வைத்துக் கொள்வதில்லே. சுந்தரேசனின் வாதத் திறமையைப் பற்றிப் பலர் வியந்து கூறுவதை அவள் பலமுறை கேள்விப் பட்டிருந்தாலும் சிற்சில சமயங்களில் அவனிடம் ஆஸ்திகக் கொள்கை பற்றி விவாதிக்க சுமதிக்கு ஆசை எழுவதுண்டு. ஆனல் அவனது வாதத் திறமையும், குறுக்குக் கேள்விகளும் தன்னே அடியோடு மட்டம் தட்டிவிடும் என்ற பயம், அந்த ஆசையை இதயத்தின் ஒரு மூலேயில் பலமாக அழுத்தி வைத்திருந்தது. அதையும் மீறிக் கொண்டு, 'பொறு. இன்னும் கொஞ்சகாலம் பொறு. சுந்தரேசனே ஆஸ்திகனுக்க உன்னல் முடியும். அதற்கு இன்னும் வேளே வரவில்லே' என்று அவள் உள்ளத்தின் மற்ருெரு மூலேயிலிருந்துவரும் குரல் அவளுக்குத் தெம்பு அளித்தது. இழந்துபோன பலம் மீண்டும் கிடைத்தது. போன்ற ஆனந்தத்தை அளிக்கும். அந்த ஆனந்தம் ஏதாவது ஒரு தெய்வத் துதியை முணுமுணுக்க வைத்துவிடும்.

அன்று அப்படித்தான், கட்டிலில் படுத்துக்கொண்டு ஏதோ ஒரு பாட்டை மெதுவாகத் தனக்குள் பாடிக் கொண்டிருந்தாள் சுமதி. ஓசைப் படாமல்வந்த சுந்தரேசன் சற்று நேரம் அவள் பின்புறமே நின்று பாட்டை ரசித்துவிட்டு "சபாஷ்!" என்ருன். சுமதி திடுக்கிட்டு எழுந்தாள். சுந்தரேசன் அவள் அருகில்வந்து மெல்ல அவளேத் தழுவிக் கொண்டு, "அடேயப்பா, என்ன பயம்? நான் என்ன பேயா, பூதமா? அப்படிப் பயப்பட?" என்று கேட்டான் சிரித்துக் கொண்டே.

"ஆமாம். சத்தம் போடாமல் பின்புறம் வந்து திடீரென்று 'சபாஷ்' போட்டால் நான் எப்படித் திடுக்கிடாமல் இருப்பதாம்! நேர்வழியை விட்டுவிட்டுக் குறுக்குவழியில் வந்தால்?" என்று அறைகுறையாகப் பேச்சை நிறுத்தினுள் சுமதி.

"நான் என்ன செய்யட்டும் சுமதி? குறுக்கு வழியில் சென்று குறுக்குக் கேள்விகள் போடும் வழக்கம் ஊறிப்போய் விட்டது. அதை எப்படி நான் விடமுடியும்?"

"விடாவிட்டால் கட்டிப் பிடித்துக் கொள்ளுங்களேன்!" என்ருள் சுமதி.

"ஆஹா, இதோ!" என்று தனது இரண்டு கைகளேயும் சுமதியின் முன் நீட்டினுன் சுந்தரேசன்.

"போங்கள், உங்களுக்கு எப்போதும் விளேயாட்டுத்தான்!" என்று அவன் கையை ஒருபுறம் தள்ளிவிட்டு நாலடி நடந்து, வாருங்கள், சாப்பிட்டு விட்டுப் பிறகு பேசலாம்." என்று சமையலறையை நோக்கி நடந்தாள். போலீஸ்காரனேப் பின் தொடரும் கைதி போல் அவன் பின்னே சென்ருன், சுந்தரேசன்.

தலேவாழை இலே போட்டுப் பறிமாறினுள் சுமதி. அவளுடன் பேசிக்கொண்டே சாப்பிட்டான் சுந்தரேசன். கூட்டு இருந்த பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்து, சுந்தரேசன் வேண்டாம் வேண்டாம் என்று தடுக்கத் தடுக்க இலேயில் போட்டு விட்டாள் சுமதி.

"ஏன், கூட்டு நன்ருக இல்லையா? வேண்டாம் வேண்டாம் என்று கதறுகிறீர்களே!" என்ருள் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே.

கூட்டு என்னவோ அன்று அருமையாக அமைந்து விட்டது. ஏறக்குறைய இருந்தது எல்லாம் தன் இலையில் விழுந்து விட்டால் அவளுக்கு ஒன்றும் மீதி இருக்காதே என்பதால்தான் "வேண்டாம் வேண்டாம்" என்று தடுத்தான் சுந்தரேசன். ஆனல் கூட்டு நன்ருக இல்லாததால்தான் வேண்டாம் என்கிருேம் என்று அவள் நினைத்துக் கொள்ளக் கூடாதே என்ற கவலை அவனுக்கு. கடைசியில் அவள் பேச்சு அவன் கவலையைப் பிரதிபலித்ததால் அன்றைய கூட்டைப் பற்றி வர்ணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது, அவனுக்கு.

"கூட்டு உன் குரலினிமை போல் அருமையாக, ஆனந்தமாக, அற்புதமாக, அபாரமாக இருக்கிறது. ஆனல் எனக்கு ஒரு வயிறு தானே இருக்கிறது; நான் என்ன செய்யட்டும்" என்று சுமதியை, ஏக்கமும், பரிதாபமும் கலந்து பிரகாசித்த கண்களால் பார்த்தான்.

சாந்தமும் அன்பும் உற்பத்தியாகும் மூலஸ்தானம் போன்றிருந்தது சுமதியின் களையான முகம். பவள மலையின் மீது லேசாகப் படிந்திருக்கும் பனிப் படலம் போல் அவளது சிவந்த பரந்த நெற்றியிலே திருநீறும் பிரகாசித்தது. நகைகள் ஒன்றும் அதிகமில்லை. இடையில் சாதாரண நூல் புடவைதான் உடுத்தியிருந்தாள் என்ருலும் கடைந்தெடுத்த தந்தப் பதுமை போன்ற அவள் உடலுக்கும், புடவையின் நிறத்துக்கும் வெகு பொருத்தமாக இருந்தது.

சுமதியின் எழிலில் லயித்த சுந்தரேசனின் கண்களில் ஒளிவிட்ட ஏக்கம், பரிதாபம் இந்த இரண்டுக்கும் பதிலாக இப்போது ஆனந்தமும் மகிழ்ச்சியும் ஒன்று கலந்து பிரகாசித்தன. அந்தப் பிரகாசம் சுமதியின் கண்களைக் கூசச் செய்தது.

அதன் ஒளியினுலோ என்னவோ சுமதி தன் கண்களை வேறு புறம் திருப்பிக் கொண்டு, "சரிதான். கூட்டு நன்ருக இல்லை என்பது இப்போதுதானே தெரிகிறது. முன்பே தெரிந்திருந்தால் அதிகம் போட்டிருக்க மாட்டேனே" என்ருள்.

"அட அநியாயமே, கூட்டு நன்ருகத்தானே இருக்கிறது. உன் குரலினிமை எனக்குப் பிடித்தவைகளின் சிகரம். கூட்டு இன்றைய சமையலின் சிகரம். ஆகவே இரண்டையும் சம்பந்தப்படுத்தி உன் குரலினிமை போல் கூட்டு நன்ருக இருக்கிறது என்று சொன்னேன். நீ ஏன் அதைத் தவருக நினைத்துக் கொள்கிருய்?"

"ஆமாம் தவருக என்ன நினைத்து விட்டேன்? சமீபத்தில் ஏதோ ஒரு பிரபல மாதப் பத்திரிகையில் ஒரு துணுக்குப் படித்தேன். ஒரு எழுத்தாளனிடம் ஒரு ஓட்டல் அம்பி "பெண் இதயம் போன்ற மிருதுவான வடை கொண்டு வரட்டுமா?" என்று கேட்கிருன். எழுத்தாளன் வேண்டாம் என்று மறுத்து பக்கவடாவோ, பஜ்ஜியோ கொண்டுவரச் சொல்கிருன். அதைப் போலத்தான் நீங்கள் என் குரலினிமையையும், கூட்டையும் சேர்த்து என்னமோ குழப்பி,

கூட்டு நன்றாக இல்லை என்பதை நாசூக்காகச் சொல்கிறீர்கள்.''

''எனக்குத் தெரியும் நீ அப்படித்தான் நினைத்துக் கொள்வாய் என்று. நான் பிற்பாடுதான் அதைப்பற்றி நினைத்தேன். நான் அந்தத் துணுக்கை உன்னிடம் படித்துக் காட்டியது கூட எனக்கு இப்பொழுதுதான் நினைவு வந்தது. போகட்டும். உன் சமையலை—கூட்டு உள்ப்படத் தான் சொல்கிறேன். சாப்பிட

லறை முழுவதும் அலை மோதியது.

''அதெல்லாம் வேண்டாம். வேண்டுமானால் நீங்கள் இன்னும் கொஞ்சம் குறைத்தே சாப்பிடுங்கள். அதற்காகச் சோதனை செய்யப்போய், கடைசியில் வயிறு இன்னும் சிறிதாகப் போய்விடப் போகிறது'' என்றாள் புன்சிரிப்புடன். அச்சிரிப்புடன் சுந்தரேசனின் இளநகையும் ஐக்கியமாயிற்று.

கையலம்பச் சென்றான் சுந்த

எனக்கு இந்த வயிறு போதவே இல்லை. யாராவது ஒரு விஞ்ஞானியிடம் சென்று இந்த வயிற்றை இன்னும் பெரிதாகக் முடியுமா என்று சோதனை செய்து பார்க்கப் போகிறேன்.''

கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தாள் சுமதி. அவள் சிரிப்பின் இன்ப நாதம் அந்தச் சமைய

ரேசன். அதற்குள் ஊஞ்சலின் மேல் வெற்றிலைத் தட்டு வைக்கப்பட்டிருந்தது. கையைத் துண்டால் துடைத்துக் கொண்டே வந்து ஊஞ்சலில் உட்கார்ந்தான். வெற்றிலைத் தட்டில் ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் இருந்த வாசனைப் பாக்குத்தூளை வாயிற்போட்டுக் கொண்டு ஒரு வெற்றிலையை

எடுத்துத் துடைத்தபடி தன் எதிரில் ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்த சுமதியின் கைவளையல்களைப் பார்த்தான் சற்று நேரம். சற்று கழித்து "அந்தத் தங்கக் கைகள் இந்த வெள்ளை வெற்றிலைகளுக்குச் சுண்ணம்பு தடவி, மடித்துக் கொடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று வேறொரு பக்கம் பார்த்துக் கொண்டு சொன்னான்.

"இருக்கும், இருக்கும். அப்படி மடித்துக் கொடுப்பதைப் பற்றி ஆக்ஷேபணை இல்லை. ஆனால் இந்த ஒரு கவுளி வெற்றிலையும், கிண்ணத்திலுள்ள பாக்கு அவ்வளவும் காணாதே என்பதனால் தான் மடித்துக் கொடுக்கவில்லை. காரணம் தெரிகிறதா?"

"அடபாவமே! அப்போது நான் என்ன, தழை தின்னும் ஆடு என்று நினைத்துக் கொண்டாயா?"

"சே, சே; இந்த ஜென்மத்தில் இல்லாவிட்டாலும், போன ஜென்மத்திலாவது ஒரு சமயம் ஆடாக இருந்திருப்பீர்கள்" என்று சொல்லிவிட்டு உரத்த குரலில் சிரிக்க ஆரம்பித்து விட்டாள். சுந்தரேசன் பதில் ஏதும் சொல்ல முடியாமல் அவளுடன்கூடச் சேர்ந்து சிரித்து விட்டான். திடீரென்று அவனுக்கு அவள் இன்னும் சாப்பிடவில்லை என்பது நினைவு வந்தது.

"அதெல்லாம் இருக்கட்டும், அம்பிகே! பராசக்தி! நீ சென்று சாப்பிடுவதுதானே? எப்பொழுது சாப்பிடுவது? மணி இரண்டுக்குமேல் ஆகிவிட்டதே!

"என் வாயைக் கிளறுகிறீர்கள்! பேசிக்கொண்டே இருந்தால் பதில் சொல்லாமல் எப்படிச் சாப்பிடுவதாம்? இதில் பராசக்தியாம் அம்பிகையாம்! நல்ல வேளையாய்க் கண்ணன் இன்னும் விழித்துக் கொள்ளவில்லை. அதற்குள் சாப்பிட்டு விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு தூரத்தில் இருந்த தொட்டிலையும் ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சமையலறையை நோக்கிச் சென்றாள் சுமதி.

ஊஞ்சலிலிருந்த வெற்றிலைத் தட்டத்தை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு, வெற்றிலையை ஒன்றின்பின் ஒன்றாய் மடித்து மடித்து வாயில் போட்டு மெல்லத் தொடங்கினான் சுந்தரேசன்.

அத்தியாயம் ஏழு

காமாக்ஷியம்மாள், ராஜம்மாளைக் கோயமுத்தூருக்கு வரும்படி எவ்வளவோ வற்புறுத்தியும்கூட ராஜம்மாள் மற்றொரு சமயம் வருவதாகச் சொல்லி, வேண்டுகோளையும், வற்புறுத்துதலையும் மறுத்து விட்டாள். தன்னை ஒருவரும் அழைக்க வேண்டியதில்லை எனவும், தனக்கு எப்பொழுது கோயமுத்தூருக்கு வரத் தோன்றுகிறதோ அப்பொழுது புறப்பட்டு அங்கு வந்து விடுவதாகவும் உறுதியளித்ததின்மேல் காமாக்ஷியம்மாளுக்கு சற்று மன நிம்மதி ஏற்பட்டது. சேகரனுக் உடனடியாக ரஜா கிடைக்கவில்லை. அதனால் தான் இரண்டொரு நாளில் 'ரஜா' கிடைத்ததும் வந்து சேருவதாகவும் புவனாவை வேண்டுமானால் அழைத்துக் கொண்டு போகும் படியும் சொல்லி விட்டான். எனவே காமாக்ஷியம்மாள் புவனாவுடனும், முத்துசாமியுடனும் கோயமுத்தூருக்கு வந்து சேர்ந்

தாள். கொஞ்சகாலமாக கார் சவாரியே செய்யாமல் இருந்த புவனேஸ்வரி, அதையெல்லாம் சேர்த்து வட்டியும் முதலுமாக இப்போது காரில் சவாரி செய்ய ஆரம்பித்தாள். அத்தனை நாட்களாகப் பார்க்காதிருந்த தன் தோழிகளையெல்லாம் பார்த்து வந்தாள். அவர்களுடன் மணிக் கணக்கில் பேசினாள். அப்பொழுது ஓடிக் கொண்டிருந்த சினிமாப் படங்களில் முக்கியமானவைகளையெல்லாம் பார்த்துத் தீர்த்தாள். கடைசியில் அவளுக்கே அலுத்துப் போய் இரண்டு நாட்கள் வீட்டில் பரிபூரண ஓய்வு எடுத்துக் கொண்டாள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை, புவனா கட்டிலில் படுத்துக் கொண்டு ஏதோ ஒரு தமிழ் நாவலைப் புரட்டிக்கொண்டிருந்தாள். கட்டிலின் அருகே கிடந்த வட்ட மேஜையின்மேல் சில புத்தகங்களும், பத்திரிகைகளும் இறைந்து கிடந்தன. கொசுவலை கட்டிலின் மேல் தூக்கிப் போடப்பட்டிருந்தது. சுற்றிலும்இருந்தசுவரில் விலை உயர்ந்த பல நல்ல படங்கள் அழகான சட்டம் அடிக்கப் பெற்று மாட்டப்பட்டிருந்தன. அதன் மத்தியில் ஒரு பெரிய கடிகாரம் கம்பீரமாய் அமர்ந்திருந்தது.

'கையிலிருந்த நாவல் சுவையாய் இல்லாததாலோ என்னவோ 'டப்' பென்று புத்தகத்தைமூடி மேஜைமேல் எறிந்து விட்டு, வேறொரு பத்திரிகையைப் பிரித்து பக்கங்களைப் புரட்டினாள். அதுவும் பிடிக்கவில்லை. அதையும் மேஜைமேல் எறிந்துவிட்டு கடிகாரத்தைப் பார்த்தாள். மணி, நாலடிக்க ஐந்து நிமிஷங்கள் இருந்தன. மூன்று நாட்களுக்கு முன்பே வந்திருக்க வேண்டிய சேகரன் இன்னும் வராதது ஏன் என்று அவளுக்குத் தெரியவில்லை. வராததற்கு வேறு ஏதாவது காரணம் இருக்க முடியுமா என்று யோசிக்கலானாள். அவளுக்கு வேறு ஒரு காரணமும் தெரியவில்லை. என்றாலும் தன் அப்பாவிடம் அவருக்கு ஓரளவு அதிர்ப்தி என்பதை மட்டும் அவள் அறிந்திருந்தாள். ஆனால் அதற்காக இப்போது வராமலிருந்து விடுவாரா என்பது அவளுக்கே சந்தேகமாக இருந்தது. கடைசியில் 'ரஜா' கிடைக்கத்தான் தாமதம் ஆகிறது போலும் என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டு தன் கவனத்தை வேறு திசையில் யில் திருப்ப முயன்றாள்.

சுவரிலிருந்த கடிகாரம் நான்கு முறை மணியடித்து விட்டு ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்து விட்டது போல் திருப்தியடைந்தது. அந்த மணியோசை அடங்குவதற்குள் சமையற்கார வேலாயுதம் ஒரு வெள்ளித்தட்டில் காப்பி பலகாரங்களை எடுத்துக் கொண்டு வந்து புவனாவின் கையில் கொடுத்து விட்டுக் கீழே இறங்கிச் சென்றான். தட்டிலிருந்த பலகாரத்தில் கொஞ்சம் சாப்பிட்டு விட்டு, சூடாக இருந்தகாப்பியை மெல்ல மெல்ல ஊதிக் குடிக்க ஆரம்பித்தாள்.

சூடான காப்பி குடித்ததும் அவள் உடல் முழுதும் ஒரு முறை வியர்த்தது. கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே கட்டிலிலிருந்து இறங்கி காற்றாட ஜன்னலருகில் சற்று நின்றாள்.

பின்புறத் தோட்டத்திலிருந்து வந்த வேப்பமரத்தின் குளுகுளு வென்ற காற்று அவள் முகத்தில் உராய்ந்து சென்றது. ஜன்ன

லுக்கு அப்பால் தெரிந்த இயற்கை வனப்பு அவள் உள்ளத்தைக் கவர்ந்தது.

உருக்கி வார்த்த வெள்ளி போல் தூரத்தில் தெரிந்த குமாரசாமி ஏரியின் தண்ணீர் மாலைச் சூரியனின் கதிர்கள் பட்டுப் பிரகாசித்தது. அதையடுத்து வரிசை வரிசையாக இருந்த மலைத் தொடர்கள் கருநீல வர்ணத்திற்கு உதாரணமாக விளங்கின. மலைத்தொடரையொட்டி பரந்த நீல வானம். அதில் அங்கங்கே அசைந்து ஆடிய படி சென்று கொண்டிருந்தன மெல்லிய வெண் மேகங்கள்.

கண் கொட்டாது அந்தக் காட்சியை வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள் புவனா. அதிலும் அலுப்புத் தட்டி விட்டது. திரும்பி வந்து மீண்டும் படுக்கையில் படுத்தாள். எதிர்ச் சுவரில் இருந்த படம் அவள் பார்வையில் பதிந்தது.

இடது கையைத் தலைக்குக் கொடுத்து சாய்ந்து படுத்துக் கொண்டு வலது கையால் நகம் கொண்டு தாமரை இலையில் துஷ்யந்தனுக்குக் கடிதம் எழுதுகிறாள் சகுந்தலை. அவளுக்கு இருமருங்கிலும் இரண்டு தோழியர். சற்று தூரத்தில் ஒரு மான் புல் மேய்ந்து கொண்டிருக்கிறது.

ஓவிய மணியின் புகழ் பெற்ற அந்தப் படம் புவனாவின் உள்ளத்தில் என்னென்னவோ எண்ண அலைகளை எழுப்பியது. அந்த அலைகளினூடே சேகரனின் உருவமும் ராஜம்மாளின் உருவமும் அடிக்கடி தோன்றி மறைந்தன.

நொடிக்கு நூறுதரம் தன் தாயார் "என் இன்னும் மாப்பிள்ளை வரவில்லை?" என்று கேட்கும் போதெல்லாம் அவளுக்கு என்னவோ போலிருக்கும். "எனக்கெப்படித் தெரியும்? ஒரு சமயம் ஆபீசில் வேலை அதிகமோ என்னவோ? இல்லா விட்டால் 'ரஜா' கிடைக்க தாமதமாகியிருக்கும்" என்று சமாதானம் சொல்லி வந்தாள். தான் சேகரன் வராதது பற்றி அதிகமாகக் கவலைப் பட்டாலும், மேலுக்கு அதைப் பற்றிக் கவலைப் படாதவள் போல் காட்டிக் கொண்டாள். உள்ளூர சேகரன் வராதது அவள் உள்ளத்தை அரித்தெடுத்தது. அதைப் பற்றி நினைக்க நினைக்க அவளுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. அக்குழப்பத்திலிருந்து விடுபட எங்கேயாவது சற்று நேரம் வெளியில் சென்று வர வேண்டும் போலிருந்தது அவளுக்கு. கட்டிலை விட்டு இறங்கினாள். அவள் கால்கள் அவளைக் கீழ்க்கட்டிற்கு இழுத்துச் சென்றன.

(தொடரும்)

★

தமிழிசை நினைவுகள்

அம்பலவாணன்

சென்னைத் தமிழிசை விழா (நான்காவது ஆண்டு) வரவேற்புக் கழகத் தலைவர் திரு. இராவ்பகதூர் டி. எம். சின்னையாப் பிள்ளை வரவேற்க, சென்னை மராமத்து இலாக்கா மந்திரி கனம் பக்தவத்சலம் விழாவை திறந்து வைக்க சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் சார்பில் நான்காவது ஆண்டு தமிழிசை விழா சென்ற 23-12-46ம் தேதியன்று செயின்ட் மேரீஸ் ஹாலில் 'ஜாம் ஜாம்' என்று ஆரம்பமாயிற்று.

திறப்பு விழாவுக்கு முன் தமிழ் இசைச் சங்க மாணவிகள் இருவரும், மாணவர்கள் இருவரும், இனிமையாகப் பாடினார்கள். கனம் பக்தவத்சலம் தமது திறப்புரையில் தமிழிசை இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி, அதன் லக்ஷியம் இவை பற்றியெல்லாம் குறிப்பிட்டு, தமிழ் நாட்டில் நடக்கும் கச்சேரிகளில் பாடகர்கள் பெரும்பான்மையும் தமிழ்ப் பாடல்களே பாடவேண்டிய அவசியம் பற்றியும், அப்படிப் பாடச் சொல்லிக் கேட்க தமிழ் ரசிகர்களுக்குள்ள உரிமை பற்றியும் குறிப்பிட்டு விட்டு தியாகையாவின் கீர்த்தனங்கள் எல்லாம் பக்தியை அஸ்திவாரமாகக் கொண்டு இயற்றப்பெற்ற காரணத்தினுல்தான் அவை நிலைத்து நின்று சங்கீத வட்டாரத்தில் புகழ் பெற்றிருக்கின்றன என்றும் அது போல் தமிழிலும் உயர் தரமான பாடல்கள் இயற்றப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டு நீண்டதோர் சொற்பொழிவு ஆற்றினர். சென்னைக்குப் பொதுவான ஒரு சங்கீத மண்டபம் வேண்டும் என்றும் அவர் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார். அடுத்த படியாகப் பேசிய திவான் பகதூர் சி. எஸ். ரத்தின சபாபதி முதலியார், கனம் பக்தவத்சலம் மனது வைத்தால் சங்கீத மண்டபம் எழுவது ஒன்றும் பிரமாதமல்ல என்றும் அவர் மனது வைத்து மண்டபம் சீக்கிரம் எழும் என்று தாம் நம்புவதாகவும் தெரிவித்துக் கொண்டார். பிற்பாடு அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரி மாணவி திருமதி அம்புஜவல்லி இசை விருந்தளித்தார்.

★

தமிழிசை விழாவின் 2வது நாள் கச்சேரி திரு. எம். எம். தண்டபாணி தேசிகருடையது. கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை பிடிலும், பழனி சுப்பிரமணிய பிள்ளை மிருதங்கமும் பக்க வாத்தியங்கள். அன்றைய கச்சேரியில் தோடி ராக ஆலாபனையும், ஸ்வர ஜாலங்களும் விமரிசையாய் இருந்தன. 'ஒரு தரம் சரவணபவா' என்ற பிள்ளைத் தமிழை கேதாரகௌளம், தன்யாசி, சகானா, சாவேரி ஆகிய ராகங்களில் அமைத்து, வார்த்தைகளைத் தெளிவாக உச்சரித்து, அனுபவித்துப் பாடியது வெகு அருமை. தேசிகரின் கச்சேரியைச் சோபிக்கச் செய்ததில் ராஜமாணிக்கம் பிள்ளைக்கும், பழனி சுப்ரமணிய

பிள்ளைக்கும் தாராளமான பங்கு உண்டு.

★

திருமதி கே. பி. சுந்தராம்பாளின் கச்சேரி மூன்றுவது நாளன்று அமைந்தது. 'தத்வமறியத்தரமா?' என்ற ரீதிகௌளை ராகப் பாடலுடன் கச்சேரி கன ஜோராக ஆரம்பமாயிற்று. சாரீரம் முதலில் கொஞ்சம் லேசாகத் தகராறு செய்ய ஆரம்பித்தாலும் பின்னல் போகப் போக அதையும் சரிக்கட்டிக் கொண்டார். சிம்மேந்திர மத்யமம், பந்துவராளி, தோடி ராகங்களை அழகாகப் பாடி அதன் சொரூபங்களைக் காட்டினார். கல்யாணி ஆலாபனையும் அதில், 'சிதம்பரம்' எனும் கீர்த்தனமும், அதன் சரணத்தில் மோகாந்த காரமதில் மூழ்கி யழுந்தி நாளும் மோசம் போகாதே சொன்னேன் மூட நெஞ்சமே' என்ற அடிகளில் செய்த நிரவலும் அற்புதமாய் இருந்தன. சாகித்யங்களின் அர்த்த புஷ்டியிலும், பாவத்திலும் நல்ல கவனம் செலுத்தி அனுபவித்துப் பாடுவது இவரது கச்சேரிகளில் விசேஷ அம்சம். 'எள்ளத் தனை வந்துறு பசிக்கும்' என்ற பிள்ளைத் தமிழை அந்தந்த இடங்களுக்கு ஏற்ற ராகங்களில் அமைத்து ராகமாலிகையாகப் பாடியது அதற்கு உதாரணமாக இருந்தது.

பிறகு பாடிய எப்படிப் பாடினரோ, 'செந்தமிழ் நாடெனும், ஆடுவோமே, 'தந்தையாய் இருந்தால், சிறைச்சாலை முதலிய துக்கடாக்கள் வழக்கம் போல் நன்றுயிருந்தன. பொது ஜன 'வேண்டுகோளின்படி நந்தனர் பாடல்களில் சிலதையும், பாடி ஐயே மெத்தக் கடினம் என்ற பாட்டில் "நேரமாகுதல்லவோ" என்ற இடத்தை அழுத்திப் பாடி மணி ஒன்பதுக்கு மேலாகி விட்டதை நினைவூட்டினர்.

இக்கச்சேரியில் பிடில் எம். என். கணேசனும், மிருதங்கம் எஸ். வி. எஸ். நாராயணனும், கடம் வில்வாத்திரி அய்யரும், கஞ்சிரா செல்வன் லக்ஷ்மணனும் பாடகிக்கு அனுசரணையாகப் பக்க வாத்தியம் வாசித்தார்கள். தனி ஆவர்த்தனம் நன்றுயிருந்தது. செல்வன் லக்ஷ்மணனின் ரஞ்சகமான கஞ்சிரா வாசிப்பு சபையின் கவனத்தைக் கவர்ந்து இரண்டு மூன்று முறை கரகோஷம் செய்ய வைத்து விட்டது.

★

விழாவின் 4வது நாள் மாலைக் கச்சேரி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையினுடையது. இவர் கச்சேரியில் வைத்தியலிங்கம் பிள்ளையின் கொன்னக் கோல் பிரத்தியேக இடம் பெற்றது. கட்டை சாரீர மென்றாலும் சுதியோடு சேர்ந்து பாடும் போது கேட்க இனிமையாகத்தான் இருக்கிறது. அன்றைய கச்சேரியில் பேகட பல்லவி சிகரமாய் அமைந்தது. சங்கராபரணத்தில் கொன்னக் கோலுடன் சேர்ந்து செய்த ஸ்வர யுத்தம் பலமான கரகோஷம் பெற்றது. பல்லவிக்கு பிறகு பாடிய துக்கடாக்கள் நன்றுயிருந்தன. மாமயிலேறி நீவா, குழலோசை, முந்துத் தமிழ் மாலை துக்கடாக்களில் குறிப்பிடத் தகுந்தவை.

பெங்களூர் கோவிந்தசாமி செட்டி பிடிலும்' தஞ்சை ராமதாஸ் ராவ் மிருதங்கமும். வைத்திய லிங்கம் பிள்ளை கொன்னக் கோலும், வைத்திய நாதன் கடமும் இதமாக வாசித்தார்கள்.

கொன்னக்கோல் வாய்ப் பாட்டையும் கூட சில சமயங்களில் விழுங்கி விடுவதைக் குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது. ஸ்வரம் பாடும் போது மட்டும் கொன்னக் கோலை உபயோகித்துக் கொள்வது பாடகருக்குப் பெரிய உதவியாயிருக்கும்.

★

27ம் தேதியன்று பிற்பகலில் திருமதி சுந்தரி தம்பி இனிமையாகப் பாடினார். பந்துவராளி ஆலாபனையும் அதில் பாடிய நின்னருள் இயம்பலாகுமோ, என்ற கீர்த்தனமும் குறிப்பிடத் தக்கவை.

மாலையில் திருமதி பால சரஸ்வதியின் ஆடலரங்கு. ஜதீஸ்வரம் கல்யாணியில். அதற்கேற்ப அழகாக ஆடினார். தாயே யசோதா என்ற தோடி ராகப் பாடலுக்குப் பிடித்த அபிநயம் பாவ பூரணமாக இருந்தது. உள்ள உணர்ச்சிகளையெல்லாம் தமது முகபாவத்தில் தெள்ளத் தெளியக் காட்டுவது இவர் அபிநயத்தில் சிறப்பான அம்சம். ''தெளிந்து தெளிந்து தெளிந்தாடு பாம்பே' என்ற பாம்பாட்டிச் சித்தர் பாடலுக்குப் பிடித்த அபிநயம், பாம்பு சபையின் முன் வந்து படம் சரித்து ஆடுவது போன்ற பிரமையை உண்டாக்கி, சபையை மகுடியில் கட்டுண்ட நாகம் போல் சொக்க வைத்தது. 'திருவொற்றியூர்த் தியாகராஜ' 'வாசலிது வாசலிது' 'என் பள்ளி கொண்டீரையா' என்ற பாடல்களுக்கு அற்புதமான முகபாவங்கள் காட்டி இடையிடையே இனிமையாகப் பாடி, அபிநயம் பிடித்தார். என் பள்ளி கொண்டீரையா' இவற்றில் தலைமை வகித்தது. 'எத்தனை விதங்கள் தான்' எனற விருத்தத்தை இனிமையாய்ப் பாடி ஆனந்த பைரவியில் 'மதுராநக்ரிலோ' என்ற பதத்திற்கு அழகாக அபிநயம் பிடித்து பிரமாதமாக கரகோஷம் வாங்கினார், ஆடக அரங்கில் பின் பாட்டுப் பாடிய திருமதி ஜெயம்மாவின் உடல் தளர்ந்தும் குரல் தளரவில்லை என்பது அன்றைய அரங்கில் நிரூபணமாயிற்று.

●

கான கலாதர மதுரை மணி அய்யரின் கச்சேரி 'கருணை செய்வாய்' என்ற அம்சத்வனி ராகப் பாடலுடன் ஆரம்பமாயிற்று. காம்போதி அவ்வளவாகச் சோபிக்கவில்லை. பருதாரி தோடி ஆலாபனைகள் அபாரமாய் இருந்தன. லதாங்கி, பைரவி, சித்தரஞ்சனி ராகங்களில் செய்த ஸ்வர ஜால வித்தைகள் மணியின் கற்பனைகளுக்கு நல்ல உதாரணமாய் விளங்கின. 'குண்டு தோருடும் வேலனே' என்ற அடியைப் பல்லவியாகக் கொண்டு தோடியில் செய்த, நிரவலும், தானமும் சுகமாக இருந்தன. கானடா, சாமா, காபி ராகங்களில் விழுந்த கற்பனஸ்வரங்கள் பிரமாதம்! ராஜமாணிக்கம் பிள்ளையின் இங்கிதமான பிடில் வாசிப்பும், வேகமும் விறு விறுப்பும் நிறைந்த இனிமை ததும்ப வாசித்த முருக பூபதியின் மிருதங்கமும் கச்சேரியின் தரத்தை உயர்த்துவதில் போட்டியிட்டன.

பிற்பகலில் நடந்த மூன்று வித்வாம்சனிகளின் கச்சேரி. குறிப்பிடத் தக்கது. திருமதி கோமதி கல்யாண ராமன் பாட்டு, திருமதி கோமள வல்லி சீனிவாசன் பிடில், திருமதி ஹம்ச தமயந்தி மிருதங்கம். கல்யாணி, காம்போதி ஆலாபனைகள் கச்சிதமாய் இருந்தன. துக்கடாக்கள் இவர் கச்சேரியில் பிரதானம் வகித்தன.

30ம் தேதியன்று பிற்பகல் கச்சேரியில் எஸ். வி. பார்த்தசாரதி பாடகர்; டி. பால சுப்பராயலு வயலின்; எஸ். வி. எஸ். நாராயணன் மிருதங்கம். 3–30 மணிக் கச்சேரிகளிலெல்லாம் இவர் கச்சேரி தான் சிகரமாக இருந்தது. தான் சங்கீத உலகில் வெகு வேகமாக முன்னேறி வரும் இளம் வித்வான் என்பதை அன்றைய கச்சேரியில் ஐயந்திரிபுக்கு இடமின்றித் தெரிவித்துக் கொண்டார் இவர். பிலஹரி, கல்யாணி சங்கராபரண ஆலாபனைகள் கன கச்சிதமாய் இருந்தன. 'உனையலால்' 'நீயே மனவகிழ்வொடு' 'சபாபதிக்கு' ஆகிய கீர்த்தனங்களும் விருத்தமும் குறிப்பிடத் தக்கவை.

நல்ல சுகமான சாரீர வசதியைப் பெற்றிருக்கும் இவர் அதை சிறந்த முறையில் உபயோகித்துக் கொள்ளவும் தெரிந்திருக்கிறார். இவர் கச்சேரி சோபிப்பதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

●

காயன கந்தர்வ சங்கீத சாம்ராட் செம்பை வைத்தியநாத பாகவதரின் கச்சேரி, 29ம் தேதி மாலைக் கச்சேரியாய் அமைந்தது. மைக் இல்லாமலேயே சபை முழுதும் கணீரென்று கேட்கும் வெண்கலக் குரல். அந்தக் குரலால் சுதியோடு சேர்ந்து பாடும்போது ஆலாபனத்துக்கும் சரி, கீர்த்தனத்துக்கும் சரி ஒரு புதுக்களை உண்டாகிறது. அன்றைய கச்சேரியில் பந்துவராளியில் பாடிய 'ரகுவர' தோடியில் பாடிய 'சங்கீதானந்த ரசிகே' அம்சாநந்தியில் பாடிய 'பாவன குரு' இம் மூன்றும் குறிப்பிடத் தக்கவை. தோடி ஆலாபனையும் அதில் விழுந்த ஸ்வரங்களும் அருமையாய் இருந்தன. கன ராகம் பைரவி. அதை விஸ்தாரமாக ஆலாபனை செய்து, ஸ்வர ஜாலங்கள் காட்டி, தானமும் பாடினார். சௌடையாவும், முருக பூபதியும் கச்சேரி சோபிக்க வெகுவாக உதவி புரிந்தார்கள். சௌடையா தானம் வாசிக்க ஆரம்பித்துத் தமது கை வரிசைகளைக் காட்டி தாராளமாக 'அப்ளாஸ்' வாங்கினார். தனி ராக ஆலாபனைகள் சில சிறந்து விளங்கின.

முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் மற்றொரு இளம் சங்கீத வித்வான் கே. ஆர். குமாரசாமி 30ம் தேதி பிற்பகலில் பாடினார். தோடியும், சங்கராபரணமும் அனுபவிக்கக் கூடியதாய் இருந்தன.

மாலையில் திருமதி என். சி. வசந்தகோகிலம் பாடினார். கச்சேரியின் ஆரம்பத்தில் சாரீரத்தில் இருந்த கரகரப்பு கரகரப்பிரியா பாடப் பாட மறைந்து விட்டது. வாசஸ்பதி, காம்போதி ராகங்களை ஆலாபனை செய்தார். தோடி ஆலாபனையும், அதில் 'ஆடி அனவரதம் தேடி உன்றன் புகழைக் கோடி கோடியாய் வார்த்தையாடி மகிழ்ந்து' என்ற அடிகளை வைத்துக் கொண்டு அழகாக நிரவல் செய்து, ஸ்வரம் போட்டுப் பாடினது. வெகு ரம்மியமாக இருந்தது. கல்யாணி பல்லவியில் சில புதிய சங்கதிகள் விழுந்ததும், சில நல்ல கற்பனஸ்வரங்களும் அவரது சங்கீத முன்னேற்றத்திற்கு அளவு கோல் போல் இருந்தன. பல்லவிக்குப் பின் பாடிய துக்கடாக்கள் ஒன்று கூட சோபிக்க வில்லை. பக்க வாத்தியங்களின் ஒத்துழைப்பு இவருக்குப் பூரணமாகக் கிடைக்கவில்லை.

46ம் வருஷக் கடைசியாகிய 31ம் தேதியன்று பிற்பகலில் மற்

ஒருரு இளம் சங்கீத வித்வான் திரு. சி. எஸ். கிருஷ்ணன் இனிமையாகப் பாடினார்.

மாலைக் கச்சேரி ஜமாவாக அமைந்தது. ஜி. என். பாலசுப்ரமணியம் பாட்டு; சௌடைய்யா பிடில்; பாலக்காடு மணி மிருதங்கம்; வில்வாத்திரி கடம்.

'தயை புரிய' என்ற மலய மாருதப் பாடலுடன் கச்சேரி கன ஜோராக ஆரம்பமாயிற்று.

தேவ மனோஹரி, பைரவி, ஷண்முகப்பிரியா ராக ஆலாபனைகள் சிறந்து விளங்கின. அபூர்வ ராகங்களில் பெரு வாரியான கீர்த்தனங்கள் பாடப் பட்டதால் கச்சேரிகளை கட்டி, விறு விறுப்பு நிறைந்திருந்தது. கல்யாணியை விஸ்தாரமாகப் பாடி அதன் அநந்த கல்யாண குணங்களையும் காட்டி, ரவைகள் புரளும் தமது குளுமை மிக்க சாரீர வசதியால் பிரமாத ஸ்வர உருட்டல் ஜால வித்தைகள் செய்து கச்சேரிகளுக்குள் முதன்மை ஸ்தானம் பெற்று விட்டார். 'குனித்த புருவம்' என்ற விருத்தத்தை கானடா, தன்யாசி, மோகனம் ஆகிய ராகங்களில் அருமையாகப் பாடி அனுபவிக்கச் செய்தார். அந்த இனிமையில் அவர் இடையிடையே சொற்களை விழுங்கிய துகூட பெரிய குறையாகத் தோன்றவில்லை. பல்லவிக்குப் பிறகு பாடியவைகளில் கண்ணனைக் காண்பதெப்போ, கருணாலய நிதியே, உன்னைச் சரண் அடைந்தேன் முதலிய பாடல்கள் எடுப்பாயும், கனீரென்றும் இருந்தன,

விழாவின் கடைசிக் கச்சேரி திருவாடுதுறை ராஜரத்தினத்தின் நாதசுரக் கச்சேரி ரசிகர்களை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தியது.

முக்கால் மணி நேரத்திற்குமேல் வாசித்த தோடி ஆலாபனையும் அதில் பவழமல்லிகை உதிர்வது போல் உதிர்ந்த ஸ்வரங்களும் அருமையாய், ஆனந்தமாய், அற்புதமாய் இருந்தன.

அடுத்தபடியாக ஹேமாமாலினி (சி. கே. விஜயராகவன் ஐ. சி. எஸ். அவர்களின் புதல்வி) யின் பரத நாட்டியத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்று சொல்வதற்கு உதாரணமாகச் சொல்லலாம் ஹேமாமாலினியை. உருவம் சிறிதாயிருந்தாலும் ஆடும் ஆட்டமும், பிடிக்கும் பிடிகளும், காட்டும் பாவமும் நன்றாயிருக்கின்றன. 'மதுரா நகரிலோ' 'தந்தை தாய் இருந்தால்' 'தாயே யசோதா' 'குழலோசை கேட்குதம்மா' என்ற பாடல்களுக்கு அபிநயம் பிடித்தார். தாயே யசோதாவில் "அம்மம்மா நான் கண்டதில்லை" என்ற இடத்திலும், பாலனென்று வாரியணைத்தேன்,......வாயால் முத்தமிட்டாண்டி என்ற இடத்திலும் காட்டிய அபிநயமும், முக பாவங்களும் மிக நன்றாயிருந்தன.

இடையில் டி. கே. சி. அவர்கள் பரத நாட்டியத்தைப் பற்றி அழகாக இரண்டு வார்த்தைகள் பேசி விஜயநகரம் மகாராணியவர்களைக் கொண்டு ஹேமாமாலினிக்கு மாலையிடச் செய்தார். இரண்டு பெரிய வெள்ளிக் கோப்பைகளை மகாராணியவர்கள் ஹேமாவிற்கும், இனிய குரலில் பின்பாட்டுப் பாடிய பத்மினிக்கும் பரிசளித்தார். நடனமாடினார் என்ற பாடலுக்கு ஆடிய ஹேமாவின் ஆடலுடன் நான்காவது ஆண்டு தமிழ் இசை விழா இனிது நிறைவேறியது.

197250

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ. 5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ. 2,54,72,000
டிபாசிட்டுகள் 31-12-1944ல் இருந்தபடி	...	ரூ. 94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்) — நூர்முகமத் M. சினாய்
ஹரிதாஸ் மாதவதாஸ் — பாபுஜி தாதாபாய் லாம்
ஆர்டிஷ B. துபாஷ் — தரம்ஷே முல்ராஜ் கட்டாவ்
டின்ஷா D. ரோமர் — ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள் :- மெஸ்ர்ஸ், பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிலை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக் கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணுகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

உயர்தரமான:-

- **சட்டைத் துணிகள்,**
- **கோட்டுத் துணிகள்,**
- **படுக்கை விரிப்புகள்,**
- **ஸ்நானத் துண்டுகள்**

முதலியன

நூதன முறையில் கைத்தறியில்

உற்பத்தி செய்பவர்கள்.

TRINITY WEAVING ESTABLISHMENT Ltd.,

CANNANORE : : NORTH MALABAR.

இலக்கிய வானில் ஒரு புத்தொளி!

அமுதம்

(மாதம் ஒரு புத்தகம்)

பதிப்பாசிரியர்: கே. சி. எஸ். அருணாசலம்

நிர்வாகி: பி. கே. கிருஷ்ணசாமி

விவரங்களுக்கு

அமுதம் காரியாலயம்

திருச்சிரோடு :: கோயமுத்தூர்.

Telegrams :- "UMAYAL". Telephone :- 56 A.

UMAYAL WEAVING ESTT., LTD.,

Cannanore, N. Malabar.

Manufacturers of:- BEST "UMAYAL" HANDLOOM FABRICS.

BEDSPREADS
TABLE LINEN
FURNISHING FABRICS AND CURTAIN CLOTHS
DRESS MATERIALS FOR LADIES AND GENTS IN UP-TO-DATE DESIGNS AND CHARMING COLOURS
TURKISH TOWELS
BATH GLOVES
BATH MATS
MUFFLERS ETC.

ENQUIRIES EARNESTLY SOLICITED.

ENCOURAGE HANDLOOM INDUSTRY.

"UMAYAL" FABRICS
AN ASSET TO EVERY HOME
EVERYTHING MADE TO ORDERS
POPULAR FABRICS
THROUGHOUT INDIA AND CEYLON.

Distributors for Mysore State :-
SRI UMAYAL STORES,
363, Avenue Road,
BANGALORE CITY.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's, Underwear, Sport Shirts etc.,

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP" Coimbatore.

ஆடை அணிவகுப்பில் இப்பொழுது அதிகம் அடிபடுவது

காலத்துக்கு தகுந்த பாஷனாக எல்லா நெம்பர் நூல், நிறம், பாட்டர்ன், அதிக நேர்த்தியாய் நெசவு செய்த துணிகள் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தாரால் மதரூஸ் மாகாணம் பூராவும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஜாஸ்தி சக்தியால் ஓட்டப்படும் யந்திரங்களைக் கொண்டு, பெருவாரியாக உண்டாக்கும் மில் துணிகளைவிட, கைத்றி சரக்குகளுக்கு பலம் நீடித்த உழைப்பு அழகு நேர்த்தி, உபயோகம் மென்மை மிகவும் அதிகம்.

மதரூஸ் கூட்டுறவு கைத்துணிகள், சங்கத்தின், மதரூஸ் மற்ற ஊர்களிலிருந்து நேராக குறிப்பிட்ட கரூர் விலையில் விற்பனை செய்யப்படுவதால், நடுவிலிருக்கும் வியாபாரிகளின் லாபத்தை அகற்ற சாத்தியமாகிறது. ஆகவே, எங்களிடம் சாமான்கள் வாங்குவதால், உங்கள் பணம் மீதமடையும், கஷ்டமுமில்லை

வேஷ்டிகள், புட்வைகள், சட்டைகள், டவல்கள், பிரின்ட்ஸ், சிங்கம்ஸ், சின்ட்ஸ், வீடு அலங்கரிக்கத் துணிகள், மேஜைத் துணிகள், படுக்கை விரிப்புகள், கைக்குட்டைகள், லுங்கிகள், அங்கவஸ்திரங்கள், கொசுவலைகள், க்வில்ட்ஸ், தலையணிகள்.

மதராஸ் கோவாபரேடிவ்
கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரோவின்ஷியல் கோவாபரேடிவ் ஸொஸைடி லிட்., 6-A உட்ஸ் ரோடு, மௌண்ட் ரோடு, மதராஸ்.

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

நார்த் பீச் ரோடு : : மதராஸ்

சென்னை ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட்	திருவல்லிக்கேணி
மயிலாப்பூர்	தியாகராயநகர்
புரசவாக்கம்	மவுண்டுரோடு
எக்மோர்	

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 69,96,600
செலுத்தப்பட்ட ,,	,, 50,79,613
ரிஸர்வ் நிதி	,, 56,87,200

டிபாஸிட்டுகள் ரூ. 17 கோடிக்கு அதிகம்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

IBN 101

வசந்தம் சந்தா

வருஷ சந்தா	ரூ.	6—0—0
ஆறுமாத சந்தா	ரூ.	3—0—0
தனிப்பிரதி	ரூ.	0—8—0

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

மானேஜர்:—

வசந்தம் காரியாலயம்,
திருச்சிரோட், கோயமுத்தூர்.

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்லீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

★

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam